1595

திங்கள்

புரட்டாசி · அணு - 8.

1595/3.56
20 SEP 1956
208591



செப்டம்பர் 14உ முதல் தமிழ்நாடெங்கும்

Rights Controlled By : கெயிட்டி பிக்சர்ஸ் சர்க்யூட், மதருஸ் - 2.

விநியோகஸ்தர்கள் : சென்னை நகரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு & செங்கல்பட்டு M/S. கெயிட்டி பிக்சர்ஸ் சர்க்யூட், த. பெ. நெ. 2437, சென்னை–2. திருச்சி & தஞ்சாவூர். — M/S. திருச்சி பிக்சர்ஸ் திருச்சி. மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலி — M/S. எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை. கோயமுத்தூர் — M/S. கரூர் ஜெய்ஹிந்த் பிக்சர்ஸ், கோயமுத்தூர். சேலம் — M/S. தங்கம் பிக்சர்ஸ், சேலம். மலபார் — M/S. அஸோஸியேடட் பிக்சர்ஸ், எர்ணகுளம்.

1595
3-56

போன் : 63 தந்தி : SIMCO

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்கள் டிப்போக்களில் செலவாகி விடுகின்றன.

சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க்; சிம்கோ ஊலட் மார்க்; சிம்கோ சைக்கிள் மார்க்; மைனர் சைஸ் சீனு லேடி மார்க்; சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள் கடற்கரை, குளிர் பிரதேசங்கள், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தவை.

சிம்கோ, சிவகாசி.

திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு ஒரு வருஷம்	ரூ.	6
,, அரை வருஷம்	ரூ.	3
வெளிநாடு ஒரு வருஷம்	ரூ.	8
தனிப்பிரதி விலை	அணா	8

விளம்பர விகிதம்

சாதாரண முழுப்பக்கம்	ரூ.	100
,, அரைப்பக்கம்	ரூ.	50
,, கால்பக்கம்	ரூ.	30
கடைசி அட்டை (மூவர்ணம்)	ரூ.	300
உள் அட்டை	ரூ.	150
முகப்புப் பக்கம்	ரூ.	150

கட்டுரையாளர்களுக்கு

'திங்கள்' பத்திரிகையில் பிரசுரம் செய்ய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நவீன முறையில் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்யத்துவம் அளிக்கப்படும். பழைய விஷயங்களானாலும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும். எல்லாவித ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் நமது பத்திரிகையில் இடம் உண்டு. சொந்த அனுபவங்களைப்பற்றி எழுதலாம். அதிசய சம்பவங்களைப்பற்றியும் கூறலாம். பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

போட்டோ நிபுணர்களுக்கு

நீங்கள் எடுக்கும் போட்டோக்களை எங்கள் பார்வைக்கு அனுப்புங்கள். தனிப்பட்ட போட்டோக்கள் பத்திரிகையில் இடம்பெறாது. படக்கட்டுரைகளுக்கு ஏற்றதான தொடர் போட்டோக்கள் மட்டுமே எங்களுக்குத் தேவை. போட்டோக்களை அனுப்பும்போது அவற்றின் விளக்க உரைகளையும் அனுப்பி வைக்கவேண்டும்.

கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ் சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்கமுடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம் :

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

திங்கள்

செப்டெம்பர் 1956

ஆண்டு 1 ★ துன்முகி—புரட்டாசி ★ மாதம் - 9

இம்மாதம்

சர்வோதயம்	...	8
வருங்கால இலக்கியம்	...	10
பர்மாவில் தமிழர்கள்	...	12
அயல் நாடுகளில் குழந்தைகள் க்ஷேம நலன்	...	14
தென்னுப்பிரிக்கா	...	17
பாரதி என்ற பருவமேகம்	...	28
அம்பர் சர்க்கா	...	30
நீதிபதி எர்ல்வாரன்	...	31
நவராத்திரி - கலைத்திருநாள்	...	33
நிலவொளியின் கெடுதல்	...	38
ஈனுக்கறவை மாடு	...	40
தமிழ் கண்ட மதங்கள்	...	44
செக்கு	...	46
புத்தகங்கள்	...	59
சென்னை நகரில் குடிதண்ணீர் விநியோகம்	...	61
நாடுகளிடையே தூது	...	69
விந்தை புரியும் விழிகள்	...	72
காதல் வாழ்வில் பறவைகள்	...	75
சாக்பீஸ் உற்பத்தி	...	82
காவியம்	...	84
கற்பக விருக்ஷம்	...	87
புதனும் வெள்ளியும்	...	89
உலகம் தந்த பரிசு	...	92
நவீன ரஸவாத வித்தை	...	100
ஒன்பதின் மகத்துவம்	...	103
கணபதி கட்டுரைகள்	...	105

படக் கட்டுரைகள் : திரு இடைச்சுரம்;
கோட்டை மியூசியம்,

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

திங்கள்

வணக்கம்

வழக்கம் போல பல அருமையான கட்டுரைகளைக் கொண்டு உங்கள் கையில் இருக்கிறது புரட்டாசி இதழ்.

மகாத்மா காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அவருக்கு மிக பிடித்தமான 'சர்வோதயம்' குறித்து ஜெயப்பிரகாஷ் எழுதிய கட்டுரை பிரசுரமாயிருக்கிறது. அயல் நாடுகளில் குழந்தைகள் க்ஷேம நலன் பற்றிய இந்திரா காந்தி கட்டுரையை சமூக சேவையில் ஈடுபட்டவர்கள் ஊன்றிப் படிக்கவேண்டியதாகும்.

ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகளின் 'வருங்கால இலக்கியமும்' நா. பாரத்தசாரதியின் 'காவியமும்' இலக்கியம் சம்பந்தபட்ட சிறந்த கட்டுரை பொக்கிஷங்களாகும்.

சென்னை நகர குடிதண்ணீர் விநியோகம் குறித்து அத்துறையில் நிபுணரான டாக்டர் எஸ். வி. கணபதி எழுதியிருக்கிறார். அவசியம் தெரிந்துக் கொள்ள வேண்டிய விஷயமாகும் இது.

திங்களில் கடைசி சில பக்கங்களில் புஸ்தகப்பிரிவு என்று ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் சில காலமாகவே இருந்து வருகிறது. ,எதையும் செய்யுமுன் விநாயகரை வழிபடவேண்டுமல்லவா? அதை உத்தேசித்து கணபதி சம்பந்தமாக கிடைத்த சிறந்த கட்டுரைகளைத் தொகுத்து 'கணபதி கட்டுரைகள்' என்ற புஸ்தகப்பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நவராத்ரி - கலைத்திருநாள் என்ற கட்டுரை வரப்போகும் தசராவை யொட்டி வெளியிடப்பட்டிருக்கிறது. சென்னைக்கருகிலுள்ள க்ஷேத்திர வரிசையில் திருநீர்மலை சென்ற இதழில் வெளியானது நினைவிருக்கும். இந்த இதழில் திரு இடைச் சுரம் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு அம்சத்தில் சிறந்து விளங்குகிறது. கோட்டை மியூஸியம் படங்களை எடுக்க அதன் சூப்பரெண்டெண்ட் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணஸ்வாமியை அனுமதி கோரியபோது ''வருங்காலத்தை உருவாக்கப்போகும் இளைஞர்கள் நீங்கள். உங்களுக்கு இல்லாத அனுமதியா'' என்றார் இம்மாதிரி மனப்பான்மை எல்லா அதிகாரிகளிடமுமே காணப்பட்டால் திங்களில் அருமையான படக்கட்டுரைகள் அதிகம் பிரசுரிக்க மிக உதவியாக இருக்கும்.

திங்களுக்குத் திங்கள்

சென்ற திங்களில் திடுக்கிடும் படியான பல கோர விபத்துகள் ஏற்பட்டன. செகந்திராபாத்--துரோணுசலம் ரயில் பாதையில் ஏற்பட்ட கோர ரயில் விபத்தில் சுமார் 115 பேர் மாண்டனர். ஏராளமான பேர் காயமடைந்தனர்.

ஹைதராபாதுக்கும் இந்த செப்டெம்பர் மாதத்திற்கும் ஆகாது போலிருக்கிறது. 1954-ம் வருஷத்தில் செப்டெம்பர் 28 தேதி யன்று காசிப் பேட்டை எக்ஸ்பிரஸ் விபத்திற்குள்ளாகி சுமார் 150 பேர் மாண்டனர். 1908-ல் மூஸி நதி வெள்ளம் கூட செப்டெம்பர் மாதம் தான் ஏற்பட்டு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியதாம்.

இப்போது ரயில் விபத்துக்கு காரணமாக இருந்த பாலம் 1923-ல் கட்டப்பட்டது. சென்ற ஆகஸ்டில் இதில் ரிப்பேர் ஏற்பட்ட தென்றும் அதை செய்த போது ரயில் போக்கு வரத்து 24 மணி நேரம் தாமதப்பட்ட தென்றும் தெரிகிறது. இந்த விபத்து பற்றி நடைபெறவிருக்கும் விசாரணையில் தவறு எங்கு என்பது அம்பலமாகி விடும்.

சென்னையில் ஒரு பெரிய ஆல மரம் ஓடும் பஸ் மீது விழுந்து இருவர் உயிர் மாண்டிருக்கின்றனர். மரங்கள் ஆபத்தான நிலைமையில் இருக்கின்றனவா என்பதை அடிக்கடி கவனித்து இத்தகைய விபத்துகள் ஏற்படாமல் தடுக்கவேண்டியது சென்னை கார்ப்பரேஷனின் கடமையாகும்.

பாரதப் பிரதமர் பண்டிட் நேரு கட்சில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது ஜீப் கவிழ்ந்து தெய்வாதீனமாக சொற்ப காயங்களுடன் தப்பினார்.

* * *

அடுத்த படியான மிகமுக்ய மான செய்தி பம்பாய் முதல் மந்திரி மொரார்ஜி தேசாயின் உண்ணுவிரதமாகும். இவர் உண்ணுவிரதம் இருந்ததை பற்றி பலர் பல விதமாக அபிப்பிராயம் கூறுகிருர்கள். அவர் உண்ணுவிரதம் இருந்தது பிடிவாதக்காரர்களை திருத்தவேண்டும் என்ற நோக்கத்துடன்



பம்பாய் முதல் மந்திரி மொரார்ஜி

அல்ல. பெருவாரியாக உள்ள யோக்கியர்கள் பயங்கொள்ளியாக போய்விட்ட நிலைமையை மாற்றவே அவர் இதை மேற்கொண்டார். இந்த உண்ணுவிரதத்திற்குப்பின் ஆமதாபாத்தில் அமைதி ஏற்பட்டிருக்கிறது. குஜராத்தியரும், மகாராஷ்டிரர்களும் இனி மனமொத்து ஒற்றுமைப் படலாம் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

* * *

கைத்தறிகளை இயந்திரத் தறிகளாக மாற்றிவிட வேண்டும் என்று இந்திய சர்க்கார் ஒரு திட்டம் தயாரித்துள்ளனர். இதனுல் கைத்தறி நெசவாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் கிளர்ச்சியின் மூலம் நியாயத்தைப் பெறவேண்டும் என்றும் ராஜாஜி யோசனை கூறியிருக்கிருர்.

கைத்தறிகளை மின்சாரத்தறிகளாக மாற்றுவது என்ற யோசனையை ஆதரிக்க முடியாது என்ற கருத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு தெரிவிப்பதென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பவானியில் கூடி முடிவு செய்திருக்கிறது. இத் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வரமுடியாது என்று ஆந்திர சர்க்கார் மறுத்து விட்டனர்.

* * *

சூயஸ் நெருக்கடி பற்றி லண்டனில் மகாநாடு கூடி கலைந்துவிட்டது. அமெரிக்கா ஒரு திட்டத்தையும் இந்தியா ஒரு திட்டத்தையும் சமர்பித்தன. கால்வாய் நிர்வாகத்தை ஒரு சர்வதேச போர்டிடம் ஒப்படைப்பதுதான் அமெரிக்காவின் திட்டம். இதை 17 நாடுகள் ஆதரித்தன. ஸ்பெயின் நிபந்தனையுடன் ஆதரித்தது.

இந்தியாவின் திட்டம் கால்வாயை எகிப்திய கார்ப்பரேஷனே நடத்தலாம். அதே சமயத்தில் போக்குவரத்து நிலைமை ஒழுங்காக இருப்பதற்காக கால்வாயை உபயோகிக்கும் நாடுகளின் ஆலோசனை சபையை அமைக்க வேண்டும் என்றும் இந்த யோசனை கூறுகிறது. இந்தியாவை நான்கு நாடுகள் ஆதரித்தன.

அமெரிக்க திட்டத்தை ஏற்ற 17 நாடுகளின் சார்பில் ஐந்து தேச பிரதிநிதிகளைக் கொண்ட கோஷ்டி ஒன்று நாஸிரை சந்தித்து பேசியது. ஆனுல் மென்ஸிஸ் தூது வெற்றியடையவில்லை. இந்தியாவின் உதவியை நாட யுனைடெட் ஸ்டேட்ஸ் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. விஷயம் ஐ.நா. விற்கு செல்லலாம் எனத் தெரிகிறது. பண்டிதநேரு ஸாவூதி அரேபியாவுக்கு வரும்போது அவரை நாஸிர் சந்தித்துப்பேசவிருக்கிருர். இதற்கிடையில் உலக நாடுகள் மகாநாடு ஒன்றை கூட்டும் யோசனையை நாஸிரே அறிவித்திருக்கிருர்.

* * *

இந்திய சர்க்காரின் நிதி மந்திரியாக ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பதவி ஏற்றிருக்கிருர். இதற்கு முன் இப்பதவியை வகித்தவர்களான ஷண்முகம் செட்டியார், ஜான் மத்தாய், தேஷ்முக் இம்மூவரும் ராஜிநாமா செய்யவே நேர்ந்திருக்கிறது. அம்மாதிரி எதுவும் ஏற்படாமல் டி. டி. கே. சிறந்த முறையில் இந்தப் பதவியில் பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



சத்திய தரிசனம்

"நான் சத்தியத்தைத் தேடிக்கொண்டிருப்பவன். அதற்கொரு வழி கண்டு பிடித்து விட்டேன். சத்தியத்தை காண ஓயாது முயற்சி செய்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அதை நான் இன்னும் காணவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

சத்தியத்தை பரிபூர்ணமாக தரிசிக்க விரும்பும் ஒருவன் தன்னைத் தானே அறிந்துக் கொள்ள வேண்டும். தனது முடிவான லட்சியம் என்ன என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். அதாவது குறை எதுமில்லாத பரிபூர்ண நிலையை அடையவேண்டும்.

என்னிடம் பல குறைகள் இருக்கின்றன என்பதை நான் உணருகிறேன். இதுவே என் பலம், ஏனென்றால் ஒரு மனிதன் தன் குறைகளை தானே உணர்வது மிக அபூர்வம்."

— காந்திஜி

சர்வோதயம்

ஜெயபிரகாஷ் நாராயண்

உலக மக்கள் முன்பு காந்திஜி ஒரு மாபெரும் லட்சியத்தை வைத்துச் சென்றிருக்கிறார். இந்த லட்சியத்தை 'சர்வோதயம்' என்று அவர் அழைத்தார்.

சர்வோதயம் என்ற சொல் ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவத்தை தனி மனிதனின் வாழ்க்கையிலும் சமுதாயப் பொது வாழ்க்கையிலும் ஒரு புதிய அமைப்பை, புதியதோர் பண்பாட்டை குறிக்கின்றது.

இன்று காந்திஜி உயிரோடு இருந்திருப்பாரானால் அவர் தம் கனவுகளை நினைவாக்கும் இந்த சர்வோதய சமுதாயத்தை உருவாக்கும் திருப்பணியில்தான் ஈடுபட்டிருப்பார் என்று நிச்சயமாகச் சொல்வேன்.

எந்த மார்க்கத்தை அவர் கடைபிடித்திருப்பார் என்பது பற்றி சிலருக்கு ஐயம் இருந்தாலும் அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு அவர் இந்த வேலையைச் செய்ய விழைந்திருக்கமாட்டார் என்பதில் யாருக்கும் சந்தேகம் எழ முடியாது.

சுயராஜ்யப் போராட்டத்தின் தலைவனாக இருந்து நாட்டை அந்நிய ஆட்சிப் பிடியிலிருந்து விடுவித்த காந்தி மகானை சுயராஜ்யப் போர் முடிந்து தலைநகரில் பதவியேற்றவர்களுக்கிடையில் நாம் காணவில்லை. அவர் விரும்பியிருந்தால் எந்தப் பதவியையும் அடைந்திருக்கலாம். யாரும் மறுத்திருக்க மாட்டார்கள். ஆனால் ஜனாதிபதியாகவோ பிரதம மந்திரியாகவோ காந்திஜி பதவி ஏற்கவில்லை.

இதிலிருந்து, தான் நிர்மாணிக்க விரும்பிய சர்வோதய சமுதாயத்தை அரசாங்க அதிகாரத்தின் மூலமாக அமைக்க அவர் விரும்பவில்லை, அரசாங்க அதிகாரத்தின் மூலம் அது சாத்யமல்ல என்பதை காந்திஜி உணர்ந்திருந்தார் என்பது தெரிகிறது.

உலக சரித்திரத்தின் ஏடுகளில் நாட்டின் விடுதலைக்கு வழி வகுத்த தலைவன் நாடு சுதந்திரம் பெற்ற பின் அர

ஜெயபிரகாஷ் நாராயண்

சாங்க பீடத்தில் அமர விரும் பாததை காந்திஜியின் செய்கை யில்தான் நாம் காண்கிறோம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து சுதந்திரப் போராட்டம் நடத்திய போது ஜார்ஜ் வாஷிங்டன் தளபதியாக இருந்தார். போராட்டம் வெற்றிகரமாக முடிந்தது. சுதந்திர அரசாங்கம் உருவான போது வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியானார்.

ரஷ்யாவில் புரட்சித் தலைவர் லெனின் முடியாட்சி ஒழிந்து மக்களாட்சி தோன்றிய போது பிரதம மந்திரி பதவி ஏற்றார். வாஷிங்டன், லெனின் போன்றவர்களின் செயலோடு ஒப்பிட்டுப் பார்த்து காந்திஜி அவ்வாறு அரசாங்க பதவி ஏற்காதது காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

சுதந்திரம் வந்துவிட்ட பின் எல்லாத் துறைகளிலும் உள்ள குறைபாடுகளை களைந்து வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் சுரண்டல் ஏற்றத் தாழ்வுகள் இவற்றுக்கு முடிவு காண வேண்டியது சர்க்காரின் வேலைதானே. நாம் என்ன செய்ய முடியும் என்ற எண்ணம் நம்மிடையே அதிகரித்து வருகிறது. நாமாக சாதித்துக் கொள்ளக்கூடிய தேவைகளுக்குக்கூட அரசாங்கத்தை எதிர் நோக்கும் கேவலமான நிலைக்கு நாம் வந்துவிட்டோம்.

காந்திஜி நாம் செய்யும் இத் தவறைத்தான் நமக்கு சுட்டிக் காட்டியுள்ளார். மக்களுக்கு உண்மையில் உதவி அளிக்கக் கூடியது அரசாங்கமல்ல. மக்கள் தாங்களாகவே தங்கள் சுய முயற்சியிலே நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. மக்கள் மோசமானவர்களாக இருந்தால் அரசாங்கமும் மோசமாகவே இருக்கும். ஆகவே மக்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்ந்தவர்களாக நடந்துக் கொண்டால் சமுதாய சூழ்நிலையில் ஒரு நல்ல மாறுதல் ஏற்பட வழியாகும் என்று காந்திஜி கூறினார்.

நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் சுதந்திரமும் சமத்துவமும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளும் கிட்டி அனைவரும் நலன் எய்தி இன்புறுவதுதான் சர்வோதயம். ★

எல்லாம் செய்வோம்...ஆனால்...?

"வலுத்துக் கொழுத்த சரீரமுடையவன், இளைத்த ஏழையின் தோள்மீது ஏறி உட்கார்ந்து கொண்டுவிட்டான். படித்தவர்களும் பணக்காரர்களுமாகிய நாம் சமூகத்தில் பெற்றிருக்கும் நிலைமை இதுதான். ஏழைகளுக்கு இரங்குகிறோம். அதிக வருத்தம்கூட தெரிவிக்கிறோம். கால்கள் துவண்டு அவன் விழுந்துவிடாமல் இருப்பதற்கு போதுமான சோறும் போடுகிறோம். இயற்கையின் அழகையும் அவனுக்கு வர்ணிக்கிறோம். அவனுக்கு வண்டி வண்டியாக புத்திமதிகளையும் சொல்லுகிறோம். ஆம்! அவனுக்காக எதைவேண்டுமானாலும் செய்வோம் ஆனால் அவன் தோளை விட்டு மட்டும் இறங்கமாட்டோம்."

—டால்ஸ்டாய்.

வருங்கால இலக்கியம்

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்

கவிதைக்கலையில் பழமையான மரபுகளையும் கைவிடக் கூடாது. புதுமையின் அழகுகளையும் விட்டு விடக்கூடாது. அதுபோலவே இலக்கியம் வாழ்க்கையுடன் கலந்து இருக்க வேண்டும். ஆனால் வாழ்க்கையின் புகைப்படமாகவே நின்று விடாமல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். இத்தகைய இலக்கியந்தான் பல தலைமுறைகளுக்கு இன்பமளித்து அழிவற்றிருக்கும் சிறந்த புது இலக்கிய வரம்புகளை அழிக்காது. ஆனால் அந்த வரம்புகளுக்குள்ளேயே அடங்கி விடாது. பழமையான கட்டுப்பாடுகளும் புதுமை மிளிரும் கற்பனைகளும் இணங்கி ஒன்றுபட்ட நிலை தான் வெகு அழகு. அப்படியே பொருளழகும் சொல்லழகும் ஒன்று பட்ட நிலையிருக்கவேண்டும். உணர்ச்சியும் ஓசையும் பின்னிக் கொண்டிருக்க வேண்டும். அப்படியே உவமை உருவகம் முதலிய அணிகள் அணிகலன்களாகவும் அழகிய நடை விளங்கும் செய்யுளை அடையாகவும் கொண்டு கவிதை வனிதை விளங்கவேண்டும். அம்மாதிரியாகவே அகவுலகம் புறவுலகம் இரண்டிலும் அவள் சஞ்சரிக்க வேண்டும். மக்களுடைய பொதுப் பண்பும் கவியும் தனிப் பண்பும் கலந்து ஒளி வீச வேண்டும்.

மேற்குநாடுகளின் இலக்கியக் கலைக்கும் நம்முடைய நாட்டு இலக்கியக்கலைக்கும் ஒரு அடிப்படையான வேற்றுமை உண்டு அந்த நாடுகளில் இயற்கையை இருப்பது போலவே சித்தரிப்பது வழக்கம். மனிதர்களுடைய உணர்ச்சிகளைக் கூறினாலும் இயற்கை வர்ணனையில் தான் முக்கிய லக்ஷ்யம். இயற்கை உயிர் இரண்டும் தத்துவங்களையும் கடந்து அவைகளுக்குள் ஊடுருவி நின்றும் தாங்கியும் கடந்தும் உள்ள பரம்பொருளை விரும்பித் தேடிடும் உணர்ச்சியே நம்முடைய இலக்கியக் கலையிலே நாம் காண்கிறோம்.

நிருத்தனே நிமலா நீத்தனே
நெற்றிக்கண்ணனே
விண்ணுளோர் பிரானே
யொருத்தனே யுன்னையோல
மிட்ட லறி
யுலக மேலாந்தேடியுங்காணென்

(திருவாசகம்)

இயற்கையழகையே வர்ணிக்கும் பொழுது கூட மனிதனுடைய இன்ப துன்ப உணர்ச்சிகளை அந்த வர்ணனையில் கலப்பதும் ஒரு பண்பு. இராவணன் சீதையை அபகரித்து புஷ்பக விமானத்தில் எடுத்துச் சென்ற பொழுது விலங்குகளும் பறவைகளும் விமானம் பறந்து சென்ற தென்திசையை அழுத கண்களுடன் நோக்கி நின்றதாக வால்மீகி கூறுகின்றார். சகுந்தலை கணவனுடைய அரண்மனைக்கு புறப்பட்ட பொழுது குயிலும் மான் குட்டியும் செடிகளும் உணர்ச்சிப் பெருக்கால் துடித்ததாக காளிதாசர் கூறுகின்றார்.

இலக்கியக் கலையை பாரத நாட்டில், அதிலும் முக்கியமாக தமிழ்நாட்டில், வளர்த்த மாதிரி

உலகத்தில் வேறு எவ்விடத்திலும் கவிகளும் மக்களும் அதை வளர்க்கவில்லை. மூவேந்தர்களுடைய நாடுகளில் சமஸ்தானக் கவிகள் அரசர்களிடத்திலும் மக்களிடத்திலும் மிகுந்த ஆதரவைப்பெற்றார்கள். எல்லா அறிவு நூல்கள் கூட காவிய முறையில் ஏற்பட்டு மக்களுடைய மனங்களைக் கவர்ந்தன. புலமையும் கவித்திறமையும் கலந்த பல நூல்கள் ஓய்வின்றி இயற்றப்பட்டன. ஆனால் அவைகளை போகிற போக்கில் பொருள் விளங்கக்கூடிய அழகிய எளிய நடையில் ஏற்படவில்லை. அப்போழுது இலக்கியக்கலை நடைமுறையிலில்லாத பொருள் எளிதில் விளங்காத பல பழைய சொற்களுடன் கூடியிருந்தது. இந்த முறை தற்கால மக்களுக்கு இன்பத்தைக் கொடுக்காது. எளிதிலும் விளங்கவேண்டும். சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பியிருக்க வேண்டும். மேனாட்டுக் கவிதைக்கலையில் தற்காலத்தில் இந்தச் சிறப்பு மிளிருகின்றது. வெகு பகுதிகளில் அவைகளில் முக்கியமாக அரசியல் பொருளாதாரத் துறைகளில் மக்களுடைய மனம் இழுக்கப்படும் இக்காலத்தில் எளிய நடையும் அழகிய நடையும் கலந்த செய்யுட்கள் தான் மக்களால் விரும்பப்படும். மக்களுக்கு இன்பத்தையும் நலனையும் அளிக்கும்.

வருங்காலத்தில் இலக்கியம் இலக்கியத்திற்காகவே என்று சுயசௌந்தர்யத்தையும் சுய நலத்தையும் கருதிக்கொண்டு தற்புகழ்ச்சியாக வாழமுடியாது. இலக்கியம் மனிதனுக்காக, இலக்கியம் கடவுளுக்காக, என்ற கொள்கைகளை இலக்கியம் இனிமிக உறுதியாகக்கடைபிடிக்கவேண்டும். அது மக்கள் கூட்டுறவை நாடி அவர்களுடைய இன்ப துன்பங்கள் விருப்பங்கள் குறிக்கோள்களை அறிந்து அவைகளை சித்தரிக்க வேண்டும். வடமொழி இலக்கியங்களில் மிக உயர்ந்த வால்மீகிராமாயணம், மஹாபாரதம், காளிதாச காவியங்களை கவனித்தாலும் தமிழ் இலக்கியங்களில் மிக உயர்ந்த சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பாரதி கவிதைகளை கவனித்தாலும் இந்த தத்துவம் நன்கு விளங்குகின்றது. ★

தமிழின் அருமை

"நம்மை பெற்றதும் தமிழ்; தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ்; தாய் தந்தை குரு நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ். நம்வீட்டு மொழியும் தமிழ். நாட்டு மொழியும் தமிழ்.

அகத்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியில் வளர்ந்து, ஆந்திரம் முதலிய மொழிகளின் தோழமை பெற்று, சங்கப்புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து வித்வான்களுடைய வாக்கிலே விளையாடி தென்நாடு முழுதும் ஏகசக்ராதிபத்யம் செலுத்தி வந்தது தமிழ்.

—வேதநாயகம் பிள்ளை.

இத்தகைய தமிழ் சீக்கிரமே ஆட்சி மொழியாகப் போகிறது என்று சென்னை கவர்னர் கூறியிருக்கிறார் மக்கள் மன்றத்தில்.

தமிழர் தலைவர் ம.பொ.சிவஞானம் சமீபத்தில் பர்மா சென்று விட்டு திரும்பினார். அவர் சென்னை திரும்பியபின் சென்னை கடற்கரையில் செய்த பிரசங்கத்தை கேட்டு தொகுத்த கட்டுரையாகும் இது.

பர்மாவில் தமிழர்கள்

ம. பொ. சிவஞானம்

பிஜித் தீவின் "கரும்பு தோட்டத்திலே—எங்கள் பெண்கள் அழுத குரல் கேட்டிருப்பாய் காற்றே" என்று கதறி அழுது கண்ணீர் வடித்துப் பாடினான் கவிஞன் பாரதி. அந்த நிலைக்கு குறைந்ததல்ல பர்மிய நாட்டுப்புறங்களிலும் காட்டுப்பகுதிகளிலும் வாழும் ஏழைத் தமிழர்கள் நிலை. பர்மிய நகரங்களில் வாழும் தமிழர்களைப் பொறுத்த வரை அழுவதற்கே பெண்கள் இல்லை. மனைவியர்கள் தாயகத்தில்; அவர்களுடைய மணாளர்கள் பர்மிய நாட்டில்...!

கடந்த பதினைந்து ஆண்டுகளில் பர்மா வாழ் தமிழர்கள் அடைந்துள்ள இன்னல்கள் சரித்திரம் காணாதவை.

தமிழர்கள் வாழ இடம் கொடுத்த நாட்டாருக்கு துரோகம் செய்யத் தெரியாதவர்கள். வாழ்வு தந்த மக்களை காட்டிக் கொடுக்க நினையாதவர்கள். அதனால்தான் அந்நியன் படையெடுத்த போது வாழ வந்த இடம்தானே என்று அத்தனை பேரும் பர்மாவிலிருந்து வெளியேறி விடாமல் நான்கு லட்சம் பேர் அங்கேயே தங்கி பர்மியர்களின் துன்பங்களில் பங்கு கொண்டார்கள்.

பர்மாவில் இந்திய எதிர்ப்பு உணர்ச்சியினாலோ, தமிழருக்கு விரோதமாகவோ விளை நிலங்கள் தேசியமாக்கப்படவில்லை. ஆனால் நிலவுடமை சட்டத்தினால் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தியர் வசமுள்ள வேறு சில தொழில்களையும், வர்த்தகங்களையும் தேசியமயமாக்க பர்மிய அரசாங்கம் முயன்று வருகிறது. இதனாலும் பர்மா வாழ் தமிழர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாதாரண தமிழர்கள் ஏழை எளியவர்கள் பர்மாவின் கிராமப்புறங்களில்தான் வாழ்கிறார்கள்.

இன்று பர்மாவில் தமிழ்பயில உருப்படியாக ஒரு பள்ளிகூடமும் இல்லை. யுத்தத்திற்கு முன் பல தமிழ்ப்பள்ளிகள் இருந்தனவாம். தமிழர்களே சொந்தமாக நடத்தி வந்த பள்ளிகள் அவை. ஆனால் யுத்த கால கொடுமைகளின் விளைவாக அந்த பள்ளிகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன. பர்மா வாழ் தமிழர்கள் தங்கள் முயற்சி கொண்டே தமிழ் பள்ளிகள் அமைக்க முயன்று வருகிறார்

பாரதமும் பர்மாவும் தனித் தனி நாடுகள்தான் என்றாலும் இந்த இரு நாடுகளுக்குமிடையே நெடுங்காலமாக உறவு இருந்து வருகிறது. 'காழகம்' என்ற பெயரில் தமிழ் இலக்கியங்களில் பர்மா இடம் பெற்றிருக்கிறது.

கள். அதற்கு ஆதரவு காட்டி ஊக்குவிக்க தாயகத்தின் நல்லெண்ண காணிக்கையாக சென்னை சர்க்கார் நிதி உதவி அனுப்ப வேண்டும்.

பர்மாவில் இன்றுள்ள அரசியல் நிலையில் நிலச்சுவான்தார் எவரும் பண்ணை உழவர்களிடம் வேலை வாங்கமுடியாது. அந்நியரான தமிழருக்கு அது நிச்சயம் சாத்தியமில்லை. ஆகவே விளை நிலங்கள் தேசியமயமாக்கப்பட்டது குறித்து தமிழராக உள்ள நிலச்சுவான்தார் வருந்தத்தேவையில்லை நிலச்சுவான்தார்களுக்கு நஷ்ட ஈடு தர பர்மிய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் உறுதிமொழி இதுவரை அமுல் நடத்தப்படவில்லை. இதற்கு இந்திய அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாததே காரணமாகும். பர்மா அந்நிய நாடாக இருந்த போது நம்மவர்கள் அங்கு மூலதனம் போட்டு நிலச்சுவான்தார் ஆகிவிடவில்லை. அந்த நாடு இந்தியாவின் ஒரு அங்கமாக இருந்த போது இந்தியத் தமிழர்களும் அந்த நாட்டின் பிரஜைகளாக குடியேறி வாணிபம் செய்யவும் தொழில் நடத்தவும் உரிமை இருந்தது. அந்த சந்தர்ப்பதில் தான் நம் தமிழர்கள் அங்கு நிலத்தை வாங்கினார்கள். இந்த கண்ணோட்டத்தின் படி தான் நஷ்ட ஈட்டுப்பிரச்னையில் நான் அனுதாபமும் அக்கறையும் காட்டுகிறேன்.

பர்மாவிலுள்ள தமிழர்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேறவோ அல்லது வெளியேற்றப்படவோ நேர்ந்தால் அப்போது தமிழர்கள் அங்கு விட்டு வருவது பணமூட்டைகளாக இருக்கலாகாது. கல்வி நிலையங்களாகவும் கடவுள் கோயிலாகவும் இருக்கவேண்டும். ★

தமிழரின் வாணிப நாகரீகம்

நம் முன்னோர்கள் மலை கடந்து கடல் கடந்து அயல் நாடுகளுக்கு சென்றனர். நம் நாட்டின் பொருள்களில் மக்கள் உபயோகித்தவை போக எஞ்சியவற்றை அயல்நாடுகளுக்கு கொண்டுபோய் கொடுத்தனர். அந்த நாடுகளிலிருந்து தேவைப்படும் பண்டங்களை நம் நாட்டிற்கு கொண்டு வந்தனர். இந்த பண்டமாற்று முறைதான் தமிழரின் வாணிப நாகரீகம்.

'கொடுத்தும் கொண்டும்' நடத்திய வாணிப முறையில் மனித குலத்தில் பண்பு வளர்ந்ததேயன்றிப் பகை வளரவில்லை. நமது வணிகத் தமிழர்கள் பிறநாடுகளோடு பண்டங்களை மட்டும் பறிமாறிக் கொள்ளவில்லை. [பண்பாடுகளையும் பறிமாறிக் கொண்டார்கள்.

— ம. பொ. சி.

அயல்நாடுகளில் குழந்தைகள் க்ஷேம நலன்

இந்திரா காந்தி

சமீபத்தில் என் தந்தை காமன் வெல்த்பிரதமமந்திரிகள்மகா நாட்டுக்கு சென்றிருந்தபோது அவருடன் சென்ற எனக்கு ஓய்வு நேரம் அதிகமாகக் கிடைக்கவில்லையாயினும் இங்கிலாந்து, ஜெர்மனி, எகிப்து முதலிய பல நாடுகளில் குழந்தைகள் க்ஷேம நலத்துக்காகச் செய்யப்பட்டு வரும் ஏற்பாடுகளை ஓரளவுக்கு பார்வையிட முடிந்தது.

லண்டனில் கௌண்டி கௌன்சில் அங்கத்தினரும் குழந்தைகள் க்ஷேமநல விஷயத்தில் தீவிர அக்கரை உள்ள வருமான ஸ்ரீ டோனல்ட் போர்ட் என்னை, ஆதரவற்ற குழந்தைகள் விடுதியைப் பார்வையிட அழைத்துச் சென்றார். கௌண்டி கௌன்சில் ஆதரவற்ற 9,000 சிறுவர்களின் க்ஷேம நலத்துக்கு நேரடி பொறுப்பு வகிக்கிறது.

ஆதரவற்ற குழந்தைகள் என்பதில் பெற்றோர்களிடமிருந்து அல்லது உறவினர்களிடமிருந்து ஏதாவது ஒரு காரணத்தால் வேறுபடுத்தப்பட்ட குழந்தைகள் என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது. பெற்றோர்கள் அல்லது ரக்ஷகர்கள் இல்லாதவர்களும் அவர்களால் கைவிடப்பட்டவர்களும் வறுமை, வியாதி, முதலியவை காரணமாய் பராமரிக்க முடியாத பெற்றோர்களிடமிருந்து வந்துள்ள குழந்தைகளும் அதில் அடங்கும். சர்க்கார் ஆதரிக்க வேண்டிய குழந்தைகள் எத்தனையோ வகைகளில் வந்து சேருகின்றன. சில சமயங்களில் உதவி அவ்வளவு அவசியமாகத் தேவைப்படாத குழந்தைகள் கூட வந்து விடுகின்றன.

டில்லியில் நான் இத்துறையில் சேவை செய்து வருவதால் எனக்கு இப்பிரச்னையில் அக்கறை உண்டாயிற்று. எனவே லண்டன் கௌண்டி கௌன்சில் இது விஷயமாய் எவ்வாறு வேலை செய்கிறது. என்று பார்வையிட நான் விரும்பினேன்.

லண்டன் ஸ்தாபன அமைப்பு

லண்டனில் பராமரிப்புக்காகக்

கொண்டு வரப்படுகிற குழந்தை முதலாவது ஒரு வரவேற்பு நிலையத்துக்கு அனுப்பப்படுகிறது. அங்கே உள்ள ஊழியர் அந்தக் குழந்தை எந்த ஸ்தலத்தை சேர்ந்ததோ அந்த ஸ்தலத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளவராக இருப்பார். புத்திக்குறைவாக அல்லது சித்தக்கோளாறு உள்ளதாகக்காணப்படுகிற குழந்தைகளைக் கவனித்து ஆலோசனைச் சொல்ல மனோ வியாதி ஆராய்ச்சியாளர்கள் இருக்கிறார்கள். குழந்தையின் வீட்டுக்குச் சென்று விசாரித்து குழந்தையின் வரலாறு பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து சொல்லக்கூடிய ஊழியரும் இருக்கிறார்கள். அந்த குழந்தை மனதில் தான் தன் மாமூலான இருப்பிடத்தை விட்டு வந்து விட்டதால் மன அதிர்ச்சி கூடுமானமட்டிலும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வழிசெய்யப்படுகிறது. ஆயினும் இந்த விடுதிகளுக்கு வருவதன் மூலம் குழந்தைகளுக்கு பிரிவு ஏற்படத்தான் செய்கிறது. முதலில் தன் சொந்த வீட்டிலிருந்து வெளியேறுகிற பிரிவு, இரண்டாவதாக சிறிது காலம் நிலையத்தில் தங்கி அங்குள்ள ஊழியர்கள் மற்ற குழந்தைகள் ஆகியோருடன் ஒருவித உறவு ஏற்பட்டபின் நிலையத்தைவிட்டு வெளியேறும் பொழுது மற்றொரு பிரிவு ஏற்படுகிறது. மறுபடி குழந்தைகளின் சொந்த வீடுகளுக்கே அவர்களை அனுப்பி வைக்க முயற்சிக்கப்படுகிறது, வீடு அற்றவர்கள் விஷயத்தில் அவர்களை தத்தெடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. வளர்ப்புப்பெற்றோர் கிடைப்பார்களா என்றும் பார்க்கப்படுகிறது. அவர்களுக்குக் குழந்தைகள் பாரமரிப்புக்காக வாரம் தோறும் குறிப்பிட்ட தொகை தரப்படுகிறது. ஆனால் இது தற்காலிக ஏற்பாடுதான். புனர்வாழ்வுக்கு ஏற்பாடு செய்கிற அதிகாரிதான் இறுதிப்பொறுப்பு ஏற்கிறார்.

கூடுமான மட்டிலும் வீட்டுச் சூழ்நிலை இருக்கும்படி செய்யப்படுகிறது. சொந்த உடைகள் இருந்தால் அவைகளையே அவர்கள் அணிவதற்கு அனுமதிக்கப்படுகிறது. தனிப்பட பொம்மைகள் கொடுக்கப்படுகின்றன. நிலையத்தில் அவர்கள் இருப்பது வரையில் அவை அவர்களுக்கே சொந்தம். அக்கம் பக்கத்திலுள்ள மனிதர்கள் அவர்களிடம் மாமா, மாமி உறவு கொண்டாடும்படி ஏற்பாடு செய்யப்படுகிறது. இதே போன்று இரண்டு விடுதிகளை பான் நகரிலும் கெய்ரோவிலும் நான் பார்வையிட்டேன்.

பான் - கெய்ரோ நிலையங்கள்

ஜெர்மனியிலுள்ள விடுதிகள் "கிண்டர் ஹோம்ஸ்" என்று கூறப்படுகின்றன. நான் பார்த்த பான் விடுதி எஸக்ஸ் விடுதியைப் போலவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே விமான மார்க்கமாய் கோடை விடுமுறைக்கு அழைத்துவரப்பட்ட சில குழந்தைகளை நான் பார்த்தேன்.

கெய்ரோவில் பிரமேடுகளின் அடிவாரத்தில் உள்ள தாஷின் எல்சேகா நகரக்குச் சென்று அங்குள்ள குழந்தைகள் விடுதியை நான் பார்வையிட்டேன். அவ்விடுதி பெண்கள் கமிட்டியால் நிர்வகிக்கப்படுகிறது. க்ஷயரோகிகளான பெற்றோர்களின் குழந்தைகள் 300 பேர் அங்கே இருக்கிறார்கள். அவர்களில் ஆண்களும்

பெண்களும் இருக்கிறார்கள். அக்குழந்தைகளுக்குப் பள்ளிப் படிப்பும் கைவேலையும் கற்றுத் தரப்படுகின்றன. அவர்கள் செய்யும் பொருள்கள் மூலம் கிடைக்கிற தொகை அங்கிலே யத்துக்கு உபயோகிக்கப்படு கிறது. குழந்தைகள் சுயசம் பாத்யத்தில் வாழ வழி ஏற்படு கிறது.

ஆதரவற்ற குழந்தைகள் பிரச்னையும் குற்றம் இழைக்கும் குழந்தைகள் பிரச்னையும் தொடர்புள்ளவை. லண்டனில் நான் சிறுவர்கள் கோர்ட்டுக்கு விஜயம் செய்தேன். சிறுவர் கள் ரிமாண்டு விடுதிக்கும் போய் பார்த்தேன். லண்டனில் இரண்டே ரிமாண்டு விடுதிகள் தான் இருக்கின்றன. ஒன்று பெண்களுக்குரியது, மற் றொன்று ஆண்களுக்குரியது. அங்குள்ள பையன்கள், பெண் கள் எண்ணிக்கை அடிக்கடி மாறுபடும். அவர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து வேலை செய்கிறார்கள். ஸ்தல சுத்தம், தச்சு வேலை, காகித அலங்கார வேலை முதலியவைகளில் அவர் கள் ஈடுபடுகிறார்கள். மீன் காட்சி நிலையமும் இருக்கிறது ஒரு நாயும் இருக்கிறது. குழந் தைகளுக்கு அருமையாக வளர்ப்பதற்கு ஏதாவது ஒரு ஜந்து இருந்தால் நல்லது என்று நான் கருதியிருந்தேன். அக்கருத்துக்கு இது ஆமோதிப் பாக இருந்தது. பிள்ளைகள் சரியாக பாடம் படிப்பதில்லை.

ரிமாண்டு விடுதியில் சிறைச் சாலை சூழ்நிலை இல்லை. மன துக்கு ரம்மியமாக அது அலங் கரிக்கப்பட்டிருந்தது. பெற் றோர்கள் அடிக்கடி விஜயம் செய்வதற்கு வசதி செய்யப்படு கிறது. ஆனால் சில குடும்பங் களின் நிலைமை மோசமாக இருப்பதால் குழந்தைகள் சீர் திருந்துவதற்கு வழியில்லை. பெற்றோர்களே குழந்தை களுக்கு ஆட்சேபகரமான புஸ் தகங்களை கொண்டு கொடுக் கிறார்கள். தங்கள் குழந்தை கள் அங்கே வருவது சகஜம் தான் என்றுகூட சிலர் கருது கிறார்கள்.

குற்றத் தடுப்பு

மேல்நாடுகளில் குற்றமிழைக் கும் சிறுவர் பிரச்னை பெரிய பிரச்னையாகி வருகிறது. இந்தி யாவில் நாமும் அது பற்றி அக் கறையோடு கவனிக்க வேண் டும். சிறுவர்கள் குற்றம் செய்வதைத்தடுப்பது விஷயத் தில் அதிக கவனம் செலுத்தப் படவில்லை. தடைமுறைகள் சிரமம் என்றும், அதிகச் செலவு உள்ளதென்றும் கருதப் படலாம். ஆனால் அவை நல்ல பலன் தரும். குற்றமிழைப் பவர்கள் பூர்ணமாக திருந்து வதில்லை. ஆதரவற்ற குழந்தை கள் குற்றம் செய்யும் குழந்தை களாக மாறிவிடுகின்றனர்.

இந்தியாவில் நிலைமை அவ் வளவு மோசமாக இல்லை. பொருளாதார காரணங்களால் தான் இங்கே குழந்தைகள் குற் றம் செய்கிறார்கள். டில்லியில் நாங்கள் நடத்துகிற பால சகாய ஸ்தாபனம் ஒரு விஷ யத்தை நிரூபித்திருக்கிறது. அனுதாபமும், பயிற்சியும் அளிக்கப்பட்டால் அவர்கள் திருந்துகிறார்கள். ஆனால் இந்தி யாவில் இத்துறையில் சர்க்கா ரும் மக்களும் இன்னும் எவ்வ ளவோ செய்யவேண்டும்.

(டில்லி நிலய ரேடியோப் பிர சங்கம்)



தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களையும் இதர கறுப்பு ஜாதியினரையும் தனியாக ஒதுக்கிவைக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னையே ஒரு பெரும் சோகக்கதை. மகாத்மா காந்தி இந்தியர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டார். இன்னும் இந்தியர்களுக்கு அங்கு நியாயம் வழங்கப்படவில்லைதான்.

இந்தியர்கள் உழைப்பு மட்டும் இல்லையேல், நேட்டால் அபிவிருத்தியடைந்தே இருக்காது என்று தென்னாப்பிரிக்க சர்க்காரும் தென்னாப்பிரிக்க வெள்ளையருமே ஒப்புக்கொண்டுள்ளனர்.

இப்போது இந்தியர்களைத் தனியாகப் பிரித்து குடியேற்றும் முயற்சி தலைதூக்கி வருகிறது. இதனால் பெரும் தொல்லைகள் தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு ஏற்பட விருக்கிறது.



இந்தியர்கள் குடியேற ஒதுக்கப் பட்டுள்ள சேரிப்பகுதி.

தென்னுப்பிரிக்காவில் குடியேறின முதல் வெள்ளையர் டச்சுக்காரர்களே. *1652*-ல் சில டச்சுக்காரர்கள் கேப்டவுனை சுற்றியுள்ள பிரதேசத்தில் குடியேறினர். *1795*-க்குள் பெல்ஜியம், ஜெர்மனி, ஹாலந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து மக்கள் வந்து குடியேறிவிட்டனர். இவர்களனைவருடைய கூட்டுவாழ்வின் விளைவாக, போயர்கள் என்ற புதிய மக்கள் தோன்றினர்.

1806-ம் வருஷம் பிரிட்டனுக்கும் ஹாலந்துக்கும் நிகழ்ந்த முதல் டச்சு யுத்தத்தின்போது கேப் காலனியை டச்சுக்காரரிடமிருந்து பிரிட்டன் பறித்து கொண்டது.

1820-ல் பிரிட்டிஷ்காரர்கள் பெரும் அளவில் இங்கு வந்து குடியேற ஆரம்பித்தனர்.

இதைக் கண்ட போயர்கள், வடக்குநோக்கி நகரலாயினர். சுதேசிகளான பாண்ட் ஜாதியினருக்கும் போயருக்கும் தகராறுகள் ஏற்படலாயின. பின்னர் சுயாட்சி தருவதாக வாக்களித்து, பிரிட்டன் டிரான்ஸ்வாலை தன் சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டது. இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாதது தான் முதல் போயர் யுத்தம் (*1880*) ஏற்படக் காரணமாயிற்று. அடுத்த ஆண்டில் டிரான்ஸ்வால் சுதந்திரமடைந்தது.

டிரான்ஸ்வாலில் தங்கமும், ஆரஞ்சு ப்ரீஸ்டேட்டில் வைரமும் கண்டுபிடிக்கப்பட்ட பின் பிரிட்டிஷார் ஏராளமாக குடியேறலாயினர். இதை ஆட்சேபித்த போயர்களுக்கு, ஜெர்மன் சக்ரவர்த்தியின் ஆதரவு இருந்தது. இதனுல் *1899*-ல் இரண்டாவது போயர் யுத்தம் மூண்டது. டிரான்ஸ்வாலும் ஆரஞ்சு ப்ரீஸ்டேட்டும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் ஆயின. இதன் பின் தான் ஜெயித்த போயர் குடியரசுகளில் சுயாட்சியை ஏற்படுத்தி தென்னுப்பிரிக்காவில் ஒரு சமஷ்டியை ஏற்படுத்த பிரிட்டன் முயன்றது. இதன் விளைவாக *1910*-ல் தென்னுப்பிரிக்கா யூனியன் உருவாயிற்று.

தென்னுப்பிரிக்க யூனியனின் முதல் பிரதமர் லூயி போதா.

டிரான்ஸ்வாலிலுள்ள பிரிட்டோரியாவில் தான் சர்க்காரின் தலைமைக் காரியாலயம் இருந்து வருகிறது. ஆனுல் பார்லிமெண்ட் கேப்டவுனில் கூடுகிறது. ஆரஞ்சு மாகாணத்தி

னுள்ள ப்ளோயம்பாண்டின் நகரமே யூனியனின் பிரதம நீதி ஸ்தலமாகும். ஆங்கிலமும் ஆப்ரிகான்ஸ் இரண்டும் அரசாங்க பாஷையாக விளங்குகின்றன.

தென்னாப்பிரிக்காவில் கைத்தொழில், விவசாயம் பிரயோஜனமே இல்லை. தங்கம்தான் தென்னாப்பிரிக்கப் பொருளாதார வாழ்வின் அஸ்திவாரமாக இருக்கிறது. போயர், ஆங்கிலேயர், யூதர் மூவரும் சேர்ந்தே தென்னாப்பிரிக்க ஐரோப்பியர் சமூகம். தொகையிலும் செல்வாக்கிலும் பெருத்தவர்கள் போயர்களே.

நிறத்திமிர் கொடுமை

தென்னாப்பிரிக்க அரசியலின் படுமோசமான அம்சம் வெள்ளையரின் நிறத்திமிர் கொடுமைதான். 70 லக்ஷம் உள்ள சுதேசிகளும் $2\frac{1}{2}$ லக்ஷம் கொண்ட இந்தியர்களும் இந்த நிறவெறியால் படும் துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. இந்த நிறத்திமிர் கொடுமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அநேக வருஷங்களாகவே இருந்து வருகின்றன. நிறத்திமிர் கொடுமையை அனுபவித்த தமிழர் கூறும் வாய்மொழி மூலமே அங்குள்ள நிலைமையை அறியலாம். உலகம் சுற்றும் தமிழரான ஸ்ரீ ஏ. கே. செட்டியார், காந்திமகான் டாகுமென்டரி படத்தை தயாரிக்கும் பணியையொட்டித் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றிருந்தார். "திரையும் வாழ்வும்" என்ற நூலில் அவர் குறிப்பிட்டிருப்பதை அப்படியே இங்கு தருகிறோம்.



வெள்ளைத் தொழிலாளர்களுக்கான குடியிருப்பிடம்.

"இங்கிலாந்தை விட்டு தென்னாப்பிரிக்காவுக்கு புறப்படும் ஒவ்வொரு கப்பலிலும் இந்தியருக்கு இடமில்லாமல் இருந்தது. "இடமே இல்லை" என்று சொல்லப்பட்ட ஒரு கப்பலில் மிகுந்த சிரமத்துடன் இடம் சம்பாதித்தேன். மொத்தம் அக்கப்பலில் 6 பிரயாணிகள் இருந்தோம். அக்கப்பலிலுள்ள சாப்பிடும் இடத்தில் ஒரே சமயத்தில் 200 பேர்கள் சாப்பிடலாம். ஆனால், நான்மட்டும் தனியாக உட்கார வைக்கப்பட்டேன். அந்த தனித்த இடம் எனக்கு கௌரவம் அல்ல. அது ஒரு அவமதிப்பு.

$13\frac{1}{2}$ நாட்கள் இத்தகைய அவமதிப்புகளுக்கு நான் ஆளாக வேண்டியதாயிற்று. கேப்டவுனை அடைந்தும்கூட அவமதிப்புகள் என்னை விடவில்லை. ரயில்வண்டியில் தனி இடம்தான் எனக்கு அளிக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்கா நிறத்திமிர் நிறைந்த நாடு. இன்றுகூட டர்பன் நகரில் உள்ள சில வீதிகளில் இந்தியர்கள் நடந்துசெல்ல



எல்லா காரியாலயங்களிலுமே வெள்ளையருக்கென்றும் கறுப்பர்களுக்கென்றும் தனித்தனியாக ஜன்னல்கள் உள்ளன.

அனுமதிக்கப்படவில்லை. ட்ராம் பஸ்களில் ஐரோப்பிரல்லாதவர்களுக்கு கடைசி 3 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சில பஸ்களில் இந்தியர்களையும் நீக்ரோக்களையும் ஆடுமாடுகளைப்போல அடைக்கிறார்கள். பாங்கிகளில் இவர்களுக்குத் தனி ஜன்னல்கள், தனி தபாலாபீஸ்களும் இருக்கின்றன. இந்த நாட்டில்தான் மகாத்மா காந்தி இருபது வருஷங்களுக்குமேல் தங்கி, இவ்வித அநியாயங்களை ஒழிக்க அநேக போராட்டங்களை நடத்தினர்.''

தெ. ஆ. இந்தியர்கள் பிரச்னை

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் வந்தவிதம் எப்படி என்பதை அறிவது அவசியம்.

முன்பு இருந்த இந்திய சர்க்காருக்கும் நேட்டால் சர்க்காருக்கும் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையின் பேரிலேயே இந்தியர்கள் இங்கு அழைத்து வரப்பட்டனர். இதற்கான பேச்சுவார்த்தைகள் *1855–60* வரை நடைபெற்றன. *1911*–ம் வருஷம் வரை நடுவில் 8 வருஷங்கள் நீங்கலாக இந்தியத் தொழிலாளர்கள் தென்னாப்பிரிக்காவில் தொடர்ந்து குடியேறி வந்தனர். இவர்களைதொடர்ந்து இந்திய வியாபாரிகளும் வந்தனர். இவர்கள் அன்று அரும்பாடுபட்டு உழைத்த உழைப்பே தென்னாப்பிரிக்கா சுபிட்சத்துடன் விளங்குவதற்கு உதவியது. தென்னாப்பிரிக்காவில் டர்பனில்தான் இந்தியர்கள் எண்ணிக்கை அதிகம்.

இந்தியர்கள் குடியேறுவதற்கு நேட்டால் சர்க்கார்

பின் கண்ட நிபந்தனைகளை ஒப்புக்கொண்டது.

1) தொழிலாளர்கள் குறைந்தது மூன்று வருஷங்களுக்கு ஒப்பந்தப்படி வேலை செய்யவேண்டும். (இது பின்னர் 5 வருஷங்களாக உயர்த்தப்பட்டது.) இந்தக் காலம் முடிந்ததும் அவர்கள் சுயேச்சை தொழிலாளர்களாக இருக்கலாம்.

2) இவர்கள் ஒப்பந்தகால முடிவிற்குப்பின், இந்தியாவுக்கு திரும்ப விரும்பினால், செலவின்றி அனுப்பிவைக்கப்படுவர். இவர்கள் இங்கேயே தங்கி வசிக்க விரும்பினால் இவர்களுக்கு நிலம் அளிக்கப்படும்.

3) ஒப்பந்தகாலம் முடிந்ததும் இதர பிரஜைகளுக்குள்ள சகல உரிமைகளும் அவர்களுக்கும் உண்டு.

இந்தியர்கள், நேட்டால் சர்க்கார் அழைத்தே போனார்கள். இந்த நிபந்தனைகளுக்கும் நேட்டால் சர்க்கார் இணங்கினர். ஆனால், இவை அமுல் நடத்தப்படவே இல்லை.

நேட்டாலுக்கு கூலிகளாகப் போகவேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்து 1911-ல் ஜி. ஏ. நடேசன் விடுத்த ஒரு அறிக்கையிலிருந்து தெரியவரும் விவரங்களாவன:

கை கட்டைவிரல் அடையாளம்-குழந்தைகளும் இதற்குவிலக்கு இல்லை.

"ஒரு சட்டம் தென்னாப்பிரிக்க சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அதன்படி எந்த எஜமான் உங்களை இம்சை செய்கின்றாரோ அவரைப்பற்றி பிராது செய்யப்போக அந்த எஜமான் உத்திரவைப் பெற்றே போகவேண்டுமாம். இம்சை செய்யும் எஜமானன் தன் பேரில் பிராது செய்யப்போக அனுமதி கொடுப்பாரா?



இந்தியக் குடும்பம் குடியிருக்கும் 'ஷெட்'

தொழிலாளர்களுக்கு சம்பளம் மாதம் 10 ஷில்லிங். அதா

வது ரூ. 7—8—0 (தினம் 4 அணு) அரிசி, பருப்பு, உப்பு இவைகளை தருமமாகக் கொடுக்கிறார்கள், விறகு, துணி மணிகள் முதலியன வாங்கியே தீரவேண்டும். ஒரு நாள் வேலைக்குப் போகாமல் நின்று விட்டால், மூன்று நாள் சம்பளம் பிடிக்கப்பட்டுவிடும். அற்ப குற்றங்களுக்கு மாஜிஸ்திரேட்டுகள் 2 பவுன் (அதாவது 4 மாத சம்பளம்) அபராதம் போடுவதுண்டு.

"கங்காணிகள் ஒரு ஆள் சேர்த்துக் கொடுத்தால் ரூ. 35 இனும் பெறுகிறார்கள்.,

"தொழிலாளர்கள் இரவு 2 மணிக்கு எழுந்திருந்து, சமைத்து சாப்பிட்டுவிட்டு, காலை 5 மணிக்கு ரோல்காலில் போய் ஆஜராக வேண்டும். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை. வீட்டிற்கு இரவு 7 மணிக்கு தான் செல்லலாம். அதன் பின் சாமான்கள் சேகரித்து, உணவு தயாரித்துப் படுக்க இரவு 11 மணி ஆகி விடும். இருப்பிடம் குதிரைகட்டும் லாயத்திற்கும் கேடானது. இவ்வளவு கஷ்டங்களையும் நம் நாட்டினர் தெனுப்பிரிக்காவில் அனுபவித்து அந்த நாட்டை வளம் படுத்தி யிருக்கின்றனர்"

1885 — ம் வருஷம் முதற் கொண்டே ஆசியர்களை அடிமைகளாகவே வைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1885–ல்

நேட்டாலிலிருந்து அநேக இந்தியர்கள் டிரான்ஸ்வாலில் குடியேறி, வர்த்தகமும் நடத்த ஆரம்பித்தனர். 1885–ல் ஏற்பட்ட சட்டப்படி பிரஜா உரிமைகளை ஆசியர்கள் பெற முட்டுக்கட்டை போடப்பட்டதுடன், பதிவு செய்யாமல் வர்த்தகம் செய்யக்கூடாது என்று தடுக்கப்பட்டது. இதற்குப் பதிவுக் கட்டணம் 25 பவுன். சர்க்கார் அவ்வப்போது குறிப்பிடும் இடங்கள், தெருக்கள் முதலியவைகளில் ஆசியர்கள் சொத்து வைத்திருக்கக்கூடாது என்று சட்ட மூலம் தடை விதிககப்பட்டது.

1895-ல்

வேலை செய்வதற்காக வந்து குடியேறிய இந்தியத் தொழிலாளர்கள் தென்னுப்பிரிக்காவில் தங்கிவிடவேண்டும் என்றால் 3 பவுன் செலுத்தி லைசென்ஸ் பெற வேண்டும்.

1896-ல்

நேட்டாலில் இந்தியர்களுக்கு பார்லிமெண்டரி வோட்டுரிமை கிடையாது என்று தடை ஏற்பட்டது.

1898-ல்

கறுப்பர்கள் யாரும் சுரங்கத் தொழிலுடன் சம்பந்தப்பட்டிருக்கலாகாது என்கிற சட்டம் டிரான்ஸ்வாலில் பிறப்பிக்கப் பட்டது.

1899-ல்

வர்த்தகம், வசிப்பது இவ் விஷயங்களில் கறுப்பர்கள் வேறு, வெள்ளையர்கள் வேறு என்பதை ஒதுக்கி, டிரான்ஸ்வாலில் பிரகடனம் செய்யப் பட்டது. கறுப்பர்கள் தெரு வோரங்களில் உள்ள நடை பாதைகளில் கூட நடக்கக் கூடாது என்று டிரான்ஸ்வால் இதே வருஷத்தில் தடை விதித்தது.

1900-ல்

தென்னுப்பிரிக்காவிலேயே தங்கி இருக்க விரும்பும் இந்தியர் 3 பவுன் கட்டி லைசென்ஸ் பெறுவது வயதுவந்த குழந்தைகளுக்கும் உண்டு என்று நேட்டால் சர்க்கார் உத்திரவு பிறப்பித்தனர்.

கைதி நெம்பர் 1739

1913-14-ல் தென்னுப்பிரிக்காவில் சத்யாக்ரகம் செய்து, சிறை சென்ற மகாத்மா காந்தியைப் பற்றிய ஸ்வாரஸ்யமான தகவல்களாவன :

அவருடைய கார்டில் காணப்பட்ட விஷயங்கள்.

பெயர் : மோகனதாஸ் கரம் சந்த் காந்தி. கைதிநெம்பர் *1739.*

மதம் : ஹிந்து.

வயது : *43.*

தொழில் ; ஸொலிஸிட்டர்.

உணவு : சைவ உணவு : *12* வாழைப் பழங்கள் *3* தக்காளி பழம் *3* எலுமிச்சம் பழங்கள், கடலைக்காய் *2* அவுன்ஸ், ஆலிவ் எண்ணெய். இவை தவிர, காந்திஜியின் இடது கட்டை விரல் அடையாளக் குறியும் அதில் காணப்படுகின்றன. 'குறிப்பு' என்ற பத்தியில் நன்னடத்தைக்கு அவருக்கு *60* மார்க் சதவீதம் கொடுக்கப்பட்டுள்ளது. இவருக்கு இவ்வளவு மார்க்குகள் கிடைத்தும் ஒரு நாள்கூட சிறைவாச தண்டனையில் குறைக்கப்படவில்லை.

காந்திஜிக்கு *20* பவுன் அபராதம் விதிக்கப்பட்டது. அதை அவர் கட்ட மறுத்ததால், அவர் ஒருவருஷம் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்.

1907-ல்

எல்லா ஆசியர்களும் தங்களைக் கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும். அத்துடன் கை கட்டை விரல் அடையாளத்தையும் பதிவு செய்யவேண்டும், என்று டிரான்ஸ்வால் ஒரு சட்டம் எல்லா இந்தியர்களையும் கிரிமினல் அந்தஸ்துக்கு கொண்டு வந்து விட்டது.

1908-ல்

நகரங்களில் ஆசியர்கள் வியாபாரம் செய்யக்கூடாது என்பதை டவுன் ஷாப் சட்டம் தடைசெய்தது. சுங்க கமிஷனர் அனுமதிக்காதஎந்த இடத்திலும் ஆசியர்கள் வசிக்க முடியாது என்ற சட்டமும் இந்த வருஷத்தில் ஏற்பட்டது.

1913-ல்

குடியேற்றக் கட்டுப்பாடு சட்டம் தென்னுப்பிரிக்கப் பார்லிமெண்டினுல் நிறை வேற்றப்பட்டது. குடியேறும் கதவையே இது தாழிட்டது என்று கூறலாம்.

ஒரு மாகாணத்திலிருந்து மற்ருெரு மாகாணத்திற்கும் இந்தியர் செல்வதையும் இது தடுக்கிறது.

சாத்வீக எதிர்ப்பு இயக்கம்

இந்தக் கட்டுப்பாடுகளும் நிறவேற்றுமையும் இந்தியர்களிடையே மனக்கொதிப்பை உண்டாக்கி வந்தன. அப்போது தென்னுப்பிரிக்காவில் வசித்த மகாத்மா காந்தி தலைமையில் சாத்வீக எதிர்ப்பு ஆரம்பிக்கப்பட்டது. *1907*–ல் பிறப்பிக்கப்பட்ட கட்டாயப் பதிவு, கை விரல் அடையாளம் என்கிற சட்டத்தை ஆரம்பித்தே சாத்வீகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மகாத்மா காந்தி உள்பட *120* இந்தியர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

1911 ஏப்ரலில் சமரஸம் ஏற்பட்டு *1907*–ம் வருஷ சட்டத்தை ரத்து செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது சாத்வீக எதிர்ப்பு இயக்கம் *3* பவுன் பதிவு லைசென்ஸ் கட்டணத்தையும், ஒரு மாகாணத்திலிருந்து மற்ருெரு மாகாணத்திற்கு இந்தியர்கள் போகக்கூடாது என்பதையும் எதிர்த்து நடத்தப்பட்டது. மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டு *9* மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டார். மற்றும் *2000* இந்தியர்கள் சிறைப்பட்டனர். பல இடங்களில் ஸ்டிரைக்குகள் நடைபெற்றன. போலீஸ் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் *9*இந்தியர்கள் மாண்டனர். *25* இந்தியர்கள் காயமடைந்தனர்.

மகாத்மாவுக்கும், ஸ்மட்ஸுக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து காரணமாக இந்திய நிவாரண மசோதா சட்டமாக நிறைவேறியதை தொடர்ந்து, சமரஸம் ஏற்பட்டது. *3* பவுன் என்கிற தலைவரி சட்டம் இதன் மூலம் நீக்கப்பட்டது.

பெரும் ஏமாற்றம்

இதன் பின் இந்தியர்களை அவமதிக்கும் புது சட்டங்கள் வராது என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனுல் ஏமாற்றத்தில் தான் அது முடிந்தது.

1921–ல் நடைபெற்ற இம்பீரியல் மகாநாட்டில் தென்னுப்பிரிக்க இந்தியர் பிரச்னை எழுப்

தென்னாப்பிரிக்காவில்

மகாகனம் சாஸ்திரியார்

மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி தென்னாப்பிரிக்காவில் இந்திய சர்க்காரின் ஏஜெண்டாக இருந்தவர்; இந்தியர்களுக்காக மிகவும் சேவை செய்தவர். அவர் 'மீண்டும் வாழ்ந்தால்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது:

"தென்னாப்பிரிக்காவின் ஏஜெண்டாகப் போனது மகாத்மா காந்தியின் தூண்டுதலால். இவரும், லார்ட் இர்வினும், முகம்மத் ஹபிபுல்லாவும் சேர்ந்து தென்னாப்பிரிக்காவில் இன்னும் ஒரு வருஷமாவது தொடர்ந்து சேவை செய்யவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்......

"கேப்டவுன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின், அதை ஜனங்கள் அங்கீகரிப்பதற்கு மகாத்மாவின் ஆசீர்வாதம் தேவை. ஆகவே இந்த ஒப்பந்தத்தை அச்சு மூலம் பிரசுரம் செய்வதன் முன் ஒரு பிரதியை இரகசியமாக மகாத்மா காந்தியிடம் காட்டி அவரது சம்மதியை நான் பெற்றேன். அதன் பின்பே அது வெளியிடப்பட்டது......

"தென்னாப்பிரிக்காவில் ஏஜெண்டாக அலுவல் பார்க்கப் போயிருந்த பொழுது, தொடக்கத்தில் சிறிது காலம் வெள்ளையர்களிடம் அவமானமே கிடைத்தது. இதை எல்லாம் பொறுத்துக் காலக் கிரமத்தில் நான், மதிக்கத்தக்கவனென்று அவர்கள் மனதில் அனுகூல புத்தியை உண்டுபண்ணினேன்."

[மகாகனம் சாஸ்திரியார் பிறந்த தினம் செப்டெம்பர் 24 உ வருகிறது.]

பட்டது இந்தியர்கள் உரிமைகளை கவனித்து அளிக்கப் படுவது காமன் வெல்த் நலனுக்கு அவசியமாகும் என்ற தீர்மானம் இந்த மகாநாட்டில் எழுப்பப்பட்டது. இந்த தீர்மானத்தை ஆதரிக்காத நாடு தென்னுப்பிரிக்கா மட்டும் தான்.

1925-ல்

ஆசியர்கள் குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் மசோதா நிறை வேறியது. இச்சட்டம் இந்தியாவில் பெரும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது இவ்விஷயமாக இந்திய சர்க்கார் தென்னுப்பிரிக்க – சர்க்கார்களிடையே ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் பேரில் வட்ட மேஜை மகாநாடு நடைபெற்றது. இதன் பலனுக *1927*–ல் கேப்டவுன் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. இது இந்தியர்களின் "மாக்னு கார்டா" என்று கூறப்பட்டது. இந்த உடன்படிக்கை *1932*–ல் மீண்டும் ஊர்ஜிதம் செய்யப் பட்டது. அப்போது தென்னுப்பிரிக்காவில் இந்திய ஏஜெண்டாக இருந்தவர் மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார்.

1933-ல்

இந்த உடன்படிக்கையை மீறியே டிரான்ஸ்வால் ஆஷிய யடிக் நிலவர்த்தக சட்டத்திற்கு தென்னுப்பிரிக்க சர்க்கார் அனுமதி கொடுத்தது. இதன்படி ஆசியர்கள் *1933* ஏப்ரல் *30*ல் யன்று ஆசியர்களால் வைத்துக் கொண்டிருக்கப்படாத இடங்களை, ஆசியர்கள் வசிக்கவோ அல்லது குத்தகைக்கோ எடுத்துக் கொள்ள முடியாது. ஆசியர்கள் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்குச் செல்ல விரும்பினுலும் உள் நாட்டு மந்திரியிடமிருந்து லைசென்ஸ் பெற வேண்டும்.

1934-ல்

வெள்ளையர் இஷ்டத்திற்கு சர்க்கார் இணங்கி 'பெக்கிங்' சட்டம் என்ற சட்டத்தை கொண்டு வந்தது. வெள்ளையர்களிடமிருந்து நிலபுலன்களை ஆசியர்கள் வாங்கக்கூடாது. வெள்ளையர்கள் இவர்களுக்கு விற்கவும் கூடாது. இந்திய சர்க்கார், தென்னுப்பிரிக்கா இந்தியர் இவர்களின் பலத்த ஆட்சேபத்தை கவனிக்காமல் இந்த சட்டம் செய்யப்பட்டது.

1939–ல் மூன்றுவது தடவையாக நீதிபதி ப்ரூமைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிஷனை ஏற்படுத்தினர். நேட்டாலிலுள்ள இந்தியர் நிலைமை பற்றி ரிப்போர்ட் சமர்பிக்கும்படி இக் கமிஷன் கேட்டுக் கொள்ளப் பட்டது. இது *1945*-ல் தன் ரிப்போர்ட்டை சமர்ப்பித்தது. இரு சர்க்கார்களும் வட்ட மேஜை மகாநாடு கூட்டி, பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று இக்கமிஷன் யோசனை தெரிவித்திருந்தது.

தன் கமிஷன் சமர்ப்பித்த சிபாரிசை புறக்கணித்து, 'கெட்டோ' (அடக்கல்) சட்டத்தை தென்னுப்பிரிக்க சர்க்கார் கொண்டுவந்தது. இந்தியர்களை ஒதுக்குவதை ஒரு நிரந்தர ஏற்பாடாக இந்த சட்டம் அங்கீகரித்தது. கேப்டவுன் உடன்படிக்கையை இது கிழித் தெறிந்துவிட்டது. இந்தியர்களை என்றும் அடிமையாக வைத்திருப்பதே இதன் நோக்கம். இதை எதிர்த்துதான் *1947*–ல் சத்யாக்ரகம் ஆரம்பிக்கப்பட்டது.

ஐ. நா. தீர்மானம்

1946-ம் வருஷம் டிஸம்பர் 8 உ இப்பிரச்னை ஐநாவுக்குக் கொண்டுவரப்பட்டு, தீர்மானமும் நிறைவேறியது. ஆனால், தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை தன் சொந்த விஷயம் என்றும், இதில் ஐ நா தலையிட உரிமை இல்லை என்றும் கூறியது. ஐ நா தீர்மானத்தை அங்கீகரிக்க மறுத்துவிட்டது.

மலான் சர்க்கார் 1948-ல் பதவிஏற்ற பின்பு வெள்ளையரல்லாதாருக்கு சட்டங்கள் மூலமாக பல தொல்லைகள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளில் சில இனமண்டல சட்டம், ஜனத்தொகை பதிவு சட்டம், கலப்புமணத் தடை சட்டம், தனிப் பிரதிநிதித்துவ வாக்காளர் சட்டம், பாண்டு அதிகார ஸ்தாபனங்கள் சட்டம் முதலியன.

இப்போது தென்னாப்பிரிக்காவில் ஜோகன்னஸ்பர்க்போன்ற நகரங்களில் இந்தியர்களைத் தனியாக ஒதுக்கி வைக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. இந்த இனமண்டல ஒதுக்கல் திட்டத்தை ஒத்திவைக்கும்படி கேட்டு, ஜோகன்னஸ்பர்க் நகர கௌன்ஸில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. லண்டனில் காமன்வெல்த் மகாநாடு கூடியபோது பண்டித நேருவும் தென்னாப்பிரிக்க பிரதமர் ஸ்டிரைடமும் சந்தித்துப் பேசியதாகக் கூறப்பட்டது. இதன் விளைவு என்னவென்று தெரியவில்லை. சத்தியமே ஜெயிக்கும் என்ற நம்பிக்கையில் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் கஷ்டங்களை சகித்து வருகிறார்கள். ★

★செப்டெம்பர் 11௳ பாரதி ஜயந்தி. அதை யொட்டியே இக்கட்டுரை

பாரதி என்ற பருவமேகம்

நா. அனந்தகிருஷ்ணன்

மரத்தை மரமாகவும், பழங்களைப் பழங்களாகவுமே பார்க்கும் சாதாரண உள்ளம். மிஞ்சிப்போனால் 'சாப்பிடலாம்' என்று எண்ணும். ஆனால், கவியுள்ளம் அப்படியில்லை. மரத்தை மனித உள்ளமாகவும், பழங்களை எண்ணங்களாகவும் கற்பனை செய்யும். கவிஞனுடைய கற்பனை தாவித்தாவிக் குதிக்கும். அதைக் கட்டுப்படுத்த முடியாது. சின்னஞ்சிறு குழந்தை ஏதாவது ஒரு பொருளை எடுப்பதும், மற்றொன்றைச் சுவைப்பதும், பின் ஒன்றை விட்டெறிவதுமாக விளையாடுவது போல், கவிதையுள்ளமும் அழும், பாடும், சிரிக்கும், விழும், எழும், ஓடும். இப்படிச் சொல்வதனால் கவிதை கட்டுப்பாடற்றது என்று கொள்ளக்கூடாது. கைதேர்ந்த வித்தைக்காரன் கண்ணை மூடிக் கொண்டு அலட்சியமாகக் கத்தியை வீசினாலும் கத்தி, எதிர்ப் பக்கத்தில் உள்ள பலகையைத் தாக்குமேயொழிய, பெண்ணைத் தொடாது. இது போல் தான் கவிஞன் வார்த்தைகளோடு விளையாடுவான். உண்மையான கவிஞன் இலக்கணச் செருப்புக்குத் தகுந்தபடி கவிதைக் காலைக் கத்தரிக்க மாட்டான்.

சங்க காலத்தில் பெய்த கவிதை மழைக்குப் பிறகு, வெகு காலம் தன் வாயை அசைக்காமல் காத்திருந்தது தமிழ் என்னும் வானம்பாடி; சிந்தை குளிர செவி இனிப்ப வந்தது பாரதி என்னும் பருவமேகம். இயற்கையோடு ஈடுபடத் தெரிந்தவர்கள் யாரானாலும் கவிதை பாடலாம் என்பதற்கு ஏற்றபடி சங்ககாலத்தில் இலக்கணம் இருந்தது. பிரபந்தகாலத்தில் 'தமிழ்'ப் பெண்ணை இலக்கணக் கயிற்றில் தொங்கவிட்டார்கள். பாரதியார் வந்து கயிற்றை அவிழ்த்து, முதல் சிகிச்சை செய்தார். இதனால் பாரதியார் இலக்கணமில்லாத கவிதை எழுதினர் என்று

எண்ண வேண்டாம். தென்னங்கீற்றுக்களின் ஊடே நிலவு வந்து பாயக்கூடிய குடிசையிலே உட்கார்ந்து கொண்டு, எல்லோருக்கும் புரிய வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர் எழுதினுர். வார்த்தைகளுக்காக ஸஹாரா பாலைவனம் வரையிலும் கால் நடையாகப் போகவில்லை; இலக்கண வரம்புக்காக 'சுக்குமி ளகுதி ப்பிலி' என்று பிரிக்கவுமில்லை, உண்மைக் கவிஞனின் உள்ளம் நீர் மொண்டு வைக்கப்பட்ட தொட்டியல்ல; அது வற்ருத கேணி.

''பாரதியார் கவிஞராகப் பிறந்தார். எல்லோருக்கும் புரியும்படிப் பாட்டுப் பாடினுர். தமிழ்க் கவிதை என்ருலே முகத்தைச் சுளித்துக் கொண்டு போகிறவர்களும் கூட, 'பாரதியார் கவிதையா? படியுங்கள்' என்று சொல்லும்படி எழுதினுர் அவர்'' பாரதியாரைப்பற்றி இவ்வளவு சொன்னுல் போதும்.

குழந்தைகளுக்காக என்ன என்னவோ நீதிகளை யெல்லாம் வைத்துப் பாடினுர்கள் பல பேர்கள். ''இளமையிற் கல்'' என்று சொன்னதுண்டு. ''ஓடி விளையாடு பாப்பா'' என்று பாரதியாரைத் தவிர வேறு யார் சொல்வார்கள்? இந்தக் கருத்தையே, வேறு யாராவது சொன்னுல், சின்னஞ் சிறுகுழவீ.நீ விளையாட்டயர்தல் வேண்டும்' என்று நீட்டி முழக்கிச் சொல்லி, பதவுரை பொழிப்புரையும் தருவார்கள். இதனுல் அவருடைய பாட்டுக்கள் எல்லாம் குழந்தைத்தனமாகக் குழந்தைகளுக்குக் கூறியது என்று எண்ணி விடக்கூடாது.

'தேன் மறந்த வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்து விட்ட பூவும்
வானை மறந்த பயிரும்—இந்த
வையம் முழுதும் இல்லை தோழீ.

என்று சாதாரண வார்த்தைகளில், இனிய சந்தத்தில், சகஜமான உவமையோடு, இயற்கையின் நியதியை விளக்கும் பொழுது யார்தான் வியப்படைய மாட்டர்கள்?

'வந்தே மாதரம்' என்று வாயால் சொன்னுலே வந்தது மோசம் என்று ஆங்கிலேயர் எண்ணிய அந்தக் காலத்திலே, 'வெற்றி எட்டுத்திக்கும் எட்ட' முரசைக் கொட்டி, 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே' எனப் பாடிய தீரனின் ரத்தத்தில் அல்லவா நாட்டுப்பற்று இருக்கும்? வாழ்நாளெல்லாம் வாடியவருக்கு, அமரரான பிறகு மண்டபம் கட்டியதோடு நின்றுவிடவில்லை நம் கடமை. தெருவெங்கும் பாரதியின் 'தமிழ் முழக்கம்' செழிக்கச் செய்ய வேண்டும்'.

அலக்ஸாண்டர் அழுதான்!

கிரேக்க மாவீரனும் பேரரசனுமான அலக்ஸாண்டரும் ஒரு முறை கண்ணீர் வடித்து அழுததாக சரித்திரம் கூறுகிறது. அஞ்சா நெஞ்சனுன அலக்ஸாண்டர் அழுததன் காரணம் என்ன? அதற்கும் இதோ சரித்திரம் பதில் தருகிறது.

''...இப்பரந்த பூமண்டலத்தில் தற்போதுள்ள நாடுகளை நான் வென்ருகி விட்டது! இனி நான் படையெடுத்து வெற்றி காண நாடுகள் இல்லையே...என் செய்வது?'' என்று அலக்ஸாண்டர் கண்ணீர் வடித்தான்.

அம்பர் சர்க்கா

கிராமத்தினர் துயர் தீர்க்க வந்துள்ளது அம்பர் சர்க்கா. தென்னிந்திய இளைஞரான ஸ்ரீ ஏகாம்பரநாதன் இதைக்கண்டு பிடிப்பதற்கு காரணகர்த்தா. அவர் பெயரே இதற்கு வைக்கப்பட்டிருக்கிறது. சாதாரண ராட்டை சக்தியை விட இதன் உற்பத்தி சக்தி நான்கு மடங்கு அதிகம்.

ஒரு கிராமவாசி இதை 8-மணி நேரத்திற்கு உபயோகித்தால், சுலபமாக தினம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் முதல் ஒன்றரை ரூபாய் வரை சம்பாதிக்கலாம். இரண்டாவது திட்டகாலத்தில் 25 லக்ஷ அம்பர் ராட்டைகள் உபயோகத்திற்கு கிடைக்கும். சுதந்திரம் வந்துவிட்டது வாஸ்தவம் தான். அதை நாம் பத்திரமாக பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதற்கு சர்க்காவை நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பது காந்திஜியின் கருத்து.

வேதத்தில் நெசவு

ரிக் வேதத்தில் நெசவுத் தொழிலைப் பற்றி ஏராளமாகக் குறிப்புகள் இருக்கின்றன. 'நெசவு செய்யும் இருமாதரைப் போல இரவும் பகலும் சேர்ந்து யக்ஞமென்னும் ஆடையை நெய்து வருகின்றன' என்று ஒரு இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜகத் சிருஷ்டிக்காக பிரஜாபதி செய்த யக்ஞம் நூற்றல் நெசவு உவமைகளைக்கொண்டே வர்ணிக்கப்படுகிறது. நெசவுத் தொழிலை குடும்பக் கடமைகளில் ஒன்ருக வேதம் சொல்கிறது.

ஜவுளி உற்பத்தியில் மிகவும் அனுபவம் வாய்ந்த மணிலால் தோஷி, இந்த அம்பர் சர்க்கா மூலம் கிராமங்களில் வேலையில்லாத்திண்டாட்டத்தை கட்டாயம் தீர்க்க முடியும் என்று கூறுகிறுர். அவர் கூறுவதாவது! ''நானும் மில் சொந்தக்காரர்களில் ஒருவன் தான். ஆகவே மில் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள கவலை எனக்குத் தெரியும். அம்பர் சர்க்காவை புகுத்துவதால், மில்கள் கட்டாயம் பாதிக்கப்படும் தான். ஆனுல், ஏராளமானவர்களுக்கு வேலை கிடைக்கும் என்கிற போது ஓரளவு தியாகம் செய்வதில் ஒன்றும் குறைந்துவிடாது. மில் தொழிலுக்கு ஏராளமான வசதிகள் அளிக்கப்படுகின்றன. அதேபோன்ற வசதிகள் அம்பர் சர்க்காவுக்கு அளிக்கப்படுமாயின் நாடு சுபிட்சமடையும் என்பதில் சந்தேகமே இல்லை.''

அயல்நாட்டுப் பிரமுகர்: நீக்ரோ அபிமானி

நீதிபதி ஏர்ல் வாரன்

முயற்சியால் முன்னுக்கு வந்துள்ள பலருடைய வாழ்க்கைசரிதத்தை நாம் படித்திருக்கிறோம். சமீபத்தில் இந்திய விஜயத்தை மேற்கொண்ட அமெரிக்கப் பிரமுகரும், அமெரிக்காவின் பிரதம நீதிபதியுமான ஏர்ல் வாரன் மேற்சொன்ன வர்க்கத்தைச் சேர்ந்தவர்.

நீதிபதி வாரன், நீக்ரோக்களின் அபிமானி. நேர்மைக்கும் நீதிக்கும், சிறந்த அரசியல் நோக்கத்துக்கும், நிர்வாகத் திறமைக்கும் பிரசித்தி பெற்றவர். இந்தியாவில் நீதி முறை இயங்கும் வகையை வாரன் பாராட்டிச்சென்றார்.

அமெரிக்கப் பொதுப்பள்ளிக்கூடங்களில் நீக்ரோ மாணவர் அமெரிக்க (வெள்ளை) மாணவர்கள் ஒதுக்கு முறை, சட்டத்துக்கு புறம்பானதாகுமென பிரதம நீதிமன்றம் ஏகமனதாக முடிவு கட்டுவதற்கு, வழிவகுத்தவர் ஏர்ல் வாரன் தான். நீக்ரோக்களின் அபிமானியாக இப்பணியை அவர் செய்திருப்பது, அவரது பரந்த மனோபாவத்தைப் புலப்படுத்துகிறது.

1953-ல் ஜனாதிபதி ஐஸன்ஹவர், இவரை அமெரிக்க பிரதம நீதிபதியாக நியமித்தார். இதற்கு முன் வாரன் தம் தாய் ராஜ்யமான கலிபோர்னியாவில் சுமார் 35 வருஷம் அரசியல் துறையில் ஈடுபட்டிருந்தார். கலிபோர்னியாவின் கவர்னர் பதவிக்கு தொடர்ந்து மூன்று தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவர் ஒருவர் தான்.

வாரன் எளிய நிலையிலிருந்து இப்பதவிக்கு உயர்ந்து வந்துள்ளார். ஜனாதிபதிக்கு அடுத்த படியான அந்தஸ்துடைய பதவியில் தற்போது இருந்து வருகிறார். அவரைப் பலர் ஜனாதிபதி பதவிக்கு வர முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, 'அமெரிக்காவின் பிரதம நீதிபதி, பதவியையே எனக்கு நிர்வகிக்கும் திறமை நீடித்திருந்தால் அது போதும்' என்று பூர்ணதிருப்தியுடன் கூறுகிறார். பதவிப்பித்து இவரிடம் குடிகொள்ளாதது குறிப்பிடத்தக்க அம்சம். தன் பள்ளி நாட்களிலேயே வாரன், தன் செலவுக்கான பணத்தைத் தேடும் பொருட்டு சிற்சில வேலைகளில் ஈடுபட்டிருந்

தார். செய்தித்தாள் விநியோகிக்கும் பையனுகப் பணியாற்றி பொருள் தேடி, படிப்பை முடித்துக் கொண்டு, பட்டம் பெற்ருர் வாரன். 'பேக்கர்ஸ் பீல்டு கலிபோர்னியன்' என்ற பத்திரிகையின் நிருபராகவும் சில காலம் பணியாற்றியிருக்கிருர். ஸதர்ன் பஸிபிக் ரயில்வே பிரயாணிகளைத் துயிலெழுப்பும் வேலையாளாகவும், அவர்களது உடமைகளைப் பாதுகாக்கும் வேலையாளாகவும் கூட வேலை செய்திருக்கிருர். 'எளிய நிலையிலிருப்பவர்கள் என்றுமே அதே நிலையில் அடிமையாக இருப்பதில்லை' என்பதை நிதர்சனமாக நிரூபித்துக் காட்டுகிறது வாரனின் வாழ்க்கை.

வாரன் முதல் உலகயுத்தத்தில் ராணுவத்துறையில் முதல் லெப்டினண்டாக வேலை பார்த்தவர்.

1919-ல் ஓக்லாண்டில் ஒரு உதவி வழக்கறிஞராக நியமனமானதிலிருந்து இவருடைய பொது வாழ்க்கை ஆரம்பமாற்று. *14* வருடகாலம் வழக்கறிஞராகப் பணியாற்றிய பின், *1939*-ல் பிரதம வழக்கறிஞர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் இவர்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இவர் கவர்னர் பதவிக்குப் போட்டி யிட்ட பொழுது அலமேடா பகுதியில் இவர் சிறந்த ஆதரவைப் பெற்ருர். *1948*-ல் நியூயார்க் கவர்னர் தாமஸ் டுவேயின் தலைமையில் ஜனநாயகக் கட்சி அபேட்சகராக உதவி ஜனதிபதிப் பதவிக்குப் போட்டியிட்ட பொழுது, வாரன் தோல்வியடைந்தார்.

ஆடம்பரத்தை வெறுப்பவர் வாரன். அடக்கமான பழக்க வழக்கங்களையுடையவர். தன் தோற்றத்தினல் யாவரையும் கவரும் சக்தி அவருக்கு இருக்கிறது. *1925*-ல் அவர் நீனு பாம்க்விஸ் டுமேயர்ஸ் என்பவரை மணந்தார். அவருக்கு தற்போது மூன்று குமாரர்களும், மூன்று குமாரத்திகளும் இருக்கின்றனர்.

நீதிக்கும் நேர்மைக்கும் பிரசித்திபெற்ற வாரன் நீக்ரோக்களின் அபிமானி என்பதை அவசியம் குறிப்பிட வேண்டும்.

காபி தோன்றுமுன்...

நாகரிக யுகத்தில் மனிதனின் அத்யாவசிய தேவைகளாக இருந்து வரும் தேனீரும் காபியும் தோன்றுமுன் மனிதவர்க்கம் சோர்வை நீக்க, உணர்ச்சி தூண்டும் பானமாக 'மீடு' என்னு பானத்தை உபயோகித்து வந்தது. தேனைக்கொண்டு இப்பானம் தயாரிக்கப்பட்டது. ஸம்ஸ்கிருதமொழியில் தேனுக்கு மது என்ற பெயர் வழங்கிவருவதால், அதனடியாகப்பிறந்த இந்தப் பானத்திற்கு 'மீடு' என்ற பெயர் வழங்கிவரலாயிற்று, ரோமர்களும், கிரேக்கர்களுமே இதைப் பெரும்பாலும் உபயோகித்து வந்தனர் ஒருகாலன் நீருடன் நான்கு ராத்தல் தேன் சேர்க்கப் பட்டுவந்தது தவிர சுவைதரும் திராட்சை ரசம், வாசனை திரவியங்களும் கலந்து இப்பானத்தை தயாரித்து ருசித்தனர். ரோமனிய வீரர்களான டேனிடஸ், ஹெரோடுடஸ் என்பவர்கள் பார்ஸியிலிருந்து இத்தகைய பானம் ஒன்றைத் தயாரித்து, அருந்தி சோர்வை நீக்க வழிகண்டனர்.

நவராத்திரி

கலைத்திருநாள்

எஸ். நடராஜன், பி. ஏ.

ஆதி சிவனுடைய சக்தி—எங்கள்
அன்னையருள் பெறுதல் முத்தி;
மீதி உயிரிருக்கும் போதே—அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி.

—பாரதியார்.

நவராத்திரி என்பது சக்தி பூஜை தான். ஒன்பது நாட்களில்துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி ரூபமாக அம்பாள் என்கிற சக்தி வழிபடப்படுகிறது. பத்தாவது நாளான விஜயதசமியன்று, சக்தி சிவத்துடன் சேர்ந்து அர்த்தநாரீயாக விளங்குகிறாள்.

சக்தியும் சிவனும் சேர்ந்தால் தான் மதிப்பு. சிவன் என்றால் சும்மாயிருத்தல்; சக்தியென்றால் செயல்படுதல் என்று அர்த்தம். "உனக்கு சக்தி யிருந்தால் செய்; இல்லையேல் சிவனே என்று சும்மா யிரு" என்று நாம் சொல்வதில்லையா?

ரிக்வேதத்தில் 10-வது மண்டலத்தில் வருவது "தேவிஸூக்தம்". வேதம் அவளை 'வாக்' என்கிறது. கண்ணால் காண்பது, காதால் கேட்பது, மூச்சு விடுவது எல்லாமே என் சக்தியால் தான் நிகழ்கிறது என்று பராசக்தியே கூறுகிறாள்.

சரித்திர காலத்திற்கு முன்பே சக்தி வழிபாடு உலகமெங்கும் பரவியிருந்தது. ஆதிகால மக்கள் பலவித இயற்கை சக்திகளை வழிபட்டு வந்திருக்கின்றனர். இந்தியாவில் காமரூபத்திலிருந்து (அஸ்ஸாம்) கன்னியாகுமரி வரை 61 தேவி பீடங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சப்த வடிவில் 51 அக்ஷரங்களும் 51 படங்களாகும். இரண்டற்று



அபூர்வ அர்த்தநாரீஸ்வரர்—தாராசுரம்



கொலு - ஒரு காட்சி

ஒன்றாய் நின்ற பரம்பொருளான 'பிரும்மம்' தானே தன் தனிமையை தாங்காமல் தவித்து, பின் சிவம், சக்தி என்று இரண்டாகி, அதன் மூலம் பலவாறாகத் தன்னையே பெருக்கிக்கொண்டது.

ஆக்குவது, காப்பது, அழிப்பது என்ற மூன்று தொழில்களையும் தன் முக்குணங்களான ஸத்வ, ரஜஸ், தமஸ்களால் நடத்துவது சக்தியே. இதைநடத்தும் சக்தியே மகா சரஸ்வதி, மகா லக்ஷ்மி மகா காளி எனப்படுகிறாள். மகா சரஸ்வதி ஞான ரூபமானவள், மகாலக்ஷ்மி கிரியா ரூபமானவள். மகா காளி இச்சா ரூபமானவள். மகா சரஸ்வதி சித்ரூபிணி, மகாலக்ஷ்மி ஸத்ரூபிணி, மகாகாளி ஆனந்த ரூபிணி. இம்மூன்று தத்துவங்களும் ஒன்று சேர்ந்ததே சண்டி.

கொலு

நவராத்ரியின் போது தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் கொலு வைக்கிறார்கள். கோவில்களில் அம்மனை அலங்கரித்து கொலு வைக்கிறார்கள். தங்கள் குழந்தைகளை விதம் விதமாக அலங்கரித்து, அக்கம் பக்கத்து பெண்களை வரவழைத்து, மஞ்சள் குங்குமம் கொடுக்கின்றனர். நவராத்ரி பெண்களுக்கென்றே ஏற்பட்ட பண்டிகை.

நவராத்ரி என்பது ஒவ்வொரு ருது ஆரம்பத்திலும் உண்டு. இதில் வஸந்த நவராத்ரியும் சாரதா நவராத்ரியும்மிகவிசேஷமானவை. ஒன்பதாவது நாள் சரஸ்வதி பூஜையும், ஆயுத பூஜையும் நடக்கின்றன. மறுநாள் விஜயதசமி அரசர்கள் திக்விஜயத்தை ஆரம்பிக்கவும், அறியாமைமீது குழந்தைகள் போர் தொடங்கவும் அதுவே சிறந்த நாளாகக் கருதப்படுகிறது.

தேவிபாகவதத்தில் இந்த விழா

கொலு-மற்றொரு காட்சி



''நவராத்ரா'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சரித்திரத்தில் தசரா

இந்தப் பத்து தினங்களையும் சேர்த்து 'தசரா' என்று வழங்குவதும் உண்டு. பண்டைக் காலத்தில் அரசர்கள் இந்த ஒன்பது நாட்களிலும் தேவி பூஜை நடத்துவார்களாம். தர்பாரும் நடத்தி கவி சிரேஷ்டர்கள், கல்விமான்கள் இவர்களை கௌரவிப்பது வழக்கம். விஜய தசமி யன்று சிம்மாசனம், குடை, சாமரம் முதலியவைகளையும் யானை, குதிரைகளையும் பக்தியுடன் பூஜிப்பார்கள். இதன்பின் அரச குடும்பத்தினர் வன்னிமரத் தடிக்குச் சென்று அம்மரத்தை பூஜை செய்வர். இதன் ஞாபகச் சின்னமாகவே அன்று 'அம்பு' போடுவதாகக் கூறப்படுகிறது.

விளக்குகள் நடுவில் புத்தர்.

பாபத்தையும் சத்ருக்களையும் அழிக்கக்கூடியது வன்னிமரம் என்று சொல்வதுண்டு. துர்க்கையின் உருவம் என்றும் வன்னி மரத்தைச் சொல்வார்கள். பாண்டவர்களும் தங்கள் ஆயுதங்களை அஞ்ஞாதவாசத்தின்போது வன்னி மரத்தில் ஒளித்து வைத்திருந்து பின்னர் அங்கிருந்து எடுத்து சண்டை போட்டு, வெற்றி பெற்றனர்.

விஜயநகர மன்னர்கள் நவராத்திரியை இவ்விதமே மிகப் பிரபலமாகக் கொண்டாடினார்கள். வெளி நாடுகளிலிருந்து வந்த சில பிரமுகர்கள், இக்கொண்டாட்டம் குறித்து எழுதி வைத்துள்ளனர். போர்த்துகீசிய வீரர் கிறிஸ்தாவோ டி சிகிரேடோ என்பவருக்கு கிருஷ்ண தேவராயர் இக்கொண்டாட்டங்களைக் கண்டு ரஸிப்பதற்காக உயர்ந்த ஆசனம் ஒன்றை அளித்தாராம்.

நடுவீட்டில் பழனிமலை



குழந்தைகளுக்கு கிருஷ்ண வேஷம்.

செல்கிறதோ அந்த திக்கிலுள்ள ராஜ்யத்தின் மீது படையெடுப்பது விஜயநகர மன்னரின் வழக்கமாம்.

இதர பகுதிகளில்

வங்காளத்தில் நவராத்திரியின் போது காளி பூஜை மிகவும் விசேஷம். அங்கு பூஜிக்கப் படும் காளி உருவத்துடன் கணபதி, சுப்பிரமணியத்தையும் காணலாம். காளி மட்டும்தான் தன் குழந்தைகளுடன் குலாவுகிருள் என்பதில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் புக்ககம் போன பெண்கள் பிறந்த வீட்டுக்கு வந்து விடுகிருர்கள். குடும்பத்தினர் எங்கு பிரிந்து இருந்தாலும் பூஜாவின் போது ஒன்றுகூடி விடுகின்றனர். இங்கு பிள்ளையார் செய்வதுபோல காளி உருவம் களிமண்ணுல் செய்து பூஜிக்கப்பட்டு பின்னர் ஆற்றில் விடப்படுகிறது.

டாமிங்கோ பீயஸ் என்கிற சரித்திராசிரியர் எழுதி வைத்துள்ள தகவல்களிலிருந்து கிடைப்பதாவது: ''மாளிகையில் சிங்காதன அறையில் புஷ்பாலங்காரத்துடன் ஆபரண அலங்காரத்துடன் துர்க்கையின் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிராம்மணர் உதவியிடன் அரசர் பூஜை செய்கிருர். இருப்பத்திநாலு எருமைகளும் நூற்றி ஐம்பது ஆடுகளும் தேவிக்குப் பலி இடப்படுகின்றன. ஒவ்வொரு மிருகத்தின் தலையும் ஒரே வெட்டில் துண்டிக்கப்படுகிறது.

மாலையில் மன்னர் முன்னிலையில் நாட்டியம், மல்யுத்தம், இரவில் வாணவேடிக்கைகள் எல்லாம் நடைபெறுகின்றன. ரதங்கள், குதிரைகள் அணிவகுப்புகள் நடைபெறுகின்றன.''

கிருஷ்ணன் பொம்மைக்கு அலங்காரம்

ராணுவ ஒத்திகை முடிந்தபின் மன்னர் மூன்று அம்புகளை எய்வாராம். மூன்று திக்கில் எய்யப்பட்ட அம்புகளில் எது அதிக தூரம்

மகிஷாசுர மர்த்தனி—மாமல்லபுரம்.

இதற்கு கௌரி குளித்தல் எனப் பெயராம்.

ராவணனை சம்ஹரிக்க ராமர், சக்தியை பூஜை செய்ததைக் கொண்டாடுவதே நவராத்ரி என்று வங்க பாஷையில் ராமாயணம் எழுதிய கிருத்திவாஸ் என்ற கவி எழுதியிருக்கிறார்.

உத்தர பிரதேசம், பஞ்சாப் ஆகிய ராஜ்யங்களில் இந்த நவராத்திரியின் போதுதான் 'ராமலீலா' வைபவம் கொண்டாடப்படுகிறது. மைசூரில் தசராவின் போது சாமுண்டீஸ்வரி பூஜை மிக விசேஷம்.

ஸ்காந்த புராணத்திலும் சக்தி பூஜைபற்றி பிரஸ்தாபம் வருகிறது. பகைவனால் தோற்கடிக்கப்பட்ட சுகேது, ஆங்கிரஸ முனிவரின் யோசனைப்படி 10 நாள் பவானி பூஜை செய்ததின் பேரில் வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது. இன்றைக்கும் மகாராஷ்டிரர்கள் பவானியை பக்தி சிரத்தையுடன் பூஜை செய்வதை விடுவதில்லை. சிவாஜியின் இஷ்ட தேவதை பவானி என்பது நினைவிருக்கும்.

தேவி பூஜையில் பலவிதம்

தேவி பூஜையில் பலவிதங்கள் இருந்துவருவதாகத் தெரிகிறது. இவை ஸாத்விக பூஜை, ரஜஸ பூஜை, தமஸ பூஜை எனப்படும். திக்கு, தேச, காலம் இவைகளைத் தெரிந்துகொண்டு மந்திரங்களோடு செய்வது ஸாத்விக பூஜை. ரஜஸ பூஜையினால் திரவியம் ஏராளமாக கிடைக்குமாம். தமஸ பூஜையில் மிருகபலி உண்டு.

ராவணன் வசந்தகாலத்தில் தேவியை பூஜை செய்தானாம்.

டில்லி, உத்தரபிரதேசம் ஆகிய இடங்களில் தேவி பூஜை பிரபலமில்லை.

தமிழ் நாட்டில் நவராத்திரியில் மிகமுக்கியமானது சரஸ்வதி பூஜைதான். ஏட்டுப்படிப்புக்கு மட்டுமின்றி உழவுத்தொழில், நெசவுத்தொழில் முதலிய எல்லாத் தொழில்களுக்குமே அவள் அருள் வேண்டியிருக்கிறது. ★

நிலவொளியின் கெடுதல்

எம். கே. ஸ்ரீநிவாஸ், பி. ஏ.

அன்றையதினம் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த நடுத்தர வயதுடைய ஒரு நபர் தன் நண்பரிடம், "மனிதனது நடவடிக்கைகளுக்கும் நிலவுக்கும் சம்பந்தமுண்டா?" என்று கேட்டார். அதற்கு அவருடைய நண்பர், "சில நூற்றாண்டுகளுக்கு முன் இது ஒரு கேள்வியாகக் கூட இல்லை. இது ஒரு உண்மையாக இருந்தது. ரோம் தேசத்து மக்கள் நிலவொளி பைத்தியமாவதற்கு ஒரு காரணம் என்பதைப் பூரணமாக நம்பியிருந்தனர். நிலவுக்கு லத்தீன் மொழியில் 'லூயூனு' என்று கூறுவார்கள். பைத்தியம் என்பதற்கு ஆங்கிலத்தில் 'லூயூனுசி' என்பார்கள். இந்த லூயூனுசி என்ற சொல் நிலவைக் குறிப்பதற்காக உள்ள லத்தீன் மொழிச் சொல்லான 'லூயூனு'விலிருந்து அமைந்தது என்று சொல்லுகிறார்கள். இதேபோல் பெருவில் உள்ள மக்களும், பிரிட்டிஷ் கயானுவில் உள்ள மக்களும் நம்புகிறார்கள்" என்றார்.

ஜெர்மனியில் ஆதிவாசிகள் வளர்பிறையில் யுத்தத்தைத் துவக்கமாட்டார்கள். அப்படித் துவக்கினுல், அந்த யுத்தத்தில் அவர்கள் தோற்று விடுவார்கள் என்று வெகுவாக நம்பினுர்கள். மத்தியகாலந் தொட்டு இன்றுவரை உலகத்தில் பல இடங்களில் விவசாயிகள் தேய் பிறைக்காலத்தில்தான் விதை விதைப்பார்கள். காடுகளில் இருப்பவர்கள் தேய் பிறையில் வெட்டப்பட்ட மரங்கள் அப்படியே அழிந்து போகும் என்றும் கூறுவார்கள்.

ஓநாய்கள் அதிகமுள்ள வனங்களில் வசிக்கும் மக்கள் கூட்டத்தில் முழு நிலாவுள்ள சமயத்தில் மக்களுக்கும் மிருக குணம் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள். திடீரென்று மயக்கம் வரும்படியான, வாயிலும் மூக்கிலும் நுரை தள்ளும்படியான, ஒரு வியாதிக்கு நிலவுதான் காரணமென்று இத்தாலி தேசத்தில் சில இடங்களில் உள்ள விவசாயிகள் கூறுகின்றனர்.

எகிப்தில் உள்ள விவசாயிகள் நிலவொளியைப்பற்றி கொண்டுள்ள பயம், இன்னும் அதிசயமானது. அவர்கள் முழு நிலா காயும்பொழுது வெளியே சென்றால், தங்கள் மூளைகெட்டு, சொந்த ஊரிலேயே தங்க முடியாதபடி அலையவேண்டிய நிலைமை வரும் என்று பயப்படுகிறார்கள். அவசரமும் அவசியமும் ஏற்பட்டால் தான், அவர்கள் கடவுள்மீது பாரத்தைப் போட்டு, முழு நிலாவில் வெளிச் செல்வார்களாம். கடவுள் மீது ஜபம் செய்துகொண்டே போவார்களாம். நிலவைப்பற்றிய அபிப்பிராயம் பிரிட்டிஷ் நீதி மன்றங்களிலும் அடிபட்டிருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் நன்கு மதிக்கப்பட்ட வக்கீலான சர். வில்லியம் பிளேக்ஸ்டன் மனிதனது சுவாதீனத்தைக் கெடுக்கும் சக்தி, சந்திர ஒளிக்கும் உண்டு என்று பேசியிருக்கிறார்.

சந்திரனின் குளிர்ச்சியான ஒளி, மனதிற்கு சாந்தியைத் தருவதாக நம்புகிறோம். ஆனுல் அதன் இயற்கைத் தன்மைகளை ஆராய்ந்தால்......?

விஞ்ஞான ரீதியில் சந்திரனது சக்தி பற்றி ஆராய்ச்சி தொடங்கப் படாத காலத்தில், விஞ்ஞான அபி விருத்தி காணப்படாத காலத்தில் இருந்த நிலையாகும் இது. விஞ் ஞான ஆராய்ச்சியாளர்கள் வெறும் நம்பிக்கையில் மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்திற் கெல்லாம் மேலாக ஒன்றைக் கூறு கிறார்கள். அதாவது சந்திரனுக் கும் பூமியின்மேல் தளத்தையே மாற்றும் சக்தி இருக்கிறதென்று கூறுகிறார்கள்.

கடல் அலைகளுக்கும் நில வொளிக்கும் மிகுந்த சம்பந்தம் உண்டு என்று விஞ்ஞான ஆராய்ச்சி தொடங்கப்படாத காலந்தொட்டு கடலில் அதிக சம்பந்தமுடையவர்கள் கூறி வந்தி ருக்கிறார்கள். நில வொளியின் காரணமாய் கடல் பொங்கி, நிலப் பரப்பில் புகுந்து, பெரும் மலைகளை யும் குன்றுகளையும்கூட கரைத்தி ருக்கின்றது. சந்திர ஆகர்ஷண சக்தி சில சமயங்களில் மலைகளை யும் குன்றுகளையும் அமுங்க வைத்திருக்கின்றது.

இங்கிலாந்தில் கிரீன் விச்சிலும், அமெரிக்காவில் வாஷிங்டனிலும் உள்ள ஆராய்ச்சி நிலையத்தார் மிக கவனமாக ஆராய்ச்சி செய்தனர். இந்த ஆராய்ச்சியில் சில அதிசய சம்பவங்கள் பற்றியெல்லாம் செய்தி வெளியாகியுள்ளன. நிலவின் ஆகர்ஷண சக்தியால் இரண்டு கட்டிடங்கள் 63 அடி நகர்த்திக்கொண்டு வரப்பட்டிருக் கின்றனவாம்.

இப்படி சந்திரனின் சக்தியால் பூமியில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக பூகம்பங்களும் நிகழ லாம் என பேராசிரியர் எச். டி. ஸ்டெட்ஸன் கூறுகிறார். இப்படிப் பட்ட சந்திரனின் ஈர்ப்பு சக்தியால் வானொலி முதலிய விஷயங்களில் கூட மாற்றங்கள் காண்கிறதாம். தாவர வளர்ச்சியிலும் சந்திரனின் சக்தி வேலை செய்கிறது என்று பிரபல பேராசிரியர் எச். எஸ். பர் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். மின்சார சக்தியின் வேகமும் சந்தி ரனின் சக்தியால் பாதிக்கப் படு கிறது என்று அமெரிக்க விஞ் ஞானியான எல். ஜே. ரேவிட்ஸ் என்பவர் தமது ஆராய்ச்சியின் மூலம் கூறுகிறார்.

காய்கறிகள், மலர்கள் முதலிய வற்றைக் கொண்டு பரிசோதனை நடத்தியதில் இன்னும் பல விவ ரங்கள் வெளியாகின்றன. சந்தி ரனைப் பார்த்து அதன் போக்கிலே திரும்பும் ஒரு வகை மலர் ஆப்பிரிக் காவில் இருக்கிறது. இன்னும் சில வகைப் பூக்கள் அமாவாசைக்கு முன்பும், பூர்ணசந்திரன் தோன் றும் நாளைக்கு முன்பும் ஒரு வாரத் தில் பூக்கின்றன. அமாவாசை, பௌர்ணமி சமயத்தில் இவை பூப்பதில்லை.

மிருக இனத்திலும் இந்த மாற் றத்தைக் காணலாம். சந்திர ஒளி யில் அடங்கி நடுங்கிக் கிடக்கும் சில மிருகங்கள் இருக்கின்றன. கடலில் ஒரு வகைப் பூச்சி இருக் கின்றது. இந்தப் பூச்சிகள் கடல் பாறைகளில் தண்ணீருக்கடி யில் ஒட்டிக் கொண்டிருக்கும். நிலா காய்ந்து கொண்டிருக்கும் வரைதான் இப்படி. சந்திரன் மறைய ஆரம்பித்ததும் இவை வெளியே வந்துவிடும்.

நிலவொளிக்கும் பைத்தியத்திற் திற்கும் இருக்கும் சம்பந்தத்தைப் பற்றி நியூயார்க் மருத்துவக் கல் லூரியைச் சார்ந்த டாக்டர் எஸ். பி குட்ஹார்ட் என்பவர் பின்வரு மாறு கூறுகிறார்.

"தூக்கத்தில் நடக்கிறவர்களை மேற்கொண்டும் செயலாற்றத் தூண்டுகிறது நிலவொளி என்பது உண்மைதான். ஆனால், நிலவொளி மட்டுந்தான் அப்படிச் செய்யும் என்று கூறுவதற்கில்லை. சாதாரண செயற்கை வெளிச்சத்தைக் கொண்டும் அவர்களை அப்படிச் செய்யலாம். சில டாக்டர்கள் மனி தனின் மூளை குழப்பத்திற்கும் சந்தி ரனின் சக்தி காரணமென்று கூறு கிறார்கள்." சந்திரனின் ஒளியால் பாரிசவாயு நோய் வரும் என்றும் நம்பப்பட்டு வருகிறது. ★

ஈனாக்கறவை மாடு

அ. ராம்கோபால்

உணவுப் பொருளில் சிறந்ததான பால், உலகின் எப்பகுதியினருக்கும் முக்கிய ஆகாரம். இதைக் கொடுக்கும் பசுவின் பால் சுரக்கும் தன்மையை அதிகரிக்கச் செய்வதெப்படி?

மலட்டு மாடுகள் பால் கறப்பதில்லை. கன்றீனா மாடுகளும் கறப்பதில்லை. ஈன்ற மாடுகள் மட்டுமே கறக்கின்றன ஏன்? கன்றுகளுக்கு உணவாகப் பால் சுரக்கிறது. ஆகையால் கன்றீனாதவைகள் பால் சுரக்க வேண்டிய அவசியமோ, தேவையோ இல்லை. இதனால்தான் மாடுகளும், வேறு பல உயிர்ப் பிராணிகளும் ஈன்ற பிறகே கறக்கின்றன. இது எல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மை.

ஈன்ற பின் மட்டும் எப்படிப் பால் சுரக்கிறது? கன்றுகள் பெரிதானதும் எப்படிப் பால் சுரப்பது நின்று விடுகிறது? ஈனுவதற்கு முன் பால் சுரக்காமல் தடுப்பது எது? ஈன்ற பின் சுரப்பைத் தூண்டுவது எது?—இது போன்ற பல கேள்விகளுக்குத் தக்க விடையறிய நீண்ட நாட்களாக விஞ்ஞானிகள் பலர் முயன்று வந்தனர். அதன் பயனாக இப்பொழுது பல உண்மைகள் தெரிய வந்துள்ளன. இதுமட்டுமல்ல, மலட்டு மாடுகளும், நல்ல மாடுகள் கன்றீனாமலேயும் பால் கறக்கும்படி செய்வது சாத்தியமாகியுள்ளது.

மனிதன் உடலிலும் பெரும்பாலான பிராணிகளின் உடலிலும் பல சுரப்பிகள் உண்டு. இச்சுரப்பிகள் இரண்டு வகைப்படும். நாளச் சுரப்பிகள் (டக்டு கிளாண்ட்ஸ்), நாளமில்லாச் சுரப்பிகள் (டக்டு லெஸ் கிளாண்ட்ஸ்) என்பவையே அவை. நாளச்சுரப்பிகளில் கசியும் நீர்கள் நேரடியாக இரத்தத்தில் கலப்பவையல்ல. பெரும்பாலும் அவை ஜீரணத்துக்கு உதவுபவை. உமிழ்நீர், பித்தநீர் போன்றவை நாளச் சுரப்பி நீர் வகையைச் சேர்ந்தவை. நாளமில்லாச் சுரப்பி நீர்கள் இரத்தத்தோடு நேரடியாகக் கலக்கக் கூடியவை. இவை உடலில் நடக்கும் பல வகையான காரியங்களைத் தூண்டவும் கட்டுப்படுத்தவும் கூடியவை. நாளமில்லாச் சுரப்பி நீர்களை ஆங்கிலத்தில் 'ஹார்மோன்' எனச் சொல்லுவார்கள்.

பால் மடி பெருத்தல், பால் சுரத்தல், சுரப்பு மாதக் கணக்கில் நீடித்தல், சுரப்பு வற்றுதல் போன்ற எல்லாக் காரியங்களையும் ஆறு வகையான நாளமில்லாச் சுரப்பி நீர்கள் தூண்டியும் கட்டுப்படுத்தியும் வருகின்றன. அவையாவன :

(1) **பிட்யுடரி:** இது தலையில் மூளைக்கு அடியில் அமைந்துள்ளது. எல்லா உட்சுரப்பிகளின் காரியங்களையும் கட்டுப்படுத்தி, கண்காணிக்கும் தலைமைச் சுரப்பி இது. இதில் முன் பகுதியில் உற்பத்தியாகும் சில வகை ஹார்மோன்கள் உடல், பால்மடி, மர்மஸ்தானம் முதலியவற்றின் வளர்ச்சியைத் தூண்டுகின்றன. பின்பகுதியில் உற்பத்தியாகும் ஹார்மோன்கள் இரத்த அழுத்தம், தசைகள் சுருங்குதல், நீளுதல், குடல், கருப்பாசயம் முதலியவை சுருங்குதல் நீளுதல் முதலியவற்றைக் கட்டுப்படுத்தவும் தூண்டவும் உதவுகின்றன.

அண்டாசயம் (ஓவரி): இதில் அண்டம் உற்பத்தியாவதோடு ஈஸ்ட்ரோஜன் என்னும் ஒரு ஹார்மோனும் சுரக்கிறது. இவ் ஈஸ்ட்ரோஜனே மாடுகளுக்கு கலவி இச்சையைத் தூண்டுகிறது.

கார்பஸ்லூடியம்: ஈஸ்ட்ரோஜனின் காரணமாக கலவி இச்சை

தோன்றும் ஒவ்வொரு தடவையும் கார்பஸ்லூடியம் என்னும் ஒரு வகைச் சுரப்பி அண்டாசயத் (ஓவரி)துக்குள் உற்பத்தியாகிறது. இச் சுரப்பி உற்பத்தி செய்யும் ஹார்மோனுக்கு புரோஜெஸ்ட்ரோன் எனப் பெயர். அண்டாசயத்தில் உற்பத்தியாகும் அண்டமும், ஆண் பீஜத்தில் உற்பத்தியாகும் கலவி உயிரணுவும் கலவியின் காரணமாக ஒன்று சேர்ந்து, கருவுற்ருல் அண்டாசயத்தில் உள்ள கார்பஸ்லூடியம் சுருங்கி மடிந்து விடும்.

தைராய்டு : இச்சுரப்பி தொண்டையில் உள்ளது. இச்சுரப்பியில் உற்பத்தியாகும் ஹார்மோனுக்கு தைராக்சின் எனப் பெயர். இது உடலில், உணவு பிராண வாயுவோடு கலந்து சக்தியாக மாறுவதற்கு உதவுகிறது. உடல் வளர்ச்சிக்கும் இது உதவுகிறது.

எட்ரினல்; மூத்திரக் காய்களுக்குமேல் குல்லாய் மாட்டியது போன்றிருக்கும் இச்சுரப்பிகள். ஒவ்வொரு காயின் மேலும் ஒவ்வொரு சுரப்பியாக இரண்டு சுரப்பிகள் இருக்கும். இவை உற்பத்தி செய்யும் ஹார்மோனுக்கு எட்ரினலின் எனப் பெயர். உணர்ச்சி வேகங்களைத் தூண்டுவதும் கட்டுப் படுத்துவதும் இவ் ஹார்மோன் வேலை. பயம், கோபம், கலவி இன்ப உணர்ச்சி போன்றவை மாறும்போது அதற்குத் தக்கபடி மற்ற அவயவங்களை அடக்கியோ தூண்டியோ கட்டுப்படுத்துவது இவ்ஹார்மோனே.

கருப்பநாளம் (பிளாசண்டா)

பிறக்காத கன்றின் இரத்த நாளங்கள் தாய்ப் பசுவின் இரத்த நாளங்களோடு இணையும் பகுதி இது. இதில் உற்பத்தியாகும் ஹார்மோனுக்கு பிளாசண்டல் ஹார்மோன் எனப் பெயர். இது கன்றின் வளர்ச்சிக்கு உதவுவதோடு, கலவி இச்சையைக் குறைவுபடுத்தவும் உதவுகிறது.

மாடுகள் சினையாகி நான்கு மாதங்களாகும்வரை அவற்றின் பால், மடியில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. நான்கு மாதமான பிறகு அண்டாசயத்தில் உற்பத்தியாகும் ஈஸ்ட்ரோஜன் என்னும் ஹார்மோனின் அளவு இரத்தத்தில் கூட ஆரம்பிக்கிறது. இவ்விதம் அதிக அளவில் சுரக்கும் ஈஸ்ட்ரோஜனோடு, கார் பஸ்லூடியத்திலிருந்து சுரக்கும் புரோஜெஸ்ட்ரோனும், பிட்யுடரி ஹார்மோனும் சேர்ந்து பால்மடி வளரவும் பெருக்கவும் செய்கின்றன. ஈஸ்ட்ரோஜனும் புரொஜெஸ்ட்ரோனும் சேர்ந்து மடியில் உள்ள இரத்த நாளங்களைப் பெருக்கச் செய்கின்றன. இவ்வேலை சினையுற்ற நான்காவது மாதம் தொடங்கி, கன்றீனும்வரை தொடர்ந்துநடக்கிறது. மேலே கூறிய ஹார்மோன்களில் ஏதாவதொன்றில் ஏதாவது குறைபாடு நேர்ந்தால்,மடியின் வளர்ச்சி பூரணமடையாது நின்றுவடும்.

கருப்பப்பையில் உள்ள கன்று பூரணமான வளர்ச்சி யடைந்து, பிறக்க ஏற்ற நிலையை அடைந்ததும் முன் எப்பொழுதையும்விட அதிகமான அளவில் ஈஸ்ட்ரோஜன் சுரக்க ஆரம்பிக்கிறது. கர்ப்ப நாளமும் ஈஸ்ட்ரோஜனைச் சுரக்கத் தொடங்குகிறது. இதனுல் இரத்தத்தில் புரோஜெஸ்ட்ரோசனைவிட ஈஸ்ட்ரோஜனின் அளவு அதிகரிக்கிறது. இதன் காரணமாக பிரசவம் தொடங்குகிறது. பிரசவத்துக்கு உதவும் வகையில் கருப்பப் பையைச் சுருங்கச் செய்யும் ஆக்ஸிடோசின் என்னும் ஒருவகை புதிய ஹார்மோன் அச்சமயம் பிட்யுடரி சுரப்பியில் உற்பத்தியாகிறது. இதனுல் கருப்பாசயத்தில் பூரண வளர்ச்சி பெற்ற கன்று வெளியே தள்ளப் படுகிறது.

கன்று பிறந்ததும் பிட்யுடரி சுரப்பியில் புதிதாக புரோலாக்டின் என்னும் ஹார்மோன் ஒன்று சுரக்க ஆரம்பிக்கிறது. பால் மடியில் பால் சுரக்கச் செய்வது இவ் ஹார்மோனே. கன்று பிறக்கும் வரை பால் சுரப்பதைத் தடுக்கும் ஹார்மோன் ஈஸ்ட்ரோஜன். கன்று பிறந்ததும் இதன் கை தாழ்ந்து புரோலாக்டினின் கை ஓங்குகிறது.

புரோலாக்டின் பால் சுரக்கச் செய்வதோடு சரி. பால் மடியில் வாய் வைத்து கன்று சுவைக்க ஆரம்பித்ததும், அங்குள்ள நரம்புகள் மூலம் ஒரு வகை உணர்ச்சி பிட்யுடரி சுரப்பியை அடைகிறது. அப்பொழுது அங்கே ஆக்ஸிடோசின் என்னும் ஹார்மோன் சுரக்கிறது. இவ்ஹார்மோனே மடியில் சுரந்த பால் காம்பு வழியாக வடிந்து, கன்றுக்குக் கிடைக்கும்படிச் செய்கிறது. இவ்ஹார்மோன் இல்லாவிடில் பால் மடியில் சுரந்த பால் அப்படியே இருக்க வேண்டியதுதான். கன்றும் குடிக்க இயலாது. மனிதனும் கறக்க முடியாது. பால் மடியில் கன்று வாய் வைத்தால்தான் அங்கிருந்து உணர்ச்சி வேகம் பிட்யூடரி சுரப்பியை அடைந்து, ஆக்டோஸின் உற்பத்தியாகும் என்பதில்லை. பால் மடியை சுடுதண்ணீரினால் கழுவினாலும், பால் பாத்திரங்களின் ஒலி கறவை மாட்டின் காதில் பட்டாலும் கூட உணர்ச்சி வேகம் பிட்யுடரியை அடைந்து ஆக்ஸிடோசின் உற்பத்தியாகி, அதன் மூலம் சுரந்த பால் காம்புக்கு வந்து விடும். கறவை மாடு பயப்படும்படி ஏதாவது காரியம் நடந்தால் எட்ரினல் சுரப்பியிலிருந்து எட்ரினலின் சுரக்கும். இவ்எட்ரினலின் காம்பு வழியாக பால் வடியாமல் தடை செய்யும் இயல்புடையது. ஆகையால் கறக்கும்போது கறவை மாடு பயங் கொள்ளும்படி அடிப்பதோ வேறு காரியங்கள் செய்வதோ கூடவே கூடாது. இப்படிச் செய்தால், அவை சரியாகப் பால் கறக்காது.

பால் கறந்து கொண்டிருக்கும் மாட்டுக்கு பிட்யுடரி சுரப்பியை நீக்கி விட்டால் அதன் பால் மடி சுருங்கிப் போகும். பாலும் சுரக்காது. ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் சேர்த்தாலும் கறவை மாட்டுக்குப் பால் சுரப்பு நின்று போகும். ஆனால் கன்றீனாத மலட்டு மாடுகளுக்கு ஈஸ்ட்ரோஜன் சேர்த்தால் சுருங்கிக் கிடக்கும் அவற்றின் பால் மடி பெருத்து பால் சுரக்கவும் ஆரம்பித்து விடுகின்றன. நம் நாட்டிலும் வேறு பல வெளி நாடுகளிலும் நடத்திய பல சோதனைகள் மூலம் இவ்வுண்மைகள் தெரிய வந்துள்ளன.

தற்காலத்தில் மருந்துக் கடைகளில் ஸ்டில்போஸ்ட்ரோல் என்னும் மருந்தொன்று விற்கப்படுகிறது. இது மிகவும் மலிவானது. செயற்கை முறையில் தயாரிக்கப்படும் இம்மருந்தில் ஈஸ்ட்ரோஜன் அடங்கியுள்ளது. இம்மருந்து சுலபமாக எண்ணெயில் கரையக் கூடியது. ஆகையால் இதை ஊசி மூலம் மாடுகளின் உடலுள் செலுத்தலாம். தக்க வயதடைந்து காளைகளோடு பொலிந்தும் கூட சினையாது மலடாகப் பல மாடுகள் நிற்பதை நாம் காணலாம். இம்மாடுகளுக்கும், தக்க பருவமெய்தி சினையாகும் நிலையில் உள்ள பசுங் கன்றுகளுக்கும், கறவை நின்று சினையாகாதிருக்கும் மாடுகளுக்கும் ஊசி மூலம் இம்மருந்தை உட்செலுத்தலாம். அப்படிச் செலுத்தினால் அவை கன்றீனுமலேயே பால் கொடுக்க ஆரம்பித்து விடும். ஆனால் இதற்கு அடிக்கடி ஊசி மூலம் இம்மருந்தை உட் செலுத்தி வரவேண்டியதிருக்கும். இச்சிரமத்தை நீக்க இப்பொழுது மற்றொரு முறை கையாளப்படுகிறது.

ஸ்டில்போஸ்ரோல் கடைகளில் மாத்திரை உருவில் விற்கப்படுகிறது. மாட்டின் கழுத்தில் தோலை லேசாகக்கீறி அதற்குள் அம்மாத்திரைகளை வைத்து மூடிக்கட்டி விடுவார்கள் சிறு காயமாகையால் அக்காயம் வெகு விரைவில் ஆறி விடும். மாத்திரை வைத்து மூடி இரண்டே வாரத்தில் காம்பை நசுக்கினால் பிசுபிசுப்பான ஒரு வகைத் திரவம் வெளிப்படும். மூன்ருவது வாரம் கறவை ஆரம்பிக்கலாம். நல்ல சுத்தமான பாலாகக் கறக்கும். எட்டாவது வாரத்திலிருந்து பத்தாவது வாரத்துக்குள் பால் கறக்கும் அளவு உச்ச நிலையை அடைந்துவிடும். அதாவது மிகவும் அதிகப்படியான பால் கறக்கத் தொடங்கும். அப்பொழும் கழுத்தில் மாத்திரை வைத்த இடத்தைக் கீறி, கரைந்தது போக எஞ்சியுள்ள மாத்திரையை

எடுத்துவிட வேண்டும். இப்படிச் செய்தால் அம்மாடு தொடர்ந்து எட்டு, ஒன்பது மாதம்வரை கறக்கும். இதை எடுக்கத் தவறினுல் அடுத்தவாரமே அதாவது பத்து, பதினேராவது வாரமே பால் வற்றிப்போகும். முதலில் கழுத்தில் ஊசி மாத்திரையை வைக்கும் போகும்போது அம்மாட்டின் அண்டாசயத்தில் அண்டம் எதுவும் வளர்ச்சியடைந்து வெளியேருதிருந்தால் எட்டு ஒன்பது மாத மல்ல, வருடக் கணக்கில்கூட பால் கொடுத்துவரும். இவ்விதம் ஒரு பசு ஆறு வருடம் தொடர்ந்து பால் கொடுத்தது. நம் நாட்டில் இஜ்ஜத் நகரில் (உத்தரப்பிரதேசம்) ஒரு பசு இம்முறையில் கன்றீனுமலேயே 343 நாட்கள் மொத்தம் 2324 ராத்தல் பால் கொடுத்தது. அதிகப்படியாக ஒருநாள் அது கறந்த பாலின் அளவு 11 ராத்தல், அதாவது இரண்டே முக்கால்படி.

இம்முறைப்படி கறக்கும் பாலுக்கும் சாதாரண முறைப்படி கறக்கும் பாலுக்கும் அமைப்பிலோ, சத்தளவிலொ, குணத்திலோ மாறுபாடோ, வித்தியாசமோ எதுவுமில்லை. ஆகையால் எவ்வித பயமுமின்றி இப்பாலை நம் உபயோகத்துக்குப் பயன்படுத்தலாம். ஆனல் இதில் சில முறைபாடுகள் உண்டு. இம்முறை கையாளப்படும் மாடுகள் சிலவற்றின் உடல்நிலை கெட்டுப்போகிறது. இது மட்டுமல்ல இம்முறை; கையாளப்பட்ட மாடு ஏற்கனவேயே கன்றீன்றதாக இருந்தாலும் பெரும்பாலும் மறுபடியும் சினையாவதில்லை. இக்குறைகளை நீக்க ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இவை நீங்கினுல் பசு மாடுகளை கறவைமாடு, கன்றுமாடு என இரண்டு பிரிவாகப் பிரித்துவிடலாம். கன்று மாட்டின் பாலை மனிதன் கறக்காது கன்றையே குடிக்கும்படி விட்டுவிடலாம். இதனுல் மனித சமூகம் ஒரு பெரும் பாவச் சுமையிலிருந்து விடுபடும். கன்றுகளும் வயிறு நிறைய வேண்டுமளவு பால் குடித்து வளர்ந்து, நம் கால் நடைச் செல்வம் சிறக்கவும் சுலபமான வழி பிறக்கும். ★

"மூவர் இரகசியத்தை வெளியிடார், அவர்களுள் இருவர் இறந்துபோனுல்."

* * *

"ஒருவன் நண்பனுகவும் முகஸ்துதி செய்வோனுகவும் இருக்க முடியாது."

* * *

"பாதிமெய் பெரும்பாலும் பெரும் பொய்."

* * *

"அறியாமை அவ்வளவு இழிவு அன்று; அறிய மனம் இல்லாமைதான் இழிவு."

* * *

"பொறுமையுடையவன் நினைத்ததை அடைவான்."

* * *

"கலியாணத்துக்கு முன்பு உன் கண்களை அகல விழித்திரு; அதன்பின் கண்ணை பாதி மூடிக்கொள்."

—பெஞ்சமின் பிராங்க்ளின்.

தமிழ் கண்ட மதங்கள்

'ஆறுமணி'

தமிழ் நாட்டிலே பல மதங்கள் தோன்றின; பரவின. அவற்றில் சில நிலைத்தன; சில மறைந்தன; சில மாறின. ஆனால் அவை யனைத்தையும் இன்றும் நிலைத்து நிற்கும்படி தன்னை அணி செய்து கொண்டது தமிழ்மொழி. அம்மதங்களனைத்தும் ஒரே கொள்கையை உடையனவல்ல. எனவே தனித்தனியே அவற்றின் கொள்கைகளைக் காணல் சிறந்ததாகும்.

சமணம்

குறள் கூறும் எண் குணத்தானே தெய்வம். இல்லற வாழ்வை வெறுத்து, வீட்டைத் தேடுவதே நம்கடமை. மனம், வாக்கு, காயம் இம்மூன்றாலும் தூயவனாய் இருப்பவனே சமணன்

பௌத்தம்

துன்பத்தை ஒழித்து, இன்பம் காண்பதே நம் நோக்கம். அன்பின் மூலம் உலகைக் காண்பதும் ஆசையை அகற்றுவதும் இரு கண்கள் போன்ற கொள்கைகளாம். பிறவியின் இரகசியத்தை அறியும் ஆற்றல் ஒவ்வொரு பௌத்தனுக்கும் உண்டு. அவன் உள்ளம் எல்லாப் பிறவியையும் காணவல்லது.

சைவம்

உலகை ஆக்கி, காத்து, அழிக்கும் முச்சக்தியையும் உடையவனும், உலகமே உருவாக அமைந்தவனுமாய், சிவனே நம் தெய்வம்—அவனை வழிபடுதலே வீட்டையடையும் வழி.

வைஷ்ணவம்

ஆழிசூழ் உலகமெல்லாம் ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்ட நாராயணனின் அம்சங்களே. அவனது. புகழ்பாடிப் பதம் அடைவதே பிறவிப் பயன்.

பிரமம்

உலகம் தேவனின் கரு; உலகின் தலைவனும் அவனே

சார்வாகம்

நமக்கு நாமே தெய்வம். ஐம்புலன்களால் அடையும் பயனே பிறவியின் பேறு. அறிவே நம் கடவுள். அதற்கு அப்பாற்பட்ட பொருளைப்பற்றிச் சிந்திப்பதோ. செயல்படுவதோ குற்றம். இப்பிறவியே நாம் உணரத்தக்கது. மறுபிறவி கேலிக்கூத்தாகும்.

வைதீக பிராமணீயம்

பிரத்தியக்ஷம், அனுமானம், உவமானம், ஆகமம், அருந்தாபத்தி, ஸ்வபாவலிங்கம், ஐதிஸ்யம், அபாவம், பாரிசேஷம், சம்பவம் என்ற பத்து பிரமாணங்களையும் கொள்ள வேண்டும். சுட்டுணர்வு, திரியவுணர்தல், ஐயம் நேராது தெளிதல், கண்டுஉணராமை, இல்வழக்கு, உணர்ந்ததை உணர்தல், நினைப்பு என்னும் எட்டு பிரமாண பாசங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

சாங்கியம்

தத்துவத்தின்மூலம் வீட்டையடையவேண்டும். உயிர் அழியும் தன்மையுடையது. ஐம்புலன்களை அடக்கி வேள்வி செய்தல் வேண்டும். தத்துவ அடிப்படையில் தோன்றிய உலகை ஈஸ்வர சிருஷ்டி என்பது தவறு. அப்படி ஒருவர் இல்லை.

நையாயிகம்

உலகை ஈஸ்வரன் உண்டாக்கினன். உயிரினங்களும் அவனது படைப்பே. உலகின் மூல அணுக்களும் உயிரின் மூல அணுக்களும் அழிவற்றது.

பூதவாதியம்

உயிருள்ளவை, உயிரற்றவையெல்லாம் அழியும் தன்மையன. எனவே மறுமை என்பது பொய். ஐம்பூதங்களே நாம் அறியக்கூடியது.

மீமாஞ்சகம்

வேதங்களின்படி வேள்விகள் செய்து அபூர்வ சக்தியைப்பெற்று, ஈஸ்வரனின் அருளில்லாமலே வீட்டையடையலாம்.

வேதாந்தம்

ஆத்மா ஒன்றே அழியாப் பொருள். இதை ஞானேதயத்தின் மூலம் உணரலாம். ஈஸ்வரனே சிருஷ்டி கர்த்தா. உயிரும் உடலும் வேறென்பது மயக்கமே. மயக்கம் தெளிந்து உயிர் ''நானே பிரமம்'' என்று உணர்வதே மோட்சம், தோத்தரித்தல், வேள்வி செய்தல் முதலியன மோட்ச மார்க்கங்கள்.

கிருஸ்தவம்

அன்புருவான கடவுள் ஒருவரே. அவரே எல்லா உயிருக்கும் தந்தை. தவறை உணர்ந்தவன் கர்த்தாவால் மன்னிக்கப் படுகிருன். பைபிளே நம் உயிர்.

இஸ்லாம்

கடவுள் ஒருவரே—அவரே அல்லா! எங்கும் நிறைந்த அவருக்கு உருவம் கற்பிப்பது அறிவீனம். பஞ்சமா பாதகங்களிலிருந்து விடுபடுபவனே முஸல்மான்.

மதம் செய்தது?

ரஷ்யாவிலே மதத்தின் பெயரால் ரஸ்புடின் போன்ருேர் செய்த கொடுமைகள் வறுமையிலுழன்ற அம்மக்களுக்கு பொதுவுடமை காண உதவியது. ரோம் நாட்டிலே நடந்த மதக் கொடுமைகள் சாக்ரடீஸ், அரிஸ்ட்டாடல், ரூசோ போன்ற எண்ணற்ற அறிஞர்களைத் தோற்றுவித்துப் புத்துலகம் காணச் செய்தது. இது போன்ற எண்ணற்ற புரட்சிகளை மதங்கள் உலகிலே செய்திருக்கின்றன. எம்மதமாயினும் அவை தவருன முறையில் கையாளப்பட்டதே இவற்றின் மூலகாரணங்களாயிருக்கிருக்கின்றன.

ஆனல், இங்கு மேலே குறிப்பிட்டுள்ளவை போன்ற எண்ணற்ற முரண்பட்ட கொள்கைகளையுடைய மதங்களிற் சில ஒரே காலத்தில் போட்டியிட்டு வளர்ந்திருந்தும் மேற்கண்டவை போன்ற புரட்சிகளைக் காண முடியவில்லை. காரணம்.

''எப்பொருள் யார் யார்
வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.''

என்ற வள்ளுவன் சொல்லையுணர்ந்து ''எம்மதமும் சம்மதமே'' என்று ஏற்றுக் கொண்டனர். அதனலன்ருே தமிழ் நாடும், தமிழும் பெருமை பெற்றது? ★

எழுத்தும் எழுத்தாளரும்

சாட்டர்டன் என்னும் எழுத்தாளர் பசியோடிருக்கும் போதுதான் நன்ருக எழுதுவார். வேதனையும் வருத்தமும் உள்ளத்தில் நிரம்பியிருக்கும்போது தான் ஜோனதன் ஸ்விப்டின் எழுத்தில் துடிப்பு இருக்கும். அறிஞர் மெக்காலே ஒருவரி எழுத ஒன்பது புத்தகங்களை யாவது படிப்பார். ஒரு பத்தி எழுத நூற்றுக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்வதையும் பொருட்படுத்த மாட்டார் அவர். காதல் கட்டங்களை எழுத முயலும் வெய்னர், தன்னை காதலனக எண்ணி, அலங்கரித்துக் கொண்டு, பின்பே எழுத முற்படுவார்.

—எஸ். எஸ். அப்துல்லா பி. ஏ,

செக்கு

வெ. குஹாநந்தன்

செக்கு என்ற உடன் "ரொம்ப முடையாக இருக்கிறது, எடுங்கள், மாற்றலாம்!'' என்று கேட்டு விடாதீர்கள். இது 'செக்' அல்ல! எண்ணெய் ஆட்டும் மரச் செக்கு.

முன்பெல்லாம் எண்ணெ ஆட்ட வேண்டுமானால், செக்கடியைத் தேடிச்செல்ல வேண்டும். இந்த செக்குகளை குறிப்பிட்ட ஒரு இனத்தவரே நடத்தி வருவதால் ஆகவே அவர்களுடைய தயவு அவசியமாகிறது.

இப்போது காலம் மாறிப்போய் விட்டது! ஆங்காங்கு 'ஆயில் மில்ஸ்' தோன்ற ஆரம்பித்தவுடன், செக்குக்கு கிராக்கி குறைந்து விட்டது என்றே சொல்லலாம். எனினும் மரச்செக்கைநாம் அலட்சியம் செய்வதற்கில்லை. கிராமங்களில் எண்ணெய் ஆட்ட அதன் தயவை நாடிச் செல்ல வேண்டித்தானே இருக்கிறது?

மரச் செக்கின் உரலை—புளி, வாகை முதலிய முற்றிய மரங்களின் அடிபாகத்தைக்கொண்டு தயார் செய்கிறார்கள். உரலின் மேலுள்ள உலக்கையைபம்பரமரம் என்கிற ஒருவகை மரத்தினால் செய்கிறார்கள். இந்த உலக்கையின் விலை சுமார் 80 லிருந்து 90 ரூபாய் வரை ஆகும். இதைத்தவிர, உரலின் அடிபாகத்தில் சுமன்று வரும் மரத்தோடு பிணைக்க இதர சாதனங்களும் தேவையாக இருக்கின்றன. மேலும் ஒரு செக்கை நடத்த குறைந்த பட்சம் இரண்டு ஆட்களும், ஒரு ஜோடி மாடுகளும் தேவை.

ஒரு ஜதை மாடுகளைக் கொண்டு சாதாரணமாக 4 காணம் (1காணம் என்பது 16 படி) ஆட்ட முடியும். இரண்டு ஜதை மாடுகளைக் கொண்டு 6 முதல் 7 காணம் வரை எண்ணெய் ஆட்ட முடியும். நாட்டின் தேவைக்கு இது எந்தமூலை?

செக்கு எண்ணெய்யின் விலை, மில் எண்ணெயைவிட கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும்! சில சமயங்களில் லாபம் கிடைப்பது அரிதாகிவிடும்.

செக்கில் எண்ணெய் ஆட்டுவது அவ்வளவு லாபகரமாக இல்லை என்றும் கூறுகின்றனர். இதில் உண்மையும் இருக்கிறது.

60 படி கொண்ட ஒரு மூட்டை எள்ளை ரோட்டரியில் ஆட்டினால் $1\frac{1}{4}$ - $1\frac{1}{2}$ ஆடம் வரை எண்ணெய் எடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். (1 ஆடம் = 64 சேர்). செக்கில் ஆட்டினால் $\frac{1}{4}$ ஆடம்எண்ணெய் குறைவாகத்தான் எடுக்க முடியும் என்கின்றனர். எண்ணெய் பிண்ணாக்கில் தங்கிவிடும். மரச் செக்கிற்கும், மின்சாரத்தில்ஓடும் ரோட்டரிக்கும் வித்யாச மில்லையா? பிண்ணாக்கில் இருக்கும் கடைசி சொட்டு எண்ணெய் விழும் வரை அதை கசக்கிப் பிழிந்து விடுகிறது ரோட்டரி மில் உலக்கை!

செக்கில் எண்ணெய் ஆட்ட 1 மூட்டை எள்ளுக்கு ரூ. 8 முதல் ரூ. 12 வரையில் சிலவாகும், ஆனால்

ரோட்டரியில் ரூ. 4தான் ஆகிறது. ஆகவே இது லாபமல்லவா?

ஆனல், தென்னுட்டில் செக்கு எண்ணெய்க்கு எப்பொழுதுமே கிராக்கி அதிகம்! அதன் ருசியே வேறுதான்! இட்லிக்கு சாம்பாருடன் செக்கு எண்ணெய்யும் சேர்ந்து விட்டால்? ஆகா! நாக்கில் ஜலம் சொட்டுகிற தல்லவா? ரோட்டரியில் எடுக்கப்பட்ட எண்ணெய் அவ்வளவு ருசியாக இருப்பதில்லே. மின்சாரத்தில் ஓடும் எண்ணத்தில் எண்ணெய் முறிந்து விடுகிறது என்கின்றனர்.

பந்தம் காய்ச்சுவதற்கு முன் எடுக்கப்பட்ட செக்கு எண்ணெய் குழந்தைகளின் கண்களுக்கு கட்டுவதற்கு ஒரு சிறந்த மருந்தாக கருதப்படுகிறது. செக்கில் எடுக்கப்பட்ட (தேங்காய், எள், கடலே) பிண்ணுக்குகளே சிலர் தின்பண்டமாக உபயோகின்றனர். ஆடு, மாடுகளும் இதைச் சுவைத்து தின்பது போல் ரோட்டரி புண்ணுக்கை சாப்பிடுவதில்லே. அதில்தான் எண்ணெய்சத்து வறண்டு கிடக்கிறதே!

இப்போது ஒரு நகரில் குறைந்த பட்சம் இரண்டு ரோட்டரிகளாவது ஓடிக்கொண்டிருக்கின்றன எனலாம். ரோட்டரிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது! எண்ணெய் வியாபாரிகளின் தேவைக்குப் போதுமான எண்ணெயை செக்குகளால் தயாரித்து கொடுக்க முடியாமற்போவதே இதற்குக் காரணமாகும்.

மரச் செக்குகளும் நமக்குத் தேவைதான். நம்நாட்டின் கிராமத் தொழில் அல்லவா அவை! அவைகள் அழிந்துவிடக் கூடாது!

யந்திரங்களின் முன்னேற்றத்தால் எத்தனேயோ கைத்தொழில்கள் ஆதரிப்பாரற்று மறைந்து விட்டன. மறைந்து கொண்டும் வருகின்றன. அவற்றைப் போல் தற்போது இச் செக்குகளும் நாளாவட்டத்தில் ஆதரவிழந்து, மறைந்துவிடுமோ என்று பயப்பட வேண்டிய நிலே ஏற்பட்டிருக்கிறது. கைத்தொழில் அபிவிருத்திக்காகப் பாடுபடும் அரசாங்கம் இதனேப் போன்ற இன்றியமையாத தொழில்களின் வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டியது அவசியமாகக் கருதப்படுகிறது.

நம் நாட்டில் வெகு காலமாக வழங்கிவரும் 'செக்கில் இட்ட எள்ளேப்போல் தவிக்கிறேன்!' 'செக்கு உலக்கைபோல நிற்கிருயே!' என்கிற சிலேடை சொற்களும் மறைந்துவிடக் கூடாதல்லவா? ★

உலகில் பாக்யவான்?

1×8= 8 ஓரெட்டில் ஆடாத ஆட்டமும்,
2×8=16 ஈரெட்டில் கற்காத கல்வியும்,
3×8=24 மூவெட்டில் நடவாத திருமணமும்,
4×8=32 நாலெட்டில் பெருத பிள்ளேயும்,
5×8=40 ஐயெட்டில் தேடாத பொருளும்,
6×8=48 ஆறெட்டில் சுற்ருத தேசமும்,
7×8=56 ஏழெட்டில் சாகாத சாவும்,

பயனற்றவையாகும். இவற்றை அடைபவனே உலகில் பாக்யவான் என்று கருதப்படுகிருன்.

—எஸ். சந்திரசேகரன்.

கோட்டை மியூஸியம்

இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் மூன்று நூற்றுண்டுகளாக இருந்த தொடர்பை ஞாபகச் சின்னமாக வைப்பதற்காக ஒரு மியூஸியம் ஏற்படுத்த வேண்டும் என்று கமாண்டர் கர்னல் டி. எம். ரீட் ஜனவரி 1946–ல் முன்வந்தார். இந்த மியூஸியம் 1948-ல் தான் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்தபின் ஆரம்பிக்கப்பட்ட மியூஸியம் இது ஒன்றுதான்.

மியூஸியத்தில் தென்னுட்டினர் உபயோகித்த போர்க் கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு காணப்படும் பீரங்கிகள், துப்பாக்கிகள், குண்டுகள் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் உபயோகிக்கப்பட்டவை.

கோட்டைக்குள் 1680 முதல் இருந்து வரும் ஸெயிண்ட்மேரி மாதா கோவிலின் சில வெள்ளி சாமான்களும் மற்றும் பல மாதா கோயில் சாஸனங்களும் இடம் பெற்றிருக்கின்றன. 1753 பிப்ரவரி 18உ கிளைவுக்கு மணமான கல்யாணப்பதிவும் ரெஜிஸ்தரில் காணப்படும் முக்கியமான அம்சம். லார்ட் கிளைவ், வெல்லஸ்லி, வில்லியம் பெண்டிங், லார்ட் கார்ன்வாலிஸ் முதலியவர்கள் எழுதிய 40 கடிதங்களும் இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

கிழக்கிந்தியக் கம்பெனியில் சேவை செய்து (1767 முதல் 1877 வரை) புகழ்பெற்ற இந்திய சிப்பாய்கள் பெற்ற பதக்கங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரின் மீது 1943 அக்டோபர் 12உ ஒரு ஜப்பானிய விமானம் எறிந்த குண்டின் ஒரு துண்டை இந்த மியூஸியத்தில் காணலாம். முதல் உலக யுத்தத்தில் சென்னை நகர் நோக்கி (1914 செப்டெம்பர்) எம்டன் கப்பல் வீசிய குண்டின் ஒரு பகுதியும் அக்குண்டின் உலோக உரையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

பல இடங்களில் சுற்றிவிட்டு வந்துள்ள கார்ன்வாலிஸ் சிலை இங்கு இடம் பெற்றிருக்கிறது. இந்த இடமும் இதற்கு நிலைத்ததா என்று தெரியவில்லை. பக்கத்திலுள்ள தோட்டத்திற்கு இவரை அனுப்பிவிடலாமா என்ற யோசனையும் இருந்து வருகிறதாம்.

இக்கோட்டை மியூஸியத்தில் உள்ள ''லாங்ஹால்'' என்ற மண்டபம் மிகச் சரித்திர முக்கியத்துவம் பெற்றது. பங்குமார்க்கெட்டாக முதலில் இது உபயோகிக்கப்பட்டதாம். பின்னர் கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரிகள் தங்கள் விற்பனைக்கான பொருள்களை காட்சிக்கு வைக்க இந்த இடத்தை உபயோகித்தார்களாம். பின்னர் கிளைவ் கவர்னராக இருந்தபோது இந்த இடத்தை விருந்துகளுக்காக உபயோகித்தாராம்.

இப்போது மிக அருமையான வர்ண உருவப்படங்கள் இங்கு இடம் பெற்றுள்ளன. இதில் ஒன்று பிரபல சைத்ரிக நிபுணர் ராஜா ரவிவர்மா வரைந்ததாகும்.

மாஜி கவர்னர் ஸர் ஆர்ச்சிபால்ட் நை என்பவர்தான் இந்த மியூசியத்தை ஆரம்பித்து வைத்தவர். சர்க்கார் மாளிகையில் உபயோகிக்கப்பட்டு வந்த உயர்ந்த பீங்கான் சாமான்களை எல்லாம் காட்சியில் வைக்க இந்த மியூஸியத்திற்கு சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா கொடுத்து விட்டார்.

சூபரிண்டெண்டாக இருந்து வரும் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணஸ்வாமியும் க்யூரேட்டர் ஸ்ரீ விஜயராகவனும் இம் மியூஸியம் விருத்தி பெற்று இந்நிலை வருவதற்கு காரணமானவர்கள். ★

கோட்டை மியூஸியம்

சரித்திர முக்கியத்வம் பெற்ற ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள இந்த மியூஸியத்தில் சென்னை நகரின் 300 வருஷ சரித்திர சம்பந்தமான பொருள்கள் அடங்கியுள்ளன.

கல்கத்தாவில் இதேபோன்ற ஒரு மியூஸியமும், டில்லியில் மொகலாயர் ஆட்சி சம்பந்தப்பட்ட ஒன்றும் உள்ளன. சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு வேண்டிய அருமையான சில பொருள்கள் சென்னை கோட்டை மியூஸியத்திலுள்ளன. மியூஸியத்தை இன்னும் நன்கு விஸ்தரிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

போட்டோக்கள் : சந்தாமியான்



சரித்திரப் பிரசித்தி பெற்ற 'லாங்ஹால்' - இருதோற்றங்கள்.





ஊர் சுற்றிய சிலை

சலவைக் கல்லாலான இந்த கார்ன்வாலிஸ் சிலை, ஹாரா[illegible]ருக்கு எதிரிலிருந்து கோட்டைக்கு வந்து, பின்னர் கன்னிமரா லைப்ரரிக்குச் சென்று, இப்போது கோட்டை மியூசியத்திற்கு வந்துள்ளது. இந்த இடமும் அதற்கு நிரந்தரமா என்பது தெரியவில்லை.

208591
சென்னை-600 008

திப்புசுல்தான் தன் குமாரர்களை பிரிட்டிஷாரிடம் ஒப்படைக்கும் காட்சி. சென்னை சிப்பாய்கள் பெற்ற பதக்கங்கள்.





கர்நாடகத்தை ஆண்டுவந்த நவாப்களின் பல்லக்கு:
சரித்திரப் பிரசித்தமான பல கடிதங்கள்.



பறங்கியர்காலப் போர்க்கருவிகளும் இக்காலத்திய பிரங்கியும்.



இந்திய சிப்பாய்கள் முன்னர் கையாண்ட போர்க்கருவிகள்:
தற்காலத் துப்பாக்கி ரகங்கள்.



சென்னைமீது ஜப்பான் விமானங்கள் வீசிய குண்டுகளின் பகுதிகள்.
துறைமுகக் கிணறு ஒன்றில் அகப்பட்ட பர்மிய புத்தர்.

மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

உப்பிட்டவரை...

இரண்டாண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாலை 7 மணிக்கு ஒரு வழிப்போக்கர் எங்கள் வீட்டுக்கு வந்து உணவு கேட்டார். நாங்கள் அவருக்கு அன்போடு உணவு அளித்தோம். அவர் ஆகாரம் சாப்பிட்ட பின்பு சொன்னார். ''நான் ஒரு குடும்பஸ்தன். என் அண்ணன் மாயவரத்தில் வேலையில் இருக்கிறார். அவரைப் பார்க்கச் சென்றேன். அங்கு அவர் இல்லை. பின்னர் ரயிலுக்கும் உணவுக்கும் பணம் இல்லாது பசியுடன் நடந்து வந்தேன். என் பசி தீர்த்த உங்களுக்கு என் நன்றி'' என்று கூறி முடித்தார். அவர் சொந்த ஊர் கருப்பூர் என்றும் சொன்னார். அவர் கூறி முடித்த பொழுது அவர் கண்களில் நீர் துளிர்த்தது.

இது நடந்த ஓராண்டுக்குப் பின் நானும் எனது நண்பனும் கருப்பூருக்கு வடக்கே சில சரக்குகள் கொள் முதலுக்குச் சென்று இருந்தேன். திரும்பும்போது மாலை ஏழு மணி ஆகிவிட்டது. அங்கிருந்து புறப்படும் கடைசி பஸ்ஸை அரை பர்லாங் தூரத்தில் ஓடி வந்தும்கூட தவறவிட்டு விட்டோம். அது ஒரு பயங்கரமான பாதை; கையில் ரூ. 100 ரொக்கத்துடன் அந்தி இருட்டில் நடந்து வந்து கொண்டிருந்தோம். ஓர் திருப்பம் வந்து திரும்பிய பொழுது சிலர் முகமூடியுடன் எங்களைப் பணம் கேட்டு பயமுறுத்தினர். அப்பொழுது என் உடம்பு படபடத்தது. நெஞ்சு துடிதுடித்தது. பயத்தால் வியர்வை கொட்டியது. சிறிது தாமதம் செய்து கொண்டிருந்தோம். எதிரே சிலர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர். சைக்கிள் சத்தம் கேட்டு திருடர்கள் ஓடிப்போய் விட்டனர். அவர்கள் வந்தவுடன் எங்களுக்கு தைரியம் பிறந்தது. அதில் ஒருவர் என்னை தைரியமூட்டி, என்னையும் என் நண்பனையும் அந்த சைக்கிளிலே ஏற்றி, அருகாமையிலிருந்த ஓர் ஊரில் கொண்டு போய் விட்டார். நாங்கள் இருவரும் அவருடன் மிகவும் நன்றியோடு பேசிக்கொண்டிருந்தோம். பின் விடை பெற்றோம்.

அது யார் தெரியுமா? நான் இரண்டாண்டுகளுக்கு முன்பு அன்னமிட்டு ஆதரவு செய்தவர் தான் அவர்!

எஸ். பாலசுந்தரம்,
நரசிங்கம்பேட்டை.

என் தவறு!

அன்றைக்கு மறுநாள் காலை எங்கள் ஆருயிர் நண்பனுக்கு திருநெல்வேலியில் கல்யாணம். நாங்கள் யாவரும் முதல் நாள் இரவு திருச்சியில் சந்தித்து, அங்கிருந்து, முகூர்த்தம் மறுநாள் காலையிலிருந்தபடியால், இரவு திருநெல்

வேலிக்குச் செல்லும் செங்கோட்டை பாஸஞ்சரில் போகத்தீர்மானித்து, ஜங்ஷனை வந்தடைந்தோம். செங்கோட்டை பாஸஞ்சர் திருச்சி ஜங்ஷன் சரித்திரத்திலேயே சரியான நேரத்திற்கு வந்து சேராது. இரவு 10-10-க்கு வந்து 10-40-க்கு புறப்பட வேண்டிய இவ்வண்டி என்றும் இரவு 11-மணிக்கு முன்னே அல்லது அரை மணி தாமதத்திற்கு குறைந்தோ வராது. இது திருச்சி பிரசித்தம். இது எனக்கும் அனுபவ முறையில் தெரியுமாகையால், நண்பர்களிடம் சொல்லி யாவரும் ஏகமனதாக அன்று முதல் காட்சி சினிமா பார்த்துவிட்டு, ஹோட்டலிலேயேசாப்பிட்டுவிட்டு ஜங்ஷன் வந்து. டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு முதல் பிளாட்பாரத்தை அடைந்தோம். மணி பார்த்தபோது மணி 10-42. நாங்கள் குஷியாக அரட்டை யடித்துக் கொண்டே 6-ம் நெம்பர் பிளாட்பாரத்தை அடைந்தபோது, மணி 10-46. பிளாட் பாரத்தில் ஜனப் போக்கு வரத்து குறைந்து, காலியாக காணப்பட்டது.என் நண்பன், "இந்த டிரெயினில் கும்பலே இருக்காதோ?" என்றான். அதற்குள், "தினமும் கும்பல் இருக்கும், நம்ப அதிர்ஷ்டம் நல்ல வேளையாக இன்னிக்கு கும்பல் இல்லை, இன்னிக்கும் குறைந்தது ஒரு மணி நேரம் லேட்டாக வரும்" என்று நான் சொல்லி, என் முந்திய வாக்குகளை உற்சாகத்துடன் பலப்படுத்தினேன். எதிரே கண்ட போர்ட்டரை நாங்கள் தைர்யமாக, "இன்னிக்கு செங்கோட்டை எத்தனை மணி லேட்டப்பா?" என்றோம். "இன்னிக்கு 10-10-க்கு வந்து, 10-40-க்கு போயிட்டு துங்களே!" என்றான் அவன். என்னால் இந்த நிலைக்கு வந்த என் நண்பர்கள் என்னை மனமார சபித்தனர். மறு நாள் நண்பன் கல்யாணத்திற்கு அரை டஜன் தந்திகள் பறந்தன. என்னால் ஏற்பட்ட இந்த ஏமாற்றத்தை என் நண்பர்களும் நானும் இன்று வரை மறக்கவில்லை.

கண்ணன் நாராயணன்,

.......;........

சாமர்த்தியசாலி !

நண்பர் மீனாக்ஷிசுந்தரம் மிக சாமர்த்தியசாலி எனப் பெயர் பெற்றிருந்தார். அவர் சாமர்த்தியத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை. எனக்கு எப்போதாவது அவருடைய சாமர்த்தியத்தை மட்டம் தட்ட வேண்டும் எனத் தோன்றிற்று.

ஒரு நாள் இரவு ஒரு திருடன் அவர் வீட்டினுள் நுழைந்து விட்டான். நான் அவன் வீட்டினுள் நுழைவதைப் பார்த்தும், பேசாமலிருந்தேன். திருடனை நான் பார்த்தேன். இந்த சமயம்தான் மீனாக்ஷி சுந்தரத்தின் சாமர்த்தியத்தைப் பரிசோதிக்க எண்ணினேன். ஆகையால் நான் திருடனையே கவனித்துக் கொண்டு மேலே என்ன செய்யப் போகிறான் என்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

பிறகு அவன் சப்தம் செய்யாமல் மீனாக்ஷிசுந்தரத்தின் மனைவியின் அருகில் சென்றான். அவன் அக்கம் பக்கத்தில் பார்த்துக் கொண்டு, அவர் மனைவியின் சங்கிலியை அறுத்து விட்டான். அவரது மனைவி உடனே விழித்துக் கொண்டு பயமிகுதியால், "ஐயோ! என் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடுகிறான். அவனைப் பிடியுங்கள். திருடன்! திருடன்!" என்று கூவினாள்.

இச்சமயத்தில் மீனாக்ஷிசுந்தரம் எழுந்து தன் மனைவியை நோக்கி பலத்த குரலில், "பித்தளை சங்கிலி தானே! போனால் போகிறது. படுத்துத் தூங்கு" என திருடன் காதில் விழும்படியாகக் கூறினார்.

மறுநாட் காலை அவர்கள் வீட்டுக் கொல்லையில் அந்தச் சங்கிலி கிடந்ததைக் கண்டேன். உண்மையில் திருடனே அதை பித்தளைச் சங்கிலி என்று ஏமாந்து போட்டுவிட்டுச் சென்றிருப்பதை உணரவும், என்னால் மீனாக்ஷிசுந்தரத்தைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

வி. கணேசன்,
சென்னை-8

புத்தகங்கள்

'புதுமைவாணன்'

உணவு, உடைத் தேவைகளுக்கு அடுத்தபடி உலகில் மனிதனுக்கு அத்தியாவசியமானது அறிவே யாகும். அறிவுக் கதிரவனின் ஒளிக் கிரணங்களை உலகில் அள்ளித் தெளிப்பவை புத்தகங்களே. கல்வி யறிவைத் தூண்டி, மன வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதில் அவை முதன்மையானவை. அறியாமையை விரட்டி, அடிமையைப் போக்கி, மனிதன் சமுதாயத்தில் தன் உரிய ஸ்தானத்தை உணர்ந்து, வாழ்வை அதற்கேற்ப அமைத்துக்கொள்ள அவை உதவுகின்றன.

காலம் என்ற கள்வன் கவர்ந்து செல்லாதபடி மனித அறிவை இடம், பொருள், ஏவல் என்ற நிர்ப்பந்தங்களை மீறி, வாழையடி வாழையாக வரும் சந்ததிகளுக்குப் பயன் பெருமாறு செய்பவை புத்தகங்களே.

பேரறிஞர்களின் சீரிய கருத்துக்களை, ஆராய்ச்சி உலகின் அனுபவ உண்மைகளை, கலைகளின் எழிலையும் இன்பத்தையும், கருத்துலகின் கல் வெட்டுக்களையும் எழுத்துருவில் தாங்கி நிற்பவை புத்தகங்களே.

புத்தகங்கள் மனித மூளையின் பரிணாமத்தை அளவிடும் கருவிகள். நாகரிகப்பாதையில் உலகம் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறிப்பிடும் பல்வேறு மைல் கற்கள்.

புத்தகங்களைக்'காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி' எனலாம் இறந்த காலத்தை ஊடுருவும் தூரதரிசினிகள் எனலாம்.

நாகரீகத்தின் நவ அருணோதயத்தில் மக்கள் நிலை—பழந்தமிழர் வாழ்க்கை முறை—இந்துஸ்தானத்தின் பொற்காலம்—அந்நியர் ஆட்சியில் இந்தியா—நாகரீக கிரீஸ்—ஏகாதிபத்திய ரோம்—நெப்போலியனின் பிரான்ஸ்—ஜார்கால ரஷ்யா......இவை போன்ற பல்லாயிரம் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் படித்தறிய வேண்டுமானால், புத்தகங்களின் உதவி கொண்டே அது சாத்தியமாகும். நரை திரையின்றியே சரித்திரத்தை நன்கறிய அவை உதவுகின்றன. புத்தகங்களை, 'இறந்த காலத்தை நிகழ் காலத்தோடு இணைக்கும் தங்கப் பாலம்' என்றும் அழைக்கலாம்.

புத்தகங்களே அறிவுலகத்தின் திறவுகோல்கள். புத்தக மில்லாத அறையை உள்ள மில்லாத உடலிற்குஒப்பிடுகிறான்ஸிஸரோ என்ற ரோம அறிஞன். 'உயர்ந்த நூல் நிலையமே உண்மையான கல்லூரி' என்கிறான் கார்லைல். ஆம், நூல் நிலையம் ஒரு அறிவுச் சுரங்கமே. ஏனெனில் மேதாவி மூளைகளின் ஒளி வீசும் ஆழ்ந்த அறிவை, உன்னத சிந்தனையின் மின் வெட்டுகளை. அநுபூதி பெற்ற மகான்களின் அறிவுரைகளை, கவிஞர்களின் கற்பனை எழுப்பிய சொற் சித்திரங்களை—வண்ணப் புதுமைகளை அங்குதான் நாம் ஒன்று சேரக் காணமுடியும்.

வாழ்வை உருவாக்கும் சக்திகளில் உயர்ந்த உண்மையான புத்தகங்களைப்போல் வேறு எதுவுமே இல்லை எனலாம். உள்ளத்தைப் பண்படுத்தி உணர்ச்சிகளுக்குச் செயலுருக் கொடுக்கின்றன. அவை இறந்த காலத்தின் பல்வேறு குறைபாடுகளைச் சுட்டி. வருங்காலத்திற்கு, வாழ்வின் படிப்பினையைப் போதிப்பதில் தலைசிறந்தன. ஆர்வத்தைத் தூண்டித் தன்னம்பிக்கையைத் தட்டிக் கொடுத்து, மனித லட்சியங்களை வளம் படுத்துகின்றன. மனிதனுள் மறைந்து கிடக்கின்ற சக்திகளை வெளிக் கொணர்வதில் பெரியார்

களின் வாழ்க்கை வரலாறுகள் சிறந்த சாதனங்களாம். சில சமயங்களில் பொழுது போக்கிற்காக ஆரம்பித்த படிப்பு, சற்றும் எதிர்பாராத விதத்தில் சிலரின் வாழ்வையே அடியோடு மாற்றி விட்டிருக்கிறது.

பெஞ்சமின் பிராங்களின் பிற்காலத்தில் தான் அடைந்த புகழிற்கு இளமையில் 'காட்டன் மேதர்' எழுதிய "நன்மை செய்தல்" பற்றிய கட்டுரைகளைப் படித்தது ஒரு முக்கிய காரணம் என்று சொல்லியுள்ளார்.

ஆல்பியரி என்ற அறிஞர் இலக்கியத்தில் பற்றுக்கொண்டது 'ப்ளூட்டார்க்'கின் வாழ்க்கை வரலாற்றைப் படித்ததினால் தான்.

'ஏசுவின் சங்கம்' ஏற்பட்ட கதையே வினோதமானது. பாம்பெலுனா முற்றுகையின்போது, ரணகாயமடைந்த லயோலா என்ற சிப்பாய், ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடந்தான். தன் ரண உபாதையைச் சற்று மறந்திருக்கப் படிக்க ஏதேனும் ஒரு புத்தகம் கேட்டான். அவனுக்குக் கிடைத்தது "அடியார்களின் வாழ்க்கை" என்ற புத்தகமாகும். அதைப் படிக்கையில் அவனுள் நிகழ்ந்த போராட்டம், மன எழுச்சி தான் பிற்காலத்தில் பல்லாயிரவரின் வாழ்வை மாற்றியமைத்த 'ஏசு சங்க'மென்ற சீர்திருத்த மதஸ்தாபனத்துக்குக் காரணமாயிருந்தது.

கத்தோலிக மத எதிர்ப்பியக்கத்தின் தந்தையும், மறுமலர்ச்சி யுகத்தின் விடிவெள்ளியுமான மார்டின் லூதரின் வாழ்வை மாற்றியமைத்தது, 'ஜான் ஹஸ்'ஸின் வாழ்வும் நூல்களும் ஆகும்.

பிரான்ஸ், அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளுக்குக் காரணம் ரூஸோ என்ற அறிஞர் எழுதிய புத்தகங்களேயாகும்.

டாக்டர் வுல்ஃப் என்பார் மதப் பிரசாரக வாழ்வை மேற்கொண்டது 'பிரான்ஸிஸ் சேவியரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்ததின் விளைவேயாகும்.

> "புத்தகம் காலம் என்ற பெருங் கடலில் எழுப்பப்பட்டிருக்கும் கலங்கரை விளக்கம். நூல்களைப் படிக்கப் படிக்க, அறிவு வளரும்; விரியும்; அறிவே ஆனந்தம்; அறிவே அணிகலம்; அறிவே சக்தி. தனிமையில் நாம் இன்பம் அனுபவிப்பதற்கும், நமது மனக்குறைகள் மாறுவதற்கும், எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து முடிவு கட்டுவதற்கும் புத்தகங்கள் படித்தல் அகண்ட சக்தி வாய்ந்த கருவியாகப் பயன்படுகிறது." — பேக்கன்.
>
> "புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தில் ஆகாரத்தையே மறந்தேன்; துயரங்களை மறந்தேன்; வயோதிகம் வந்தடைவதைக் கூட நான் கவனிக்கவில்லை.",
> — கன்பூஷியஸ்.

திருக்குறள், பகவத்கீதை போன்ற நீதி நூல்கள் நம் நாட்டினரின் மனதை எவ்வளவு தூரம் ஈர்த்துள்ளன என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மகாத்மா காந்திஜியின் வாழ்வில் கீதையும், ராமாயணமும் எத்தகைய முக்கியத்துவம் வகித்தன. காந்திஜியின் 'சத்திய சோதனை' தான் எத்தனை பேருடைய வாழ்வை அடியோடு மாற்றி விட்டிருக்கிறது!

இன்று தமிழ்நாட்டில் நாம் காணும் புதிய விழிப்பிற்கு—சக்தி பிரவகிக்கும் மகத்தான மறுமலர்ச்சிக்கு — பாரதியாரின் கவிதைகளும், வ. ரா., புதுமைப்பித்தன், கல்கி ஆகியோரின் நூல்களும், வாழ்வுமே தான் காரணம்.

மனவளர்ச்சிக்கும், ருசிக்கும் ஏற்ப, இன்பமும் பயனும் அளிக்க தத்துவங்கள், இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள், நவீனங்கள், நாடகங்கள், பிரயாணக் கட்டுரைகள், விஞ்ஞான வெளியீடுகள், வாழ்க்கையனுபவங்கள் போன்ற எண்ணிறந்த சிறந்த புத்தகங்களை நாம் படித்தல் வேண்டும். ★

சென்னை நகரில் குடிதண்ணீர் விநியோகம்

டாக்டர் எஸ். வி. கணபதி

1870-ம் வருஷத்திற்கு முன் வரை, இப்பொழுது போல் நினைத்த இடமெல்லாம் தண்ணீர் குழாய்கள் கிடையாது. சென்னை நகர மக்கள் தங்களுக்குத் தேவையான நீரை குளங்களிலிருந்தும், கிணறுகளிலிருந்துமே பெற்று வந்தனர். ஆனால் குளங்களில் பலவிதமான அசுத்தங்கள் சேரும். கிணறுகளும் சரியான முறைப்படி சுற்றிலும் பாதுகாக்கப் படாததால், சாக்கடை முதலான அசுத்தத் தண்ணீர் வெளியே விலக்கப்படாமல் கிணற்றைச் சுற்றியுள்ள பூமியின் வழியே இறங்கி, கிணற்று நீருடன் கலந்துவிடும். அத்தண்ணீரைக்குடித்ததால்அடிக்கடி விஷஜுரங்களும் தொத்து நோய்களும் மக்களிடையே பரவலாயின. இதற்குக் காரணம் நல்ல சுத்தமான தண்ணீர் குடிப்பதற்குக் கிடைக்காததே என்று நாளடைவில் நகரவாசிகளும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் உணர்ந்தார்கள். ஆதலால், சென்னை சர்க்கார் சுத்தமான குடி தண்ணீர் கிடைக்க வழி தேடலாயினர். பல நிபுணர்களின் ஆலோசனைகளையும், திட்டங்களையும் பரிசீலனை செய்து, கடைசியாக ஸி. எப். ப்ரேஸர் என்ற ஆங்கிலேயரின் திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

பிரேஸர் திட்டம்

இத்திட்டத்தின்படி 1870-ம் வருஷம் சென்னைக்கு வடகிழக்கேயுள்ள "கோற்றலயாறு" என்ற நதியிலிருந்தும் அதன் உபநதிகளான "காட்டாங்கால்," 'பூசிக்கா' விருந்தும் தண்ணீரை சென்னை நகரவாசிகளின் உபயோகத்திற்குக் கொண்டுவர முயன்றனர்.

டாக்டர் எஸ். வி கணபதி சென்னை கார்ப்பரேஷனில் குடிதண்ணீர் ஆராய்ச்சியாளராக சேவை செய்து, பதவியிலிருந்து விலகியவர். குடி தண்ணீர் விநியோக விஷயமாக இவர் அதிக அனுபவம் பெற்றவர். அவருடைய இக்கட்டுரை சென்னை குடி தண்ணீர் விநியோக வரலாற்றை விளக்குகிறது.

கோற்றலயாறு சென்னையிலிருந்து வடமேற்கே 100 மைல் தூரத்திலிருக்கும் சித்தூர் ஜில்லாவிலுள்ள கிழக்கு மலைத்தொடரைச் சேர்ந்த நகரி மலையில் உற்பத்தியாகிறது.

மழைக்காலங்களில் வடகிழக்கு பருவமழை பெய்யும் பொழுது இந்நதியில் அடிக்கடி பெரும் வெள்ளம் வரும். அதாவது அக்டோபர் 15-தேதி முதல் நவர்பர்



1. சத்தியமூர்த்தி ஸாகர்
2. சோளவரம் நீர்த்தேக்கம்
3. புழலேரி நீர்த்தேக்கம்
4. கிழ்ப்பாக்கம் 'வாட்டர் ஒர்க்ஸ்'



தண்ணீர் வடிகட்டிகள் அமைப்பு

30-தேதி வரையில் வடகிழக்கு பருவமழை சென்னையிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பெய்யும். ஒரு வருஷத்தில் சராசரி 45 அங்குல மழை பெய்கிறது என்றாலும் இப்பொழுது 30 அங்குல மழை தான் சாதாரணமாகப் பெய்கிறது.

ஆகையால் கோற்றலையாற்றில் மழை காலத்தில் வரும் ஜலத்தையெல்லாம் சென்னை நகர உபயோகத்தின் பொருட்டு சேமிக்க வேண்டியிருந்தது.

அதற்காகச் சென்னையிலிருந்து 17-வது மைலிலுள்ள 'தாம்பரப் பாக்கம்' என்ற இடத்தில் கோற்றலையாற்றை மத்தியில் தடுத்து ஆறடி உயரமுள்ள ஓர் அணை கட்டப்பட்டது. மழைக்காலத்தில் வரும் வெள்ளமும் சாதாரண காலத்திலுள்ள ஆற்று நீரும் இவ்வணையால் தடுக்கப்பட்டு சுமார் எட்டு மைல் நீளமுள்ள கால்வாய் மூலம் ''சோளவரம் ரிசர்வாயர்'' என்ற பெரிய நீர் தேக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மறுபடியும் அங்கிருந்து மற்றொரு $3\frac{1}{2}$ மைல் நீளமுள்ள கால்வாய் மூலம் ''புழலேரி''க்குத் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. இவ்விரு பெரிய ஏரிகளில் மழைக்காலத்தில் வரும் தண்ணீர் சேமிக்கப்பட்டு, வெயிற்காலத்தில் ஆற்று நீர் வற்றிவிடும்போது உபயோகிக்கப்பட்டது. இவ்விரு ஏரிகளும்

சத்தியமூர்த்தி சாகரம்.



இயற்கையான நீர்த்தேக்கங்களல்ல. செயற்கை ஏரிகளேயாகும். மேலும் இந்த ஏரிகளைச் சுற்றிலும் பெய்யும் மழைநீர் வழிந்தோடி ஏரியில் விழுந்து தண்ணீரின் அளவைப் பெருக்குகிறது. ஆனால் புழலேரியிலிருந்துதான் சென்னை நகரத்திற்குத் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது.



கோற்றலையாறு தண்ணீர் புழலேரியில் கலக்கும் காட்சி.

இந்தத் திட்டம் 18·5 லக்ஷ ரூபாய் செலவில் 1870 ம் வருஷத்தில் பூர்த்தியாயிற்று.

புழலேரியிலிருந்து சென்னைக்கு எப்படித் தண்ணீர் வருகிறது என்று பார்ப்போம். இவ்வேரியிலிருந்து சென்னை கீழ்ப்பாக்கம் வரையில் சுமார் 7·5 மைல் நீளமுள்ள திறந்த கால்வாய் வெட்டி அதன் மூலம் கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள 'ஷாப்ட்டு'' க்கும் கொண்டு வந்து, அங்கிருந்து இரும்புக்குழாய் மூலம் நகரத்திற்கனுப்பப்பட்டது. ஆனால் சில வருஷங்களில் இம்முறையும் பிரயோஜனப்படவில்லை. ஏனெனில் புழலேரியிலிருந்து வரும் கால்வாய் திறந்திருந்ததால், அதில் பலவிதமான பாசி முதலான அசுத்தங்கள் சேர்ந்தன. மேலும் அடிக்கடி நடுவே உடைப்பு எடுத்துவிடும். தண்ணீரும் வீணாகப் போயிற்று. நகர சுகாதாரமும் பாதிக்கப்பட்டதே ஒழிய, ஒரு சீர்திருத்தமும் காணப்படவில்லை. மக்களுக்குத் தேவையான தண்ணீரும் கிடைக்கவில்லை. இச்சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பதே பெரிய கேள்வியாகி விட்டது நமது அரசாங்கத்திற்கு.

மேட்லி திட்டம்

தண்ணீர் சிறு கற்களின் வழியே வடிகட்டப்படுகின்றது.



மறுபடியும், மேட்லீ என்ற ஆங்கிலேயரின் திட்டப்படி தண்ணீர் விநியோகத்தைச் சீர்திருத்த முயன்றது அரசாங்கம். புழலேரியிலிருந்து மற்றொரு கால்வாயை கல்சுண்ணாம்புக் கட்டி, டத்தால் கட்டி அசுத்தம் சேராதபடி தடுத்து,



புழலேரி நீர்த்தேக்கம் - ஒரு காட்சி

புழலேரித் தண்ணீரை கீழ்ப்பாக்கத்திலுள்ள ''நீர் சேமிப்பு'' நிலயத்திற்கு கொண்டு வந்தார்கள். பிறகு அதே இடத்தில் ஓர் ''பம்பிங்'' ஸ்டேஷனும், 14 மணல் வடிதொட்டிகளும் 1914-ம் வருஷத்தில் கட்டி முடித்தார்கள். இந்த தொட்டிகள் 200 அடி நீளம், 100 அடி அகலம், 7 அடி ஆழம். இத்தொட்டிகளில் 23 அடி ஆழத்திற்கு மணல் பரப்பி யிருக்கும். அதற்குமேல் 4·5 அடி புழலேரித் தண்ணீர் தேக்கப்பட்டு, மணலின் மூலம் நிதானமாக வடிகட்டப்படும். ஒவ்வொரு தொட்டியும் நாளுக்கு ஒருகோடி காலன் தண்ணீர் வடி கட்டியது. அப்படி வடிந்த சுத்தமான தண்ணீர் பூமிக்கு அடியிலுள்ள மூன்று பிரும்மாண்டமான கல்கட்டிடமான குளங்களில் சேரும். ஒவ்வொரு குளத்திலும் 15 கோடி காலன் சுத்தமான தண்ணீர் சேமிக்கப்பட்டது. அங்கிருந்து யந்திர அமுக்கியால் அதிக வேகத்துடனும் விசையுடனும் நான்கு அடி விட்டமுள்ள இரும்புக் குழாய்களுக்குள் செலுத்தப்படுகிறது. இப்பெரிய குழாய்களிலிருந்து பல கிளைக்குழாய்கள் நகரத்தின் பல பாகங்களுக்கும் தண்ணீர் எடுத்து செல்லுகின்றன.

1914-ம் வருஷத்திலிருந்து 1922-ம் வருஷம் வரையில் நகரத்திற்கு வேண்டிய பாதித் தண்ணீரை வடி தொட்டிகள் மூலம் சுத்தம் செய்து மற்ற பாதி வடிகட்டப்படாத புழலேரித் தண்ணீருடன் கலந்து விநியோகித்தார்கள். அதற்குக் காரணம் போதுமான வடிதொட்டிகள் இல்லாததே. ஆதலால் 1924-ம் வருஷம் 3 புதிய வடி தொட்டிகளும், வடி கட்டின நீரை சேமித்து வைக்க நான்காவது பாதாள கட்டிடமும் கட்டினுர்கள். இதனுலும் எதிர்பார்த்த பலன் எதும் கிடைக்கவில்லை. பிறகு, பாதித் தண்ணீரை சுத்தம் செய்து, மற்ற பாதி வெறும் புழலேரித் தண்ணீருடன் ''க்ளோரின்'' மருந்து கலந்து விநியோகித்தார்கள். அதுவும் நன்றாக

சோளவரம் ஏரி



இருக்காமல் போகவே பொது ஜனங்கள் குறை கூறினார்கள். ஆதலால் விநியோகிக்கப்படும் தண்ணீர் பூராவும் "க்ளோரின்" கலந்து அனுப்பப்பட்டு வந்தது. இவ்வாறு, அவ்வப்பொழுது பல சீர்திருத்தங்கள் செய்து வந்தும், நகரமக்களுக்குத் தேவையான சுத்தமான நீர் கிடைக்கவில்லை. தண்ணீரில் துர்நாற்றம், முக்கியமாகக் கோடை காலங்களில் காணப்பட்டது. மேலும் கடந்த 40-50 வருடங்களில் சென்னை நகரத்தின் ஜனத்தொகைப் பெருக்கம் அதிகரித்து



கீழ்ப்பாக்கம் 'வாட்டர் ஒர்க்ஸ்'



தண்ணீரில் குளோரின் சேர்க்கும் சாதனம்.

விட்டதுடன், நகர விஸ்தீரணமும், 1946 வருஷம் சைதாப்பேட்டை, கிண்டி, செம்பியம் சென்னை நகருடன் சேர்ந்ததினால், பெரியதாகியது. ஆகவே முக்கியமாக நகர எல்லையில் வசிக்கும் ஜனங்களுக்குச் சரியானபடி தண்ணீர் கிடைக்கவில்லை. இதற்காக மறுபடி புழலேரியிலிருந்து மற்றொரு மூடு கால்வாயை 51லக்ஷ ரூபாய் செலவு செய்து, 1949-ம் வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

சத்தியமூர்த்தி சாகரம்

புழலேரியில் தேக்கப்பட்ட தண்ணீர் சென்னை நகரமக்களுக்கு குடிதண்ணீராக மட்டும் உபயோகப் படவில்லை. ஏரிகளின் சுற்றுப்புறங்களிலுள்ள 7500 ஏக்கர் நஞ்சை வயல்களுக்கும் 340 கோடி கன அடி நீர்பாசனத்திற்கு வருஷந்தோறும் உபயோகப்பட்டு வந்தது. தவிர சூரிய வெப்பத்தினால் வருஷம் 1100 கோடி கன அடி தண்ணீர் நீராவியாக மாறுகிறது. இதனால் 1935-1938 வருஷங்களில் சேர்ந்தாற்போல் பருவமழை அக்டோபர்-டிசம்பர் மாதங்களில் பெய்யாததினால் புழலேரியின் நீர் நகர சப்ளைக்குப் போதாமல் போய் விட்டது. இச்சமயம் திரு. சத்தியமூர்த்தி, நகர் மேயராக இருந்தார். அவருடைய தீவிர முயற்சியால், சென்னையிலிருந்து முப்பத்து மூன்றாவது மைலில் மறுபடியும் கொற்றலயார் நதியைத் தடுத்து பூண்டி என்ற இடத்தில் ஒரு பெரிய அணை

1940 வருஷத்தில் ஆரம்பித்து 1944-ம் வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்டது. அதுதான் சத்திய மூர்த்தி சாகரம். இதில் 2500 கோடி கன அடித் தண்ணீர் தேக்கப்படுகிறது. இதன் மூலம் பெரும்பாலான வெள்ளத்தைத் தேக்கி கோற்றலயாற்றின் மூலமாக அவ்வப்போது தேவையான நீரை புழலேரிக்குக் கொண்டு வருகிறார்கள்.

இப்பொழுது. சென்னை நகரம் பூராவும் விநியோகிக்கப்படும் தண்ணீர் புழலேரியிலிருந்து வரும் இரண்டு பெரிய மூடிய கால்வாய்கள் மூலம் கீழ்ப்பாக்கத்திற்கு வந்து சேர்ந்ததும் ஒரு சிறு அளவு ‘‘க்ளோரின்’’ சேர்க்கப்படுகிறது. பிறகு வடிதொட்டிகளில் ஆறு அங்குல மணல் மூலம் வடிகட்டி, சுத்தம் செய்யப்பட்டு, மறுபடியும் ‘‘க்ளோரின்’’ கலந்தே குழாய்கள் மூலம் அனுப்பப்படுகிறது.

சென்னை நகரத்திற்குத் தண்ணீர் விநியோகிக்க 42 மைல் நீளத்திற்குப் பெரிய குழாய்களும், (4·8 அங்குலத்திலிருந்து 9 அங்குல விட்டமுள்ளன.) 438 மைல் நீளத்திற்குச் சிறிய குழாய்களும் இருக்கின்றன. இவைகளைத்தவிர, 8 அங்குலத்திலிருந்து $2\frac{1}{2}$ அங்குலம் விட்டமுள்ள தெருக்குழாய்கள் உபயோகிக்கப்படுகின்றன.

கீழ்ப்பாக்கம் ‘வாடர் வொர்க்ஸி’லிருந்து சுமார் 3000 அடி தூரத்திலுள்ள ‘‘ஷாப்ட்’’ வரை 48 அங்குல விட்டமுள்ள இரு இரும்புக் குழாய்களிருக்கின்றன. அதில் ஒன்றிலிருந்துதான் நகரத்தின் பல பாகங்களுக்கும் ஐந்து பெரிய நடுத்தரக் குழாய்கள் பிரிந்து செல்லுகின்றன. இந்த ஐந்து குழாய்கள் பிரியும் இடங்களில் ஒவ்வொன்றுக்கும் வால்வு பொருத்தியிருக்கிறது. இவைகளால் நாள் முழுவதும் பல அளவில் ஓடிவரும் தண்ணீரைத்தடுத்து அனுப்பமுடியும்.

1946-ம் வருஷத்திற்கு முன்பு இருந்த சென்னை நகரத்தின்



புழலேரி—மற்றொரு காட்சி

சுற்றளவு 30 மைல் விஸ்தீரண மாகும். சுமார் 8-9 லக்ஷம் ஜனங் களிருந்தார்கள். அப்பொழுது தினப்படி சராசரி 27 கோடி காலன் தண்ணீர் நகரத்திற்கு விநியோகிக்கப்பட்டது. ஆனால் 1951 ஜனத்தொகைக் கணக்குப் படி சென்னையில் 14,29,374 ஜனங்கள் வசித்தனர். மேற் சொன்ன 27 கோடி காலன்களை வைத்துக் கணக்கிட்டால் தலைக்கு தினந்தோறும் 19 காலன் தண்ணீர் தான் கிடைத்துவருகிறது.

சென்னையில் 62,000 வீடுகளுக்கு குழாய்-இணைப்பு இருக்கிறது. இவற்றை யெல்லாம் நிர்வகிக்க கார்ப்பரேஷன் தண்ணீர் இலாகா இருக்கிறது. 2904 தீ அணைக்கும் வசதிகளும் 4102 பொதுஜனங் களுக்குக் குடிப்பதற்குக் குழாய் களும், 148 குளிக்க உதவும் குழாய்களும், 49 கால் நடைத் தண்ணீர் தொட்டிகளும் இருக் கின்றன.

தவிர, தண்ணீரை தினம் பரி சோதித்துப் பார்க்க பரிசோதகர் கள் இருக்கிறார்கள். நவீன சாதனங்களுடைய ரசாயன ஆராய்ச்சிசாலை ஒன்றும் கீழ்ப் பாக்கம் பம்பிங் ஸ்டேஷனுக்கு வெளியே இருக்கிறது. இவ் வாராய்ச்சி சாலையில் தினந் தோறும் தண்ணீர் தொட்டிகளி லிருந்து வடிகட்டிவரும் தண் ணீரையும், க்ளோரின் கலந்த தண்ணீரையும், அடிக்கடி பெரிய குழாய்களிலிருந்தும், கிளைக் குழாய்களிலுமுள்ள தண்ணீரை யும் தினந்தோறும் எடுத்து பரி சோதிக்கிறார்கள். இதற்கென ஒரு மோட்டார் வண்டியும் இருக் கிறது. இத்தண்ணீர் பரிசோதகர் நகரத்தின் சுகாதார அதிகாரியின் கீழ் இருக்கிறார்.

சென்னை நகரின் தண்ணீர் விநி யோகத் திட்டத்தை நிர்வகிக்க நகரசபை தண்ணீர் வரி விதித்து வருகிறது. ஆண்டுதோறும் வரும் மொத்த வருமானம் சுமார் 10 லக்ஷம் ரூபாயாகும். இதைத்தவிர, பெரிய பங்களாக்களுக்கு மீட்டர் வைத்திருப்பதால், அதன் மூலம் அதிகத் தண்ணீர் செலவு செய்த வர்களிடமிருந்து வருஷம் 12 லக்ஷம் ரூபாய் கார்ப்பரேஷனுக்கு வருமானம். ஆனால், தண்ணீர் இலாக்காவை நிர்வகிக்க 20 லக்ஷ ரூபாய் செலவாகிறது.

இதுவரை சென்னை கார்ப்ப ரேஷன் தண்ணீர் அபிவிருத்திக் காக 317 லக்ஷம் ரூபாய் செலவிட் டிருக்கிறது. ★

அகராதிப் பகுதி :

சின்னஞ்சிறு சொல்லுக்கு...?

ஆதி

—அதிசயம், அருகன், இடம், இறைவன், ஈடு, எப்பொருட்கு மிறைவன், எழுவாய், ஓர்தாளம், கடவுள், காய்ச்சற் பாஷாணம், சூத்திரம், சூரியன், தொன்மை, நேரோடல், பரமசிவம், பழமை, பிரதானம், பிரமன், புத்தன், மண்டலமாயோடல், மனவிருப்பம், மிருத பாஷாணம், முதல், வனப்பு, விஷ்ணு, வேர்.

ஆம்பல்

அடைவு, அல்லி, இசைக்குழல், ஊதிடுகொம்பு, ஒழுங்கு, ஓரெண், கள், குமுதம், சந்திரன், துன்பம். நெல்லி, பண், புளியாரை, மூங்கில், யானை.

திங்கள்

என். எஸ். வைத்யநாதன்

திங்கள் என்ற சொல், கிழமை, மாதம், சந்திரன் முதலிய பல பொருள்களில் வழங்கி வருகின்றது. ஒன்பது கிரகங்களில் இராகு, கேது ஒழிந்த மற்றைய ஏழும் வாரத்தின் நாட் பெயராய் விளங்குகின்றன.

'மார்கழித் திங்கள் மதிநிறை நன்னுளில்' என்னும் தொடர் ஆண்டாள் திருவாக்கு. இங்கு திங்கள், 'மாதம்' எனும் பொருளில் வந்துள்ளது. மாதந்தோறும் வெளிவரும் காரணத்தால் இவ்விதழ் 'திங்கள்' என்று பெயர் பெற்றது போலும். நான்கு அடிகளைக் கொண்டு விளங்கும் செய்யுள் நூல்கள் தமிழில் பல உளவேனும் 'நாலடியார்' என்றே ஒரு நூல் உண்டு. அதே போல மாதந்தோறும் வெளிவரும் இதழ்கள் சிலவற்றுள் இது 'திங்கள்' என்றே பெயர் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இனி, மதி போலும் மாண்புடைய காரணம் பற்றி, மதியின் பெயராம் திங்களை இது பெற்றுள்ளதோ என்று மதிக்கவும் இடமிருக்கின்றது. மதியம் தங்குறையை நீக்குவதினும், பிறர் குறையைப் போக்குவதையே தன் விழுமிய கடமையாகக் கொண்டுளது. இதைப் பெரியோர்க்கு உவமை கூறி:

''தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறை யிருளை நீக்கக் கருதாது உலகின்
நிறை யிருளை நீக்குமால் நின்று.''

என்று பாடியுள்ளனர். இத்திறத்தில் தன்னலமற்ற பணிபுரிவான் இதற்கு இப்பெயர் அமைந்ததோ என்று எண்ண இடமிருக்கின்றது.

'அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்.'

என்ற அடிகளால் சான்றோர் வரிசையில் இது எண்ணப்படும் என்று தோன்றுகிறது.

'திங்களை நாய் குரைத்தற்று' என்பது ஒரு பழமொழி. திங்களைப் பார்த்து நாய் குரைப்பதால் அதற்குத் தீங்கொன்றும் வந்துவிடாது. ஆனால், இத்திங்கள் தன்னை ஒருவரும் குறை கூறுத வகையில் தலைசிறந்த பணியாற்றும் என்று தெரிகின்றது.

இன்சொலால் அன்றி வன்சொலால் எவரும் மகிழார் என்ற உண்மையைக் குறிப்பிட, 'தண்ணென் கதிர் வரவால் பொங்கும் கடல், அழல் கதிரால் பொங்காது' என்ற உவமை கூறப்படுகிறது.

திங்களின் தோற்றம் மக்கட்கே அன்றி மாகடலுக்கும் மகிழ்ச்சி யளிக்கின்றது. திங்களின் கலைகள் குறைவதும் பின் நிறைவதும் வழக்கம். ஆனால் இத்திங்கள் கட்டுரைகளே கொண்டு மேன்மேலும் நிறைந்தே விளங்க வேண்டும். ★

நாடுகளிடையே தூது

கு. ராஜாராம்

நள மகாராஜன் மேல் காதல் கொண்ட தமயந்தி, அன்னத்தைத் தூது விடுத்ததாக இலக்கியத்தில் படித்திருக்கிறோம். தமது காதல் உள்ளத்தைத் தெரிவிக்கக் காதலர்கள் அஃறிணைப் பொருள்களையும் வாய்பேசாத பிராணிகளையும் தூது விடுத்ததாகக் கவிதைகள் பாடப்பட்டுள்ளன. ஒரு புலவர் புகையிலை விடு தூது என்ற நூலை இயற்றியுள்ளார். இன்னொரு கவிஞர் தமிழையே தூது விட்டதாகத் 'தமிழ் விடு தூது' என்ற அருமையான நூலைச் செய்துள்ளார். தமிழ் இலக்கியத்திலே தூது என்பது இலக்கியத்தின் ஒரு அம்சமாக இருக்கிறது.

காவியத்திலே சொல்லப்பட்டுள்ள தூதுகளெல்லாம் இரண்டு தனிப்பட்ட நபரிடையே செலவிடப் பட்டவையாகும்.

தனிப்பட்டோரிடையே தூது செல்வது போல நாடுகளிடையே தூது அனுப்புவது உண்டு. இது நெடுங்காலமாக நடந்து வருகிறது. இப்பழக்கம் சரித்திரத்தை விடப் பழமையானது என்று சொல்லலாம். மஹாபாரதத்தில் கிருஷ்ணன் தூது போனதாகப் படிக்கிறோம். கிரேக்க நாட்டில் தூது செல்லல் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது என்பது துஸிடைடிஸ் என்பவரது குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. தமிழ் நாட்டிலே புலவர்கள் சில சமயம் சமாதானத்தின் தூதுவர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

அந்தக் காலங்களில் ஒரு குறிப்பிட்ட காரியத்தை உத்தேசித்து ஒருவரைத் தூது அனுப்பி வைப்பது வழக்கம். தூதுவராக வந்திருப்பவர் கொடிய எதிரியின் நாட்டைச் சேர்ந்தவரான போதிலும் அவருக்கு மரியாதையும் கௌரவமும் கொடுப்பது வழக்கம். விசேஷ சலுகைகள் அளிப்பதும் உண்டு. போன காரியம் முடிந்ததும் தூதுவரின் வேலையும் முடிந்து போகும்.

செல்வாக்கும் திறமையும் வாசாலகமும் உள்ளவரையே தூது அனுப்பத் தேர்ந்தெடுப்பார்கள். தூது வேலையைச் செய்து முடிப்பதற்கு அபார சாமர்த்தியமும் நுண்ணறிவும் தேவை. போன காரியத்தில் வெற்றி பெறாமல் போனாலும் ஏற்கனவே உள்ள உறவையும் பாதிக்கும்படி செய்துவிட்டு வந்தால் எப்படி இருக்கும்?

தொன்றுதொட்டு நாடுகளிடையே தூது சென்று வரும் வேலையானது பதினைந்தாம் நூற்றாண்டில்தான் ஒழுங்கு படுத்தப்பட்டது. தூது செல்வது ஒரு தொழிலாக ஆயிற்று, தூதுவர் ஒரு உத்தியோகஸ்தராக ஆனார்.

பிற்பாடு 1815-ம் ஆண்டில் தூதுவருடைய அந்தஸ்தும் உத்தியோகம் சம்பந்தப்பட்ட விதிகளும், சர்வதேச ஒப்பந்தம் ஒன்றின் மூலமாக நிர்ணயிக்கப்பட்டன. இவையெல்லாம் ஐரோப்பாவில் நிகழ்ந்தவை.

சுதந்திரம் அடைந்துள்ள நாடுகளிடையே ஒப்பந்தங்கள் உண்டாகப் பேச்சு வார்த்தைகள் நடத்துவது தூதுவரின் முக்கிய வேலையாகும். அகில உலகத்திலுள்ள தேசங்களிடையே உள்ள உறவைப் பேச்சு வார்த்தைகள் மூலம் நிர்வகித்துக் கண்காணித்து வருவதுதான் தூதுவர்கள் செய்யும் ராஜதந்திரம் பொதிந்த காரியம் எனக் கூறலாம்

முன் காலங்களிலே தூதுவர்கள் நடத்தும் பேச்சு வார்த்தைகள் யாவும் இரகசியமாக நடைபெற்று வந்தன. அம்பலத்திற்கு அவை வரா அக்காலத்திய தூதுவர்கள் ஆட்சி புரியும் மன்னர்களின் கருத்தைப்

பிரதிபலிப்பவர்களாக மட்டும் இருந்தார்கள். ஆளப்படும் மக்களுக்கும் தூதுவருக்கும் யாதொரு சம்பந்தமும் இராது. அவர் மன்னரின் பிரதிநிதியாக மட்டும் இருப்பார்.

அநேக யுத்தங்கள், நாடுகளிடையே உறவு சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தச் செல்கின்ற தூதுவர்களின் ஏற்பாடுகளாகக் கூட இருந்திருக்கின்றன. ராஜதந்திர நிபுணர்களின் சேஷ்டைகளின் விளைவாக யுத்தங்கள் ஏற்படுவதுண்டு, இரகசிய உறவு முறைகளினால் இந்த மாதிரி விளைவுகள் ஏற்பட்டன என்று கூறுவதுண்டு. இருந்த போதிலும் இரகசிய முறையை முற்றிலும் கெடுதலானது என்று சொல்ல முடியாது. முதலாவது உலக யுத்தத்திற்குப் பின் வெளிப்படையான முறைகள் நடைமுறையில் கையாளப்பட்டன. இரகசிய முறை பழைய முறை என்று கருதப்பட்டது. 1914-ம் ஆண்டுக்கு முந்திய முப்பது வருஷங்களில் ஜெர்மனியால் ஏற்படக்கூடிய ஆபத்தைச் சமாளிப்பதற்காக பிரான்ஸ், இங்கிலாந்து, ருஷ்யா முதலிய நாடுகளிடையே நடந்து வந்த பேச்சுவார்த்தைகள் பழைய முறையில் இருந்து வந்தன.

1919-ம் ஆண்டில் சர்வ தேச சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட பின் சர்வ தேச நாடுகளிடையே உறவு முறையில் மாறுதல்கள் ஏற்பட்டன. தூதுவர்களின் செயல்முறைகளிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. வெளிப்படையாக அநேக காரியங்கள் செய்ய வேண்டி வந்தன.

மகாநாடுகள் கூட்டி நாடுகள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. ஆனால் எல்லா விஷயங்களையும் மகாநாடுகள் மூலமாகப் பேச முடியாது. அதுவுமல்லாமல் எல்லா விஷயங்களையும் வெளிப்படையாகப் பேசிக் கொண்டிருக்க இயலாது.

நாட்கள் செல்லச் செல்ல நாடுகளிடையே உறவு முறைகள் பல்வேறு மாறுதல்கள் அடைந்தன. ஆதலால் பேச்சு வார்த்தைகள் முறையும் அவற்றை ஒட்டி விளங்கி வந்தன. அத்தக் கலையிலும் அபிவிருத்தி ஏற்பட்டது. அரசியல் கருத்துக்கள், விஞ்ஞான முன்னேற்றம் இவை காரணமாகவும் மாற்றங்கள் விளைந்தன. இருந்த போதிலும் முன் காலத்து இரகசிய முறை அடியோடு நின்று போகவில்லை. டெலிபோன், கம்பி இல்லாத் தந்தி போன்ற சாதனங்கள் பேச்சு வார்த்தைகளுக்கு உதவலாயின.

தூதுவர் ஆட்சியாளரின் பிரதிநிதியாக மட்டுமின்றி, அவரது நாட்டு மக்களின் பிரதிநிதியாகவும் விளங்கி வரலானார். இப்போது தேசங்களிடையே உள்ள ராஜிய உறவு பற்றி மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளில் தூதுவரது வேலை நடைபெற வேண்டியிருக்கிறது. வர்த்தகம், பொருளாதாரம், சமூக உறவு முறைகளும் ஏற்பாடுகளும்நடைபெறுகின்றன. இதனால் ஒரு சுதந்திர நாட்டில் மற்ற சுதந்திர நாடுகள் தூதுவராலயங்கள் அமைக்க வேண்டி வருகிறது. தூதுவர் காரியாலயங்களில் சகல துறையைச் சேர்ந்த இலாக்காக்களும் ஏற்படுத்தப்படுகின்றன. வர்த்தகம், கலை, செய்திப் போக்கு வரத்து, தொழில் துறை, ஆகாயவிமானப் போக்கு வரத்து, கப்பல் போக்கு வரத்து இப்படிப் பல விஷயங்கள் சம்பந்தமாகப் பணிகள் செய்ய வேண்டியிருக்கிறது.

இக்காலத்தில் ஒவ்வொரு தேசத்திலும் வெளிநாட்டு இலாக்கா என்று ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் வேலை தூதுவராலயங்கள் அமைத்து, வெளிநாட்டு உறவு முறைகளை நிர்வகித்து வருவதாகும். ஆங்காங்கு உள்ள தூதுவர், ஸ்தானிகர் முதலியோருக்கு உத்திரவுகள், யோசனைகள் எல்லாம் சொல்ல வேண்டியதும் வெளிநாட்டு இலாகாவின் வேலைகளில் ஒன்று. டெலிபோன், ரேடியோ முதலிய வசதிகள் உள்ள இக்காலத்தில் தூதுவரானவர் அடிக்கடி தம் நாட்டுடன் தொடர்பு வைத்துக் கொள்ள சாத்தியமாகி

றது. அதனால் அவரது பொறுப்பும் பணியிலுள்ள பாரமும் வெகுவாகக் குறைகிறது. எந்த விஷயத்தையும் தொடங்குமுன் நாட்டுடன் கலந்துகொள்ள முடிகிறது. அவ்வப்போது கலந்து கலந்து வரும் உத்தரவுப் பிரகாரம் காரியம் செய்ய முடிகிறது.

இருந்த போதிலும் முன்காலத்தில் போலவே தற்காலத்துத் தூதுவர்களும் திறமை, சீலம் முதலிய குணாம்சங்கள் படைத்தவர்களாயிருத்தல் அவசியம். சொல்லப்போனால் இப்போது முன்னைவிட அதிக அறிவும், செயல் திறனும் வேண்டியிருக்கிறது.

தூதுவரது வேலை தம் சொந்த நாட்டின் நன்மைக்காக வெளிநாடுகளில் சென்று பெருமை பேசுவதுதான் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இவ்வாறு சொல்வது வெறும் ஹாஸ்யத்திற்குத்தான். ஏனென்றால் இந்தக் காலத்தில் பெருமை பேசுவதால் வேலையெல்லாம் பலிக்கமாட்டாது. அதனால் விளையும் ஆபத்துகள்தான் அதிகம்.

ஆகையால் தூதுவராகப் பணியாற்றுபவர் மிக உயர்ந்த ஒழுக்கமும் சீலமும் படைத்தவராயிருத்தல் வேண்டும். வாய்மை பிறழாதவராயிருக்க வேண்டும். நாவன்மை உடையவராகவும் எதையும் நன்கு பகுத்தறிந்து உணர்வதில் வல்லவராயும் இருக்க வேண்டியது அவசியம். சாமர்த்தியம், தைரியம், சுறுசுறுப்பு, அடக்கம், எளிமை இவை அவரிடம் குடிகொண்டிருக்க வேண்டிய பண்புகள். போயிருக்கிற நாட்டுடன் ஒத்துவாழத் தகுந்தவராயும், சூழ்நிலைக்கேற்ப நடந்துகொள்ளும் மனப்பான்மையுடையவராயும் இருக்க வேண்டும். நேர்மை வழியினின்று பிசகாதவராயிருத்தல் மிக முக்கியம். தம் சொந்த நாட்டு சரித்திரம், அரசியல், பண்பாடு, கலை, பொருளாதாரம், சமூக இயல் முதலிய விஷயங்களைப்பற்றி நல்ல ஞானம் உடையவராயிருப்பது அவசியம். மேலும் சர்வதேச விவகாரங்களையும், உலகப் போக்கையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். நிலைமைகளைச் சமாளிக்க வல்ல சாதுரிய புத்தியும் எல்லோருடனும் சகஜமாகப் பழகும் தன்மையும் அவருக்குத் தேவை. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கத் தெரியவேண்டும். பேச்சு வார்த்தைகள் நடக்கும்போது குழப்பமின்றி தெளிவாகவும், பதியும்படியாகவும் சொல்லும் திறமை இருக்கவேண்டும். அவருடைய வார்த்தைகள் பிறரது கருத்தையும் மனதையும் ஈர்க்கவல்லனவாயிருக்கவேண்டும். தம்முடைய நாட்டுக்கு அனுப்பும் குறிப்புகள் தாம் போயிருக்கும் நாட்டில் நடந்த விஷயங்களைப் பற்றி நல்ல முறையில் ஆராய்ந்தும் உட்கருத்தைத் தெரிந்து அறிவிக்கும் வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும். பத்திரிகைச் செய்தியைப் போலவோ கதாசிரியர் வர்ணனையைப் போலவோ இல்லாமல் காரிய நோக்கம் கொண்டதாக இருக்கவேண்டும். தாமதமின்றி உடனுக்குடன் செயலாற்றும் பழக்கம் மிக முக்கியம். தம் செயல், பேச்சு முதலிய திறன்களால் தார்மிக ஆதரவு தேடுவதில் வல்லுநராயிருக்கவேண்டும்.

இரண்டாவது மகாயுத்தத்திற்குப் பிறகு ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்டதால், நிறைய விவாதங்கள் நடக்கின்றன. அவை உலகறிய வெளிப்படையாக நிகழ்த்தப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் பேசுவது ஒவ்வொரு நாடும் எல்லா நாடுகளையும் கொண்ட அகில உலகத்தைப் பார்த்து உரையாடுவதாக இருக்கிறது. எதிர்வாதங்களை சமாளிக்க நேரிடுகிறது. பிரதிநிதியாகச் செல்லுபவர் சட்டரீதியில் பேசவேண்டி வருகிறது. எவ்வளவு திறமையாகப் பேசினாலும் தார்மிக ஆதரவு கிடைத்தால்தான் பேச்சுக்கு மதிப்பு ஏற்படுகிறது. தார்மிக வெற்றி கிடைக்கப் பாடுபடுவது நிரம்பவும் முக்கியமாகின்றது.

ஆகையால் உயர்வும் சீலமும் நிறைந்த வெளிநாட்டுக் கொள்கையும் நேர்மையான முறையில் அக்கொள்கையைக் கடைபிடிப்பதும் இன்றியமையாதது என்பது இதனால் விளங்கும். ★

விந்தை புரியும் விழிகள்

ஜி. முருகேசன், பி. எஸ். ஸி.

தலைப்பைப் பார்த்ததும் நேயர்களில் பலர் இக்கட்டுரை கவிஞர்கள் பாடி மயங்கும் வேல்விழி, மீன்விழி முதலிய பலரக விழிகளைப்பற்றியதாமோ என அஞ்சி, பக்கத்தைப் புரட்ட வேண்டாம் என்று அவர்களுக்குச் சொல்லுகிறோம். வள்ளுவர், கூற்றமோ கண்ணோ பிணையோ என்று வியந்து கூறியுள்ள கூற்றம் போன்ற கண்களையோ அல்லது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கற்பனையில் தோன்றிய, ''மானைப்பழித்த விழியுடையாளின்'' மான்விழிகளையோ பற்றியதல்ல நம் கட்டுரை. இன்னும் வேல் கொண்டெறியினும் இமையாத வீரக்கண்களையோ வேறு கறுப்புக் கண்களையோ பற்றியதுமல்ல.

இக்கட்டுரை மனித இனத்திலும் பிற உயிர்ப் பிராணிகளிலும் அமைந்துள்ள விதம் விதமான கண்களைப்பற்றிய சிறு கண்ணோட்டமாகும்.

கண்கள் உயிரினங்களுக்கு மிகவும் முக்கியமான உறுப்புக்களாகும். எந்த விதமான காரியம் செய்தாலும் கண்கள் மிகவும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆகையால்தான் ஒவ்வொரு பிராணிக்கும் கண்கள் அந்தந்தப் பிராணிக்கு மிகவும் அவசியமான இடத்திலும் விதத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

தொலை நோக்கி கண்ணுள்ள ஒரு வகை மீன்

மனிதர்களுக்கு கண்கள் முகத்தில் நெற்றிற்குக் கீழே இருப்பதால், நாம் நடக்கும்பொழுது அருகிலும் தூரத்திலும் பார்க்க வசதியாக அமைந்திருக்கின்றன. பறவைகளுக்கு நாலாபக்கமும் சுழன்று பார்க்க வசதியுள்ளதாகவும் மிகவும் கூர்மையான பார்வை சக்தியுடையனவாகவும் கண்கள் இருக்கின்றன.

நாம் பார்க்கும் அனேக பிராணிகளுக்கு இரண்டு கண்களைத்தான் காண்கிறோம். ஆனால் பட்டுப் பூச்சி போன்ற பூச்சிகளுக்கு அனேக கண்கள் இருக்கின்றன. ஒரு பொருளை அந்தக் கண்கள் மூலமாகப் பார்க்கும் பொழுது, நாம் ஒரு நுண்ணிய கம்பி வலை போட்ட சன்னல் வழியாகப் பார்த்தால் எவ்வளவு மங்கலாகத் தெரியுமோ அதுபோலவே பட்டுப் பூச்சிகள் எல்லாப்பொருள்களையும் பார்க்கின்றன.

மிகவும் கீழான புழுக்கள், பூச்சிகள் ஆகியவை உருவங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு அவைகளின் கண்கள் வளர்ச்சியுற்றிருக்கவில்லை. அவைகளின் கண்களுக்கு எதிர்ப்படும் உருவங்களின் வெளிச்சமானது, கண்களின் வழியாக ஊடுருவிச் சென்று எதிரில் ஒரு பொருள் இருக்கிறதென்பதை உணர்த்துகிறது.

மீன்களில் காட் என்னும் மீன் தன்னுடைய கண்களை வேண்டியபடி திருப்ப வசதி பெற்றிருக்கிறது. ஆனால் நாய்மீன் எந்தப் பொருளையும் மிக அருகில் சென்றால்தான் காணமுடியும். அதற்கென்ன நம்மைப்போல் கண்ணாடி வாங்கிப் போட வசதி யிருக்கிறதா என்ன?

கண்களை மாத்திரம் தண்ணீருக்கு வெளியே நீட்டிப் பார்க்க தவளைக்கு முடியும்!

நாய்கள் மிகவும் அறிவும் நன்றியுமுள்ள பிராணிகள். ஆனால், அவைகளின் கண்கள் எப்பொருளையும் கறுப்பு, வெள்ளை ஆகிய இரு வர்ணங்களிலேயே காண்கின்றன. வேறு எந்த வர்ணங்களையும் பார்க்க அவைகளால் முடிவதில்லை. ஏன்? மக்களில்கூட இம்மாதிரி நிறக்குருடு உள்ளவர்களைக் காண்கிறோம்.

பறவைகள் ஆகாயத்தில் பறந்து உணவு தேட வேண்டியிருப்பதாலும் எதிரிகளை மிகத் தொலைவிலேயே பார்த்து தப்ப வேண்டியிருப்பதாலும் அவைகளின் கண்கள் மிகவும் கூர்மையாயிருக்கின்றன. குறிப்பாக கழுகுகளுக்குக் கண்கள் மிகவும் கூர்மையானவை என்பதை தமிழில் உள்ள பழமொழியான ''கழுகுக் கண்கள்'' என்ற சொற்களிலிருந்தே அறியலாம்.

எல்லா மிருகங்களும் காட்டில் சுயேச்சையாகத் திரிபவைதான். அவைகள் ஒவ்வொன்றும் மற்ற இன மிருகங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால் மிருகங்களின் கண்கள் ஒரே சமயத்தில் முன்புறமும், தங்களது நீண்ட உடலின் இருபுறமும் பார்க்க வசதியாய் அமைந்திருக்கின்றன. குதிரை, மாடுபோன்ற சாதுவான மிருகங்களின் உடம்பு நீண்டிருக்கின்றது. நகரங்களில் குதிரைகள் வண்டிகளில் பூட்டப்பட்டிருக்கும் பொழுது பின்னால் வரும் மற்ற வண்டிகளைக் கண்டு மிரண்டு ஓட ஏதுவாகும். ஆதலால் குதிரைகளின் கண்களின் இருபுறமும் கண்மூடி போட்டு ஓட்டிச் செல்கின்றனர்.

நீர்வாழ் பிராணிகளான தவளை, முதலை, நீர்யானை ஆகியவை அடிக்கடி தரைக்கு வந்து தங்கியிருக்கும். ஆனால், அவைகள் கரையில் இருக்கும்பொழுது அவைகளுக்கு அபாயம் ஏதும் ஏற்படாமல் இருக்க வேண்டும். ஆகையால் அவைகள் நீரைவிட்டு வெளி வரும் பொழுதே கரையில் அபாயம் ஒன்றுமில்லையென்று தெரிந்து கொண்டுதான் கரைக்கு வருகின்றன. நீருள் இருந்து கொண்டே கண்களை மட்டும் வெளியே வைத்து கரையைப் பார்க்க ஏதுவாக அவைகளின் கண்கள் தலையின் மேல்பாகத்தில் உயர்த்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரையில் நாம் பார்த்த கண்கள் இருந்த இடம் விட்டுப் பெயராத கண்கள். ஆனால் நினைத்தவுடன் குடையை விரிப்பதுபோல் கண்களை வெளியே நீட்டவும் வேண்டாத பொழுது உள்ளே இழுத்துக்கொள்ளும் சக்தியுடைய பிராணிகளும் இருக்கின்றன. அவைகளை நாம் தினமும் பார்க்கிறோம். ஆனால் அவைகளின் கண்களைக் கூர்ந்து கவனிப்பதில்லை. மேற்கூறிய சௌகரியம் நண்டுகளுக்கும், நத்தைகளுக்கும் கடலுக்கு அடியில் வாழும் சில மீன்களுக்கும் அமைந்திருக்கின்றன.

மனிதர்களின் கண்கள் நம்முடைய அறிவைப்போல் அவ்வளவு சிறந்தவை அல்ல. நம்மைக் காட்டிலும் சிறந்த கண்களை பறவைகள் கொண்டுள்ளன. ஆனால் அக்குறையை நாம் நம்முடைய

நண்டின் கண்கள் நீட்டவும் சுருக்கவும் கூடியன.

அறிவைக்கொண்டு பூர்த்தி செய்துள்ளோம். பறவைகள்போல் வெகு தூரத்தில் பார்க்க தூர தரிசினிகளையும், வானத்தில் உள்ள நட்சத்திரங்களைக்காண தொலை தூர தரிசினியையும் செய்துள்ளோம். கண்கள் சரிவர வேலை செய்யாவிடில், போலிக் கண்களை மாட்டிக் கொள்கிறோம்.

மேலும் உருவத்தில் பெரிய மிருகங்கள்போல் அமைந்திருக்கும் மோட்டார் வண்டிகளில் பின்புறம் பார்க்க காரோட்டியின் அருகில் ஒரு கவிந்த கண்ணடி பொருத்தப்படுகிறது. நீர்மூழ்கிக் கப்பல்களில் நீருக்குள் இருந்துகொண்டே வெளியே நடப்பவைகளைக்காண 'பெரிஸ் கோப்' செய்து முதலைகள்போல் நீந்துகிறோம்.

மேற்கூறிய மனிதனின் ஆராயும் திறமையைக் கண்டு நாம் ஆச்சரியமடைகிறோம். ஆனல் பார்வைக்கும் கண்களுக்கு வெளிச்சம் அவசியம். ஒளியின்றேல் எப்பொருளையும் யாரும் பார்க்க முடியாது. பூனைகளும் புலிகளும் இரவில் பார்க்கின்றனவே என்று கேட்கலாம். அவைகளும் இரவில்



மிருகங்களின் கண்கள் முக முக்கோணத்தின் இரு சரிவுகளிலும் அமைந்துள்ளன.



சப்மரைனிலுள்ள பெரிஸ்கோப்

உள்ள நட்சத்திரங்களின் சிறு ஒளியைக் கொண்டுதான் பார்க்கின்றன. சிறிதளவு ஒளியையும் பூரணமாக கிரஹிக்க கூடிய வசதியுள்ளதாயும் வேண்டாத பொழுது ஒளி செல்லும் துவாரத்தைச் சுருக்கக் கூடியதாயும் அவைகளின் கண்களில் ஒரு தசை பொருந்தப்பட்டிருக்கிறது. பறவைகளுக்கு எல்லாவற்றிற்குமே கண்ணுக்கு மூன்று மூடிடும் இமைகள் உண்டு. கோழிகள் இமையை மூடாமல் இருக்கும் பொழுதே அவைகளின் கண்களின்மேல் ஒரு வெள்ளைத் தோல் மூடியிருப்பதைப் பார்க்கிறோம். அந்த வெள்ளைத்தோல் தான் பறவைகளின் மூன்ருவது இமையாகும்.

நீர்க்குதிரை நீரில் வாழும் மீனின் இனத்தைச் சேர்ந்தது தான். அதன் கண் அமைப்பு விசித்திரமானது. நீர்க்குதிரையின் விழிகள் ஒவ்வொன்றும் தனித் தனியே வெவ்வேறு திசைகளில் இயங்கக்கூடியது. ஆகாரம் தேட வேண்டி நீர்க்குதிரை இருந்த இடம் விட்டு அதிகமாக அலைவதில்லை. கண் விழிகளை திடீர் திடீரென்று வெவ்வேறு திசைகளில் திருப்பி, விரைவில் ஆகாரத்தையும் தேடிக் கொள்ளுகிறது. எதிரிகளிடமிருந்தும் சுலபமாகத் தப்பி விடுகிறது.

சுத்தமான இருட்டில் கண்களுக்கு வேலையில்லை. ஆதலால் தான் கெண்டகி என்ற இடத்திலுள்ள குகைமீன் என்ற மீனினம் கண்களின் சக்தியையே இழந்து விட்டது என்று ஆராய்ச்சியாளர் கூறிடக் கேட்கிறோம். ★



காதல் வாழ்வில் பறவைகள்

ஸி. ராஜப்பா

காளிதாஸனின் 'சாகுந்தலம்' காதலையே விவரிக்கிறது. பாரசீகக்கவி ஒருவர் எழுதிய காதல் காவியம் 'லைலாமஜ்னு' உலகப் புகழ்பெற்றது. ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியரின் 'ரோமியா ஜூலியத்' ஒப்பற்ற காதல் நாடகம். உலக அதிசயங்களில் ஒன்றான 'தாஜ்மஹால்' ஷாஜஹான்—மும்தாஜின் காதலை நினைவுறுத்தும் ஞாபகச் சின்னம். இவற்றையெல்லாம் கற்றறிந்து, காதலின் மகிமையை உணர்ந்த மனிதனின் வாழ்வில் இந்தக் காதல் சோபிப்பதில்லை என்றால், அதை மனிதவர்க்கத்திற்குரிய ஒரு சாபக்கேடு என்றே குறிப்பிடவேண்டும்.

ஆனால், காதற்கடிதங்களைப் படித்தறியாத காகங்களும், லைலா-மஜ்னு கதை கேட்டிராத சிட்டுக்குருவிகளும், ரோமியோ ஜூலியத் நாடகம் பார்த்திராத பைங்கிளிகளும், காதல் வாழ்வில் வெற்றி பெறுகின்றன என்றால் ...... விந்தையாயில்லையா?

'சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை' என்னும் பாரதிவாக்கு இந்தப் பறவை இனத்திற்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது!

பிரேம தூதனாகப் பணிபுரிந்த அன்னத்தை நோக்கி, 'அஞ்சல் மடவன்னமே உன்றன் அணிநடையும்......' என்று அதனைப் புகழ்ந்து கூறி காதலுணர்ச்சிக்கு அடிமைகளான நளனும் தமயந்தியும் தங்கள் காரியத்தை சாதித்துக் கொண்டதை அன்னம் தன் ஜோடியிடம் எவ்வளவு பெருமை பொங்கக்கூறியிருக்கும்! அதைக் கேட்டு தூது சென்ற அன்னத்தின் காதல் ஜோடி என்ன பதில் சொல்லியிருக்கக்கூடும்?

''ஆறறிவு படைத்த மனிதன் தன் காதல் சம்பாஷணைக்கு நம் தயவைத்தான் நாட வேண்டியிருக்கிறது, அல்லவா?'' என்று பெருமை தொனிக்க கேட்டிருக்கலாம், தூது சென்ற அன்னத்தின் துணைப்பறவை.

''ஐய, இந்த மனிதர்களுக்கு காதலிக்கவே தெரிவதில்லை...



இவன் அவளைப்பற்றி வர்ணிப்பதை அவளிடம் சொல்லச் சொல்கிறான். அவள் இவனைப்பற்றி புகழ்ந்து பாடுவதை அவனிடம் போய்ச்சொல் என்கிறாள் ... இதுவா காதல்? அலைந்து அலைந்து காலெல்லாம் ஒடிந்து விட்டது!'' என்று தூது சென்ற அன்னம் களைத்து நிற்கும்போது, அதன் துணை அன்னம் காதல்நோக்குடன் அதைப் பார்த்திருக்கும். உடனே, தன் களைப்பையெல்லாம் மறந்து தன் ஜோடியுடன் கிளம்பியிருக்கும் தூது சென்ற அன்னம் காதல் வாழ்வில் எப்போதும் முழு வெற்றி கொள்ளும் பறவைகள் அன்னங்கள்தான் என்பது பறவை நூல் வல்லுநர்கள் கூறும் உண்மையாகும். இதனால் தான் தமயந்தி தன் காதல் நிறைவேற அன்னத்தை 'பிரேம தூத'னாக வைத்துக் கொண்டாள் போலும்! காதலிக்கும் தன்மை மனித இனத்திற்கு மட்டும் உரியதல்ல. பறவைகள் உலகில் இந்தக் காதல் நிகழ்த்தும் விநோதங்களை நாம் மிகவும் சுவை



பொருந்திய நிகழ்ச்சிகள் எனலாம்.

பிரிவின் வேதனை!

'பிரேம பாசத்தில் சிக்குண்ட பறவைகள் வாழ்நாளெல்லாம் இணைந்திருந்து, நீடித்த இன்பத்தை அடைந்து வருகின்றன. முடிவில் காதல் ஜோடிகளில் ஒன்று இறந்துவிட்டால், அதன் பிரிவைச் சகிக்க இயலாமல் துணைப்பறவையும் குறுகிய காலத்திற்குள் இறந்து விடுகிறது' என்பதை ஜூலியன் ஹக்ஸ்லி என்னும் மேனாட்டு விஞ்ஞானி தன் ஆராய்ச்சி மூலம் நிரூபித்துள்ளார்.

அன்றில் பறவைகளின் காதல் வாழ்வு இதற்கு மிகப் பொருத்தமான உதாரணம். ஜோடியைப் பிரிந்த அன்றில் இந்தப் பிரிவின் காரணமாக வெகு விரைவில் உயிர் நீத்து விடும் தன்மை பெற்றது. இந்தப் பறவையை நாம் காண்பதரிது.

ஆதாரம்:

டாக்டர் ஜூலியன் ஹக்ஸ்லி இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி. 'பறவை சாஸ்திர'த்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றுள்ள அவர், 'கோர்ட்ஷிப் எமங் பேர்ட்ஸ்' என்னும் தன் ஆராய்ச்சி நூலில், பறவைகளின் காதல் வாழ்வு பற்றி மிகவும் ருசிகரமான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

காதலித்த பறவை காதற் சின்னமாக தன் துணைப்பறவையிடமிருந்து எதையும்பெறுவதுமில்லை; 'ரிஜிஸ்தர் கல்யாணம்' செய்து கொள்ளும்படி வற்புறுத்துவதுமில்லை! காதல் வாழ்வு கசந்து விட்டவுடன் 'விவாக ரத்து' கோரி வழக்காடுவதுமில்லை. இயற்கையின் தூண்டுதலால் காதலுணர்ச்சிக்கு அடிமையாகும் பறவைகள், தங்கள் ஜோடியுடன் இணைந்து வாழவே முற்படுகின்றன.

பறவை யுலகிலும் 'ஸீஸரைப்' போன்ற பல பறவைகள் இருக்கின்றன. ஆண் பறவைகளே காதல் வாழ்வைத் துவக்குவதில் முன் நிற்கின்றன. 'கண்டதும் காதல்' என்ற முறையை ஆண் பறவை அனுசரித்து, தன் இனத்தைச் சேர்ந்த பேடைமுன் நடமாடும். பெண்பறவைக்கு இந்த ஆண் பறவை வட்ட மிடுவதன் நோக்கம் நன்கு தெரியும். இருந்தபோதிலும் அதை வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்ளாமல் அலட்சியமாகவே இருக்கும். ஆண் பறவை தன்னை நெருங்கி வரும் போதெல்லாம் பெண் பறவை அதை வெறுத்து, விரட்டுவதாக பாவனை செய்யும். ஆனால், ஆண் பறவை இந்த விரட்டலைக் கண்டு கொஞ்சமும் அஞ்சாது அதைச் சுற்றியே வட்டமிட்டு, தன் அழகு நடனங்களாலும், இனிய குரலினாலும் பேடையை மயக்கித் தன் வலையில் வீழ்த்தி விடும். ஆண் பறவையின் அழகில் மயங்கி பெண்பறவை அதையே தன் துணைவனாகக் கொள்ளச் சம்மதித்துவிடும். சம்மதித்தால் பின்பு சந்தோஷம்தானே!

அன்னத்தின் இனத்தைச் சேர்ந்த வாத்துகளின் காதல் வாழ்வைப்பற்றி கவனிப்போம். ஆண் வாத்து ஒன்று ஒரு பெண் வாத்தைச் சந்தித்து விட்டால், உடனே அவற்றினிடையே காதல் பிறந்து விடுகிறது. 'கண்டதும் காதல்' என்பது பறவை இனத்தில் வாத்துகளிடையே தான் அதிகமாக நிகழ்கிறது. வாத்து இயற்கையாகவே விநோதமான குரலில் கத்தக்கூடியது. அதற்கு காதல் வேறு தோன்றி விட்டால், அதன் விநோதக் குரலினிமையை கேட்க இன்னும் விசித்திரமாக இருக்கும். இந்தக் குரலினிமையுடன் அது பெண் வாத்தின் முன் அபிநயம் வேறு பிடிக்க ஆரம்பித்து விடும்! இனிமேல் வேறென்ன வேண்டும் பார்த்து ரசிக்க! பெண் வாத்து தன் சம்மதத்தை லேசாகக் குரலெழுப்பித் தெரிவிக்கும். அதன் பின்பே அவைகளின் காதல் பலனளிக்கிறது.

பறவையிடம் 'மனிதத் தன்மை'

பறவையினத்திலும் சில 'மனிதத் தன்மை'யுடன் வாழ்ந்து வருகின்றன. அதாவது மயக்கு மொழி பேசி பேடையை தன் காதலுக்கு இரையாக்கிக் கொண்டு, பின்பு கைவிட்டுச் சென்று விடுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கின்றன சில பறவைகள். மரங்கொத்திப் பறவைக்கு இவ்வித குண விசேஷம் உண்டு என்கிறார் ஹக்ஸ்லி. அதாவது அழகான உடலமைப்பு பெற்ற இப்பறவை, தன் பெண் பறவையை வெகுவாக நேசிப்பது போல் பாவிக்குமாம். திடீரென்று தன் கூட்டிற்கு வேறொரு புதிய பெண் பறவையை அழைத்து வந்து, ஏற்கனவே தங்கியிருக்கும் பெண் பறவையை விரட்டுமாம். புதிய பறவை தனக்கும் இந்த கதிதான்

நேரும் என்பதையுணராமல், தன் காதலனுடன் சேர்ந்து கொண்டு பழைய பெண் பறவையை விரட்டுமாம்! 'காதல் வாழ்வில் நானே—கனியாத காயாகிப் போனேன்' என்று சோககீதம் பாடிக்கொண்டு செல்லலாம் நிராகரிக்கப்பட்ட பெண் மரங்கொத்தி! விந்தையாக இல்லையா இந்த நிகழ்ச்சி!

பேடையுடன் இணைந்து வாழ்ந்து, காதலின் சிறப்பை உணர்த்துபவை சின்னஞ்சிறு சிட்டுகள். இணைபிரியாத சிநேகத்தை அவை ஒரு போதும் மறப்பதில்லை. தாம்பத்ய சண்டைகள் அவற்றின் வாழ்வில் ஏற்படுவது துர்லபம்!

காதலை நம்பாதே!

ஆண் புருக்கள் காதலிப்பது தனி விதம்! அவற்றிற்குப் பேடையை மயக்கி, தங்கள் காதல் வலையில் வீழ்த்தி, காதல் மாயையில் சிக்கி அவை தவிப்பதைக் கண்டு களிப்பதில் வெகு ஆனந்தம். காதலித்த ஆண் பறவை விரைவில் பேடையுடன் கூடிவாழும் என்று கூறிவிட முடியாது. தன் அழகு மேனியை நெளித்து, முன்னும் பின்னுமாக ஆடி அசைந்தபடி நடந்து, பேடையின் உள்ளத்தை வெகுவாகக் கவரும். காதலில் உள்ளம் பறிகொடுத்த பெண் புரு, ஆணின் அழகில் மயங்கி, தானுகவே அதை நெருங்கி வரும். அப்போது ஆண் பறவை திடீரென்று பறந்து சென்று விடும். காதலுணர்ச்சியைத் தூண்டி, அதன் பலனை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத பேதை பெண் புரு துயரத்துடன் இருந்த இடம் விட்டகலாமல், தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஆண் புருவை எண்ணி எண்ணி ஏங்கும். இம்மாதிரி பெண் புருவின் உள்ளத்தைக் கவர்ந்து, அதனை அலைக்கழிப்பதில் ஆண் புருக்கள் வெகு சாமர்த்தியசாலிகள். தனக்காக விருப்பமேற்பட்ட போது தான் பேடையை நெருங்கும். பேடையின் காதலுணர்ச்சிக்கு கொஞ்சமும் மதிப்பு வைக்காத பறவைகள் ஆண் புருக்கள். 'காதலிப்பதும் காதலை நிறைவேற்ருமல் கைவிடுவதுமே' இவற்றின் குறிக்கோள்.

'ஹனிமூன்' செல்லும் வழக்கம் பறவைகளிடையேயும் உண்டு என்கிருர் ஆராய்ச்சியாளர் ஹக்ஸ்லி. காதல் கொண்ட பறவைகள் இரண்டும் வெகு தூரம் வரை பறந்து சென்று, புதிய பிராந்தியங்களில் சில நாட்கள் தங்கிய பின், மீண்டும் தங்கள் இருப்பிடம் திருப்பி, கூடுகள் கட்டி ஒற்றுமையுடன் வாழ்கின்றனவாம்.

அன்பும் அரவணைப்பும்

மேனுட்டில் ரேவன் என்ற பறவையும், மீன் கொத்திப் பறவைகளும் காதலித்த பின் தங்கள் பேடைகளை அன்புடன் அரவணைத்துக் கொள்ளுகின்றவாம். ஆண் பறவையின் அலகை, பெண் பறவை மென்மையாகக் கொத்தியபடி பிடித்துக் கொள்ளும் முறை இத்தகைய அரவணைப்பைப் பிரதிபலிக்கிறது. கொக்குகளிடமும் இத்தகைய 'விளையாட்டுகள்' உண்டு ஆகாயத்தில் வட்டமிடும் கழுகு தன் காதலியின் பாதங்களைப் பறந்தபடியே பற்றிக் கொண்டு, அசைவற்றுத் தொங்கும். காதலுணர்ச்சியைப் பிரதிபலிப்பதில் கழுகு கையாளும் முறை இது! கழுகு தன் காதலியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு அதன் பிரேமைக்காக ஏங்குவதைக் கண்டு நாம் ஏளனம் செய்யலாம். ஆனுல், ரோமாபுரியை ஆண்ட நீரோ மன்னன் போபியா என்பவளின் காதலைக் கோரி அவள் பாதங்களைப் பிடித்து முத்தமிட்டான் என்பதை ரோம் நாட்டு சரித்திரம் நமக்கு கூறுகிறது.

வீரத்திற்குப் பரிசு!

தன் வீரத்தை நிலைநிறுத்திக்காட்டி, காதலியின் பாராட்டுகளைப் பெற்று, காதலில் வெற்றி காணும் பறவைகளும் இருக்கின்றன. பைங்கிளி தன் காதலி முன் சிறகடித்துப் பறந்தபடி கரணங்கள் போட்டு, அதை மயங்கச் செய்யும். மற்ருெரு ஆண் கிளியை சண்டைக்கிழுத்து, இரண்டும்

ஒன்றுடன் ஒன்று மிக பயங்கரமாகப் போரிடும். போரில் வெற்றி கண்ட பறவையுடன் மாயமாய் மறைந்துவிடும் பெண்கிளி!

ஆடும் மயிலும் பாடும் குயிலும்

குயில்கள் காதல் உலகில் தலைசிறந்து விளங்கும் பறவைகள். அவைகள் இணையாகச் சேர்ந்து பிரேமகீதம் இழைக்கும்போது உண்டாகும் இன்பலாகிரியை வர்ணிக்காதவன் ஒரு கவியாக இருக்கத் தகுதியில்லை என்பது 'கற்பனை உலகைவிட்டுக் கீழே இறங்க மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்கும் கதாசிரியர்கள்-கவிஞர்களின் மேலான கருத்து. பிரிவாற்றாமையைக் குயில்களால் தாங்கவே முடியாது.

இனக்கவர்ச்சிக்காகவே தன்னை அலங்கரித்துக் கொள்ளும் மனித வர்க்கம் இயற்கை அழகை ரஸிக்க முன் வருவதில்லை. ஆனால், பறவைகள் ஆடம்பரத்தை அறியாதவை. ஆகவே அவை இயற்கையாக தங்களுக்குள்ள அழகைக் கொண்டே இனக்கவர்ச்சிக்கு இலக்காகின்றன.

கண்கவர் அழகுடனும், செவிக்கின்பம் பயக்கும் குரலினிமையும் கொண்ட பறவைகள் வெகு விரைவில் தன் இனத்தைச் சேர்ந்த



பெண் பறவைகளை மயக்கி விடுகின்றன.

மயில்களில் ஆண் மயிலின் அழகிய தோகை ஒன்றே இனக்கவர்ச்சிக்கு, அதற்குப் பேருதவியாக இருந்து வருகிறது. பெண் மயிலின் முன் கம்பீரமாக நின்று, தன் தோகையை விரித்தபடி அழகாக அபிநயம் பிடிக்கும் ஆண் மயிலின் மையலில், பெண் மயில் தன் உள்ளத்தை உடனே பறிகொடுத்து விடுகிறது. புறாவைப்போல் மயிலும் பேடையின் காதலுணர்ச்சியை வெகுவாக அதிகரித்த பின்பே திருப்தி கொள்ளுகிறது.

பெண் மயில் தன் காதலை வெளியிடும் முறை விசித்திரமானது. மெதுவான குரலில் கூவி, ஆண் மயிலின் கவனத்தைத் தன் பக்கம் இழுக்கும். ஆண் மயில் அருகில் வந்தவுடன் அதன் உடலை லேசாகக் கொத்தும், இதிலிருந்து பெண் மயிலுக்கு காதலுணர்ச்சி தோன்றி விட்டதை அது அறிந்து கொள்ளும். உடனே ஆண் மயில் தன் சம்மதத்தை வெளியிடும் பாவனையில் வண்ணச் சிறகுகளை விரித்து அசைந்து ஆட ஆரம்பித்து விடும். அத்துடன் தன் கழுத்தை நன்றாக வளைத்து தரையில் குனிந்தபடி, மணமகளின் மாலையை மணமகன் தலைகுனிந்து ஏற்றுக் கொள்வதுபோல் சிறிது நேரம் நிற்கும். ஆனால், பெண் மயில் உடனே ஆண் மயிலின் செய்கைகள் ஒன்றையும் லட்சியம் செய்யாமல் காதலை ஏற்க மறுத்து விட்டதுபோல் வேறுபுறம் திரும்பிக்கொண்டு விடும்! இருந்தபோதிலும் ஆண் மயிலின் அழகு அதை வெகுநேரம் மௌனமாக இருக்க அனுமதிப்பதில்லை!

காதல் வெறியில் மூழ்கிவிட்ட பறவைகள் ஆடும் ஆனந்த நடனத்தைப் பற்றி ஹக்ஸ்லி கூறுவதாவது: ''மயிலைப்போல் அழகும், பல வர்ணங்கள் பொருந்திய இறகுகளும், உடலமைப்பும் பெற்ற பறவை 'பேர்டு ஆப் பாரடைஸ்'; இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் மட்டுமே இந்தப் பறவைகள் காணப்

படுகின்றன. இவை காதல் கொண்டவுடன் ஆடும் நடனம், முறைப்படி நடனம் கற்றவர்கள் அபிநயம் பிடித்து ஆடுவதைப் போல் அவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது. அதன் பெயரும் தேவலோகப் பறவை. இதன் நடனமும் தேவதைகளின் அழகு நடையைப் பிரதிபலிப்பதைப் போலிருக்கிறது. தவிர, இவை வட்டமாக உட்கார்ந்து கொண்டு ஒவ்வொன்ருக வட்டத்தின் மையத்தில் வந்து நடனமாடும் காட்சி நம்மை எல்லேயற்ற வியப்பிலாழ்த்துகிறது!''

இந்த அழகு நடனத்தில் மனதைப்பறிகொடுத்த பெண் பறவை, எந்த ஆண்பறவையின் காதலுக்கு அடிமையாவது என்று புரியாமல் தவிக்குமாம். வலிமைவாய்ந்த ஆண் பறவை உடனே அதன் மீது பாய்ந்து, தன்னுடன் வரும்படி அழைக்குமாம். அதனுடன் போராட வலிவற்ற மற்ற பறவைகள், அவை இரண்டும் பறந்து செல்வதைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் என்று மேலும் இந்த தேவலோகப் பறவையின் காதல் பற்றி ஹக்ஸ்லி கூறுகிருர்.

அயர்லாந்தில் வாழும் சில பறவைகள் தன் காதலியுடன் கொஞ்சுவதை நமக்கு ஹக்ஸ்லி சிறப்பாக எடுத்துரைக்கிருர்.

காதற்பரிசு

''டெர்ன் என்னும் ஆண் பறவை தன் காதலி முன் ஒரு மீனைத் தன் அலகில் கொத்தியபடி உட்காரும். உடனே பெண் பறவை அதனருகில் மெதுவாக நடந்து வந்து, படுத்தபடி தன் கழுத்தை வளைத்து ஆண் பறவையின் அலகிலிருக்கும் மீனை தனக்கு அளிக்கும் பாவனையில் தன் காதற்பார்வையை அதன் மீது செலுத்தும். ஆண் பறவைக்கு இரை முக்கியமல்ல. தன்னைக் காதலிக்க முன்வந்த பெண் பறவையின் நீடித்த அன்பே பிரதானம். காதற்பரிசாக தன் இரையை அதற்களித்து விட்டு அதனுடன் கூடி வாழும்.

'அழகற்றவர்கள் காதலிக்க அருகதையற்றவர்கள்' என்பதாக நாம் எண்ணுகிருேம். அழகற்றதும், குரூரமானதுமான ஆந்தைக்கும் காதலியாக ஒரு பெண் ஆந்தை அகப்படும்போது, நம் எண்ணம் தவறு என்பதை நம்மால் மறுக்க முடியுமா?

பறவைகள் தங்கள் காதலே 'அமரத்வம் பெற்றது' என்று பறை சாற்றி, காதற்சின்னமாக 'தாஜ்மஹால்' கட்டுவதில்லே. காதல் திருமணங்களில் அவற்றிற்கு நம்பிக்கை யுண்டோ இல்லேயோ, அவற்றின் காதல் வாழ்வு சூன்யமாவதில்லே. ★

தாமரைக் கண்

''நாம வென்றி வேல் நகைகொள் மார்பனே
காமனே எனக் கன்னி மங்கையர்
தாமரைக் கண்ணுல் பருக...''—ஜீவக சிந்தாமணி.

'தாமரைக் கண்ணுல் பருக' என்பதற்கு தாமரை போன்ற கண்ணுல் அழகைக் கண்டு களித்தல் என்று ஒரு பொருள்; மங்கையராதலால் தான் அழகை ரசிக்கும் போது பிறர் தான் பார்ப்பதைக்கண்டு விடாதிருக்க வேண்டி அரைக் கண்ணுல் பருக - ஜாடையாக பாதிக் கண்கள் மூடியபடி பார்த்து மகிழ்தல் என்றும் பொருள் கூறலாம். மூன்ருவதாக மங்கையரின் விழிகள் மான் விழிகளே யொத்திருக்கக்கூடும் என்ற கருத்தில் 'தாம் மரைக் கண்ணுல்'—மான்போலும் கண்ணுல் பருக என்று பொருள் கூறுவதும் பொருந்துகிறதல்லவா?

—'பரிதிமாற் கலேஞர்'.

இன்றைய உலகில் பாரத நாடு பல துறைகளில் முன்னேற்றமடைந்து வருகிறது. இதில் கல்வித் துறையுமொன்று. அறியாமையை ஒழித்துக்கட்ட பாரத நாடு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. கல்லூரிகள், பாடசாலைகளின் எண்ணிக்கையை துரிதப்படுத்துவதோடு நின்று விடாமல், கிராமத்திற்கு ஒரு பள்ளி என்ற திட்டமும் அமல் நடத்தப்பட்டு வருகிறது.

அறியாமையை ஒழித்துக்கட்டும் போராட்டத்தில் சாக்பீசும் பங்கெடுக்கிறது என்றால், திகைப்படைவார்கள் பலர். நாட்டின் பல கோடி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கல்வி புகட்டுவதற்கு பல கோடி சாக்பீஸ்கள் நாள்தோறும் செலவாகின்றன. ஆதலால் சாக்பீஸ் உற்பத்தியை ஒரு வெற்றிகரமான குடிசைத் தொழிலாக நடத்தலாம்.

சாக்பீஸின் தரம் எப்படி இருக்கவேண்டும்?

1. உறுதியாக இருக்கவேண்டும். இல்லையேல் கடினமான கரும் பலகையில் எழுதும் போது சாக்பீஸ் பல தடவைகள் ஒடிந்து போகும்.

2. கரும்பலகையில் எழுதக்கூடிய நிலையில் மிருதுவாக இருக்க வேண்டும். இல்லையேல் கையால் அழுத்தி எழுத வேண்டி இருக்கும். அப்போது எழுதுபவருக்கு சோர்வும் எரிச்சலுமே உண்டாகும்.

3. சாக்பீஸ் பால் வெண்மை நிறத்தில் இருக்கவேண்டும். அப்போது தான் கரும்பலகையில் எழுதப்படும் எழுத்துக்கள் மாணவர்களின் கண்களுக்கு நன்கு புலப்படும். இதனால் கண் பார்வை காப்பாற்றப்படுகிறது.

தேவையான கச்சாப் பொருள்கள்

சீனா களிமண்.
பிரசிபிடேடட் சாக்.
வெண்காரம் (காஸ்டிக்சோடா)
ஒலிக் அமிலம்
சுத்தமான தண்ணீர்.

விளக்கம்

சாக்பீஸ் தயாரிப்பதற்காக உண்டான கலவையை அழகான அச்சுகளில் வார்க்கும்போது, வார்ப்பு அச்சுகளில் நன்றாகப் படிய வேண்டும். இப்படி படிவதற்கான உண்டான குணத்தை சீனாகளிமண் கொடுக்கிறது. இது ஒருவித களிமண். ஆகையால் அச்சில்நன்றாகப்பரப்பி, தேவைப்படும் உருவத்தில் சாக்பீஸ்களை தயாரிக்க ஏதுவாகிறது. மேலும் இது சாக்பீஸ்களுக்கு உறுதியைக் கொடுக்கிறது.

பிரசிபிடேடட் சாக் சுலபமாக எழுதுவதற்குண்டான மிருதுத் தன்மையைக் கொடுக்கிறது.

வெண்காரம் சேர்ப்பதால் சீனாக் களிமண்ணின் உறுதியைக் கெடுக்காமல் சாக்பீஸ் மிருதுவாக்கப்படுகிறது. ரொட்டிமாவில் ரொட்டி உப்பு சேர்ப்பதால் ரொட்டியினுள் பல ஆயிரக்கணக்கான குமிழிகள் உண்டாகின்றன.

சாக்பீஸ் உற்பத்தி சிறு கைத்தொழிலுக்கு ஏற்றது. மேலும் கல்வி புகட்டும் பணியிலும் இது விசேஷ பங்கு கொள்கிறது.

இதனுல் ரொட்டி மிருதுத்தன்மை அசைவதுபோல் வெண்காரம் சாக்பிஸ்களில் பல சிறு குமிழிகளை ஏற்படுத்தி மிருதுவாக்குகிறது.

ஓலிக் அமிலம் சேர்ப்பதால் சாக்பிஸ் தயாரிக்கப்படும் கலவை சுத்தமான வெண்ணிறத்தை அடைகிறது.

சுத்தமான தண்ணிர், சீனு களிமண், பிரசிபிடேடட் சாக் என்ற பொடி ரூபத்திலுள்ள கச்சாப் பொருள்களை பசையுள்ள களிமண்ணுக மாற்ற உதவுகிறது.

செய்முறை

சீனு களிமண்	16	அவு. எடை
பிரசிபிடேடட்சாக்	3 ¼	,,
வெண்காரம்	2½	,,
ஓலிக் அமிலம்	14	அவு. அளவு
தண்ணிர்	தேவையான அளவு.	

1. சீனு களிமண், பிரசிபிடேடட்சாக் இந்தப் பொடிகளை ஒன்ருகச் சேர்த்து சல்லடையில் சலித்துக் கொள்ளவும்.

2. வெண்காரத்தை இலேசாகச் சூடு செய்து கொள்ளவும். ஓலிக் அமிலத்தையும் தனியாக சூடு செய்து கொள்ளவும். இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து நன்ருகக் கலக்கவும்.

3. நெ. 2ஐ, நெ. 1. உடன் சேர்த்து தேவைப்படும் அளவுக்கு தண்ணிரைச் சேர்த்து நன்ருகப் பிசைந்து கொள்ளவும் பிசையும் போது கச்சாப் பொருள்கள் ஒன்ருேடொன்று நன்ருகச் சேரும்படி பிசையவேண்டும். இப்படி பிசைவதால் வெண்மை நிறமுள்ள களிமண் கிடைக்கிறது.

4. இவ்வாறு தயாரிக்கப்பட்ட வெண்களிமண்ணை அச்சுகளின் உதவியால் தேவைப்படும் உருவத்தில் செய்து, காற்றில் கொஞ்சம் உலர வைக்கவேண்டும். பிறகு ரொட்டி தயாரிப்பது போல் இளஞ்சூட்டில் சூடுபடுத்தினுல் ரசாயன மாறுபாடு ஏற்பட்டு, எழுதும் சாக்பீஸ் உண்டாகிறது. ★

பதினுறு செல்வங்கள்

ஆவணித் 'திங்களில்', 'நமஸ்தே' என்ற கட்டுரையின் ஆசிரியர் ''பதினுறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் நீ'' என்று வயோதிக ஹிந்து ஸ்திரீ வயதில் சிறிய பெண்ணை ஆசீர்வதிப்பதை ஒரு உதாரணமாகத் தருகிருர். ஆனுல் அவர், 'ஏற்கனவே எட்டுக் குழந்தைகளுக்குத் தாயான பெண்மணியை இந்த முறையில் ஆசீர்வதிக்கும் கர்நாடக ஸ்திரீ தற்கால பிரஜா உற்பத்தி குறைப்பு திட்டத்தைப் பற்றி அறிந்திருக்க நியாயம் இல்லை தான்' என்று வேடிக்கையாகக் கூறுவதால், வாசகர்கள் பதினுறு குழந்தைகளைப் பெற்று வாழ்வாயாக என்று ஆசீர்வதித்ததாக தப்பபிப்பிராயம் கொள்ள இடம் இருக்கிறது அல்லவா ?

பாட்டி சொன்னது பதினுறு குழந்தைகளை எண்ணி அல்ல;புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள்,பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இனிமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்ற பதினுறு நற்செல்வங்களைக் குறித்தே என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

— 'நந்தி' இலங்கை.

காவியம்

நா. பார்த்தசாரதி

மொழியைக் கருவியாகக் கொண்டு படைக்கப் பெறும் அழகு தழுவிய நுண் பொருள்கள் யாவற்றுக்கும் தொகுதியானபெயர் 'இலக்கியம்' என்பது இலக்கியத்தின் துறைகள் பல. வகைகளும் பல. பொருளாழமும் சொல்லழகு முள்ள, ஒற்றைத் தனிச் செய்யுளிலிருந்து, ஓராயிரம் செய்யுட்களடங்கியதொகுதி வரை இலக்கியம் என்ற பெயரினுள் அடங்கலாம்,

ஆனால், காவியம் இலக்கியத்தின் ஒரு தனி அம்சம். அதற்குச் சில வரன் முறைகளும் கட்டுப்பாடுகளும் உண்டு 'கட்டுப்பாட்டுக்கும் வரன் முறைக்கும் அடங்கி நல்ல கவிதை தோன்ற முடியுமா?' என்பது பிழையான ஐயம். கட்டுப்பாடுகளும் வரன் முறைகளும் இருப்பதால்தான் காவியம் அழகு வகையில் உயர்ந்து நிற்க முடிகிறது.

'காவியம்' என்ருல் கவியால் இயற்றப்படுவது என்று பொருள். அப்படியானுல் கவி ஒரு தனிப் பாட்டை எழுதினுலும்அது காவியமாகுமா? என்ற கேள்வி எழலாம். இல்லே. அப்படி ஆகாது. காவியம் என்ற சொல் சிறப்பு வகையால் தொடர்நிலேச் செய்யுள்களேயே உணர்த்தும். சேற்றில் முளேப்பதற்கு எல்லாம் பங்கயம் என்றே பெயர். ஆனுலும் பங்கயம் என்ருல் தாமரையையே குறிக்கிறது. அதுபோலவே கவி எழுதுவன எல்லாம் காவியமாயினும், தொடர் நிலேச்செய்யுளுக்கே அந்தப்பெயர் சிறப்பு உரிமை பெறுகிறது.

காவிய வகை

காவியம், பெருங்காவியம் சிறு காவியம், என்று இரண்டு வகைகளே உடையது. காவிய உறுப்புக்களால் இவ்விரண்டிற்கும் மிகுதியான வேறுபாடுகள் இல்லேயாயினும் பொருளமைப்பால் வேறுபாடு உண்டு. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களேயும் முற்றிலும் பெற்று வருவது பெருங்காவியம், உறுதிப் பொருள்களே முற்றிலும் பெருமல் இரண்டொன்று குறைந்து வருவது சிறுகாவியம். அளவில்தான் வேறுபாடு, அமைப்பில் பெரும்பாலான வேறுபாடுகள் இல்லே. பெருங்காவியம் பரந்து பாயும் ஆற்றைப் போன்றது என்ருல், சிறு காவியம் மலேமுகட்டில் திரண்டு விழும் சிறு அருவியைப் போன்றது என்று கூறலாம். பாத்திரங்கள் நிறைய வருவதினுல் ஒரு காவியம் அதன் சிறு காவிய நிலேயிலிருந்து உயர்ந்து பெருங் காவியமாகி விட முடியாது. அதே போலப் பாத்திரங்கள் குறைவாக வருகின்றதனுல் ஒரு பெருங்காவியம் தன் நிலேயில் குறைந்து சிறு காவியமாகி விடாது. உறுதிப் பொருள்களின் மிகுதிக் குறைவு தான், பெருமை, சிறுமைக்குக்காரணம். பாடல் வகைக்கும் இவ்வாறே கூறலாம். பாடல்களின் பெருமை, சிறுமை, கூடக் காவியம், பெருங்காவியமாவதற்கோ சிறு காவியமாவதற்கோ காரணமாக முடியாது. உறுதிப் பொருள் அமைப்பு ஒன்றே காரணமாக முடியும். காவிய உணர்வுக்கு இது இன்றியமையாத அடிப்படை.

காவிய உறுப்புக்கள்

காவியத்தின் தோற்று வாயில் கடவுள் வாழ்த்தும், வணக்கமும் அமையவேண்டும். வீட்டுக்கு வாயில் போலவும், கோவிலுக்குக் கோபுரம் போலவும், யானேக்கு முகபடாம் போலவும் முக்கியமானவை வாழ்த்தும் வணக்கமும். இவற்றைப்பாடிய பிறகு 'வருபொருள்'—அதாவது அந்தக்

காவியம் என்பது என்ன? அதன் இலக்கணத்தை விவரிக்கும் கட்டுரை இது.

காவியத்தில் சொல்லப் படுகிறவற்றின் சுருக்கமான கருத்து, உரைக்கப்பட வேண்டும்.

''தொடை நிரமபிய இராமாவ
தாரப் பேர்த்தோமறு மாக்கதை
நடை நிரம்பிய இன் சொலால்
நவிற்றுகின்றேன்''
(கம்பர்)

''சிலப்பதி காரமென்னும்
பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டு
டைச் செய்யுள்''
(இளங்கோ வடிகள்)

என்று கம்பரும் இளங்கோவும் வருபொருளைத் தொடக்கத்திலேயே கூறியுள்ளனர். இதற்கு அடுத்தபடியாகத் தன்னிகரில்லாத் தலைவன் அந்தக் காவியத்திற்கு அமையவேண்டும். கதைப் போக்கில் இடையிடையே மலை வருணனை, கடல் வருணனை, நாடு, நகர வருணனைகள், கார், கூதிர், வேனில், முன்பனி, பின்பனி, ஆகிய பருவ வருணனைகள் அமையவேண்டும். திருமண நிகழ்ச்சி, முடிசூட்டு விழா, பொழில் விளையாடல், நீராட்டு விழா, மக்களைப் பெற்று மகிழ்தல், ஆகிய மங்கல நிகழ்ச்சிகளும் காவியத்தில் அமைதல் நலம். வருணனைப் பகுதியில் சூரியோதயம், சந்திரோதயம், ஆகியவை பற்றிய வருணனைகளும் அமையவேண்டும். காதல், காதலில் ஊடல் முதலிய நிகழ்ச்சிகளும் இடையே வருவன. நவரசங்களும் நிகழ்ச்சிகளின் போக்கிலேயே இயைந்து வர வேண்டும் அரசர்களைப்பற்றிய காவியமானால், மந்திராலோசனை, தூது அனுப்புதல், வெற்றி ஆகிய நிகழ்ச்சிகள் தொடர்பாகக் கூறப்படவேண்டும். காண்டம், சருக்கம், பருவம், என்னும் பெரும் பிரிவுகளையும், இலம்பகம், படலம், முதலிய சிறு பிரிவுகளையும் பெற்றிருக்க வேண்டும். நல்ல நடை, நெருங்கிய சுவை, கனிந்த பாவம், இவைகளோடு அறிவுவல்லமை மிக்க கவி உருவாக்குவது தான் மேலே கண்ட உறுப்புக்களையும் பெற்று ஒரு நல்ல காவியமாக முடியும்.

நாடகக் காவியம்

சாதாரணக் காவியங்களுக்கும் உரிய தாயினும் நாடகக் காவியங்களுக்கே முக்கியமானது 'சந்தி' என்ற உறுப்பு. சந்தி என்பது இங்கு காவியக் கதையின் தொடர்பான வளர்ச்சியைக் குறிக்கும். நாடகக் காவியங்களில் பாடல்கள் கவிக்கூற்று, பாத்திரங்களின் கூற்று, பாத்திரங்களின் உட்கோள் என்ற மூன்று முறைகளில் அமையலாம். ஆனால் அரங்கியல்புக்கு ஏற்ப அமைவன ஆகையால் கவிக்கூற்று, உட்கோளும், குறைவாகவும், பாத்திரங்களின் கூற்றே மிகுதியாகவும் நாடகக் காவியம் இயங்கவேண்டும். கதையின்சுவை தொடர்பான வளர்ச்சிக்கு உறுப்பாகிய 'சந்தி' என்பது ஐந்து வகைப்படும். அவை, முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்பன.

ஒரு நல்ல நாடகக் காவியத்தின் கதை, ஒரு நல்ல வித்து முளைத்து வளர்ந்து, காய்த்து விளைவது போன்ற அமைப்பை உடையது. வித்து மண்ணிலிருந்து முளைத்து முகங்காட்டுவதுபோலக் கதையின் தோற்றுவாய்க்கு முகமென்று பெயர். முளைத்து இலைகள் தோன்றிச் செடியாவது போலக் கதை தோன்றி, ஒரு குறிப்பிட்ட அளவு வளர்வது பிரதிமுகம். செடியில் பூத்துக் காய்தோன்றப் பிஞ்சு கருவிருக்கும் நிலைபோலக் கதையின் கருத்து எழுச்சி பெறுவதற்குரிய முக்கியத் திருப்பத்திற்குக் 'கருப்பம்' என்று பெயர். பூவின் மகரந்தம் முற்றிக் கரு வெளிப்பட்டுச் செடியில் காயாகிக் கனிந்து விளைவு தோன்றுவது போல நாடகக் காவியத்தின் கதை பூரணமான, கவர்ச்சி நிறைந்த முடிவை அடைவதற்கு 'விளைவு' என்று பெயர். இறுதியில் ஏற்படும் அனுபவமே துய்த்தல். உதாரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் நாடகக் காவியத்திற்கு முகம், கோவலனும் மாதவியும் சந்தித்து உறவாடுவது. பிரதிமுகம், கடற்கரையில் கானல்வரிப் பாட்டினால் இருவரும் வெறுத்துப் பிரிவது, கருப்பம், கோவலன்

கண்ணகி மதுரைப் பயணம். விளைவு, மதுரையில் கோவலன் கொலை, கண்ணகி சினம் துய்த்தல், செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் கட்டுதல்.

தமிழ்க் காவியங்கள்

ஆயிரக்கணக்கான பாடல்களால் இயற்றப்பட்ட நூல்கள் தமிழில் நூற்றுக்கணக்காக உள்ளன. ஆனால், அவைகள் யாவும் காவியங்கள் ஆகமாட்டா. தமிழில் சிந்தாமணியிலிருந்து, பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' வரை உள்ள காவியங்களில் காவிய அழகு நிறைந்தவை என்று சில வற்றையே விரல்விட்டு எண்ண முடியும். இதிகாசத் தொடர்போடு கம்பராமாயணம், வில்லிபாரதம், இவைகளும், சமயத் தொடர்போடு பெரிய புராணம், மணிமேகலை, இவைகளும், தனித்த முறையில் சிந்தாமணியும், சிலப்பதிகாரமும், காவியங்களாம். நவீன காவியங்களில் பாஞ்சாலி சபதமும், பாரதிதாசனின் 'பில்ஹணியமும்' நாமக்கல் கவிஞரின் 'அவனும் அவளும்' சிறந்தவை. இவை சிறந்தவையே ஒழிய மிகச் சிறந்தவை அல்ல. சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம் மூன்றுமே மிகச்சிறந்த தமிழ்க் காவியங்கள். சிலப்பதிகாரம் தமிழுக்குரிய ஒரே ஒரு நாடகக் காவியம். காவிய உத்திகளில் சிந்தாமணியும் கம்பராமாயணமுமே உயர்ந்தவை. படிப்பவர்களைச் சொக்கிப் போகச் செய்து, கனவுலகில் இலயிக்க வைக்கும் அதிசய ஆற்றல் கம்பனுக்கே யுரியது. சேக்கிழார் சிறப்பு, பக்தி உலகத்தைக் கொண்டும் ஒரு அழகிய காவியம் இயற்ற முடியும், தொண்டர்கள் பெருமையைக் காவியமாக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டியதேயாகும்.

புராணமும் காவியமும்

பழங்காலத் தொடர்போடு இயற்கையை மீறிய நிகழ்ச்சிகள் அடங்கிய பிற்காலப் புராணச் செய்யுட்களைக் காவியங்களாகக் கொள்ள வேண்டியதில்லை. அழகு நோக்கு குறைவாகவும் சமயப் பிரசார நோக்கு மிகுதியாகவும் பதின்மூன்று, பதினான்கு முதலிய நூற்றாண்டுகளில் தோன்றிய புலவர்கள் காவியங்களை நிறைய எழுதிக் குவித்தனர். அவை பிற்கால மக்களைக் 'காவியங்கள்' என்ற முறையில் கவரவே இல்லை. படிப்போரும் அவற்றை மிகுதியாக நாடவில்லை. பிற்காலப் புராணங்களுள் காவியமாக ஒப்புக்கொள்ள ஏற்ற சிலவும் உள்ளன. 'கந்த புராணமும்,' 'குருகாமான்மியமும்' அத்தகையவை! சொல்லழகோ, அலங்கார சாமர்த்தியங்களோ காவியமாகி விடாது என்பதை உணர வேண்டும். அதிவீரராம பாண்டியர் எழுதிய நைடதம் நன்கு அமைந்தும் முடிவில் அளவுக்கு மீறி சுருங்கி விட்டதனால், காவியம் என்ற பெருமையை இழந்துபோய் விட்டது. 'நளவெண்பா' மிகச் சிறியதாக இருப்பினும் நல்ல காவிய அமைப்போடு கூடிய சிறு காவியமாகப் புகழ் பெற்று விளங்குகிறது. வரலாற்றுத் தொடர்போடு எழுந்த நல்ல காவியமாகவும் புகழ் பெற்று விளங்குகிறது. வரலாற்றுத் தொடர்போடு எழுந்த நல்ல காவியமாகப் பேராசிரியர் மு. ராகவய்யங்காரின் 'பாரி காதை'யைக் குறிப்பிட வேண்டும்.

காவிய ஆராய்ச்சி

காவியங்களையும், அவற்றிலுள்ள பாத்திரங்களையும் அளவு மீறிப் புகழ்வது ஒரு புறமும், அளவு மீறித் தூற்றி எரிப்பது, உடைப்பது ஒருபுறமும் நடைபெறக் காண்கிறோம். கதைகளில் வரும் நல்லவர்கள் நமக்கு நன்மையைக் கற்பிக்கின்றனர். தீயவர்கள் தீமை இத்தகையது என்று காட்டி எச்சரிக்கின்றனர். அவ்வளவுதான். இதற்காக அழித்தல், ஒழித்தல் போராட்டங்கள் அனாவசியம். மனிதப் பண்பை உயர்த்துவது காவியம். மனித வாழ்வில் நிறைந்துள்ள ரசாபாசங்களைக் காட்டும் கருவியாக அதை எண்ணினால் அந்த எண்ணம் பேதமை. உண்மைதான் நமக்கு வேண்டும். 'உண்மையைப் போன்றவை'—வேண்டாம். ஏனென்றால் அவைகள் போலிகள். ★



கற்பக விருக்ஷம்

மகதன்

தென்னையை சாலைகளிலும், பெரும்பாலும் மணற்பாங்கான ஆற்றோரங்களிலும், சிலர் நஞ்செய் வரப்புகளிலும், சிலர் தோப்புகளிலும் பயிர் செய்கிறார்கள். இது பெரும்பாலும் இந்தியாவின் தெற்குப் பாகத்திலும், இலங்கையிலும், மலேயா தீபகற்பத்திலும் காணப்படுகிறது. நீண்டு வளர்ந்து, இயற்கையின் பேய்க்காற்றையும் எதிர்த்து நிமிர்ந்து நிற்கும் தென்னையால் மனிதனுக்கு பிரயோசனமா என்று சிறிது ஆராய்வோம்.

இயற்கையின் பேயாட்டத்தால் சில சமயங்களில் பூபாகமே மாறி விடுகிறது. ஆனால், தென்னை என்னமோ, இயற்கையிலேயே காய்க்கும் தன்மையை மட்டும் மாற்றிக் கொள்வதில்லை. தென்னை கடற்கரையோரங்களிலும், ஆற்றங்கரைகளிலும் பொதுவாக செழிப்புடன் வளருகிறது. மனிதர்களை 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று ஔவை பிரித்து வைத்தாள். அதே போல தென்னையிலும் வெளிறிய மஞ்சள் நிறமுள்ள இளநீர் காய்க்கும் மரங்களுக்கு செவ்விளநீர் மரவகை என்றும், பச்சை நிறமுள்ள இளநீர் காய்க்கும் மரங்களை ஒருவகையாகவும் பிரித்திருக்கிறார்கள்.

முற்றிய தேங்காயை (நெற்று என அழைக்கப்படுகிறது) சுமார் 3 அல்லது 4 அடி ஆழம் தோண்டப்பட்டு, 4, 5 நாட்கள் உலர்ந்து, அதில் செம்மண் நிரப்பப்பட்டகுழியில் நடுகிறார்கள். அது சுமார் 7, அல்லது 8 ஆண்டுகளில் பலன் கொடுக்கக்கூடிய தன்மையை அடைகிறது.

தென்னை முதன் முதலில் 3, 4. அடி நீளமும், உருண்ட தடி போன்று பசுமை நிறமுள்ள 'பாளை' என்னும் பகுதியைப் பெறுகிறது. இது ரயோசனப்படும் விதங்களை விவரிப்போம்.

பாளை என்னும் பகுதியை மற்றொரு விதமாகவும் பயன்படுத்தினார்கள். ஆனால், தற்போது நம் நாட்டில் பயன்படவில்லை பாளையை (சுமார் $1\frac{1}{2}$ அடி) நறுக்கி எடுத்து விட்டு, தென்னையில் இருக்கும் பகுதியின் முன் பாகத்தில் முள்ளை செலுத்தி விடுகிறார்கள். அம்முள்ளின் வழியாக ஒருவகை திரவம் துளிதுளியாக வடிகிறது. அத்திரவத்தை மண் கலயத்தில் சேகரிக்கிறார்கள். அதுதான் 'கள்' அல்லது 'மது' எனப்படும் போதை வஸ்துவாகிறது இவ்வகை மது தற்பொழுது திருவாங்கூர் கொச்சி சமஸ்தானம் மலேயா, இலங்கை போன்ற இடங்களில் உபயோகிக்கப்படுகிறது.

பாளைமுற்றி பூக்க ஆரம்பிக்கிறது. முதலில் கோலிக்குண்டு போன்ற காய்களாகக் காய்க்கிறது. பிறகு இளநீராக முற்றி விடுகிறது. இளநீரால் நம் இந்திய நாட்டிற்கே புகழ் ஏற்பட்டிருக்கிறது

'வெய்யிலின் அருமை நிழலில் தெரியும்' என்று ஒரு பழமொழியுண்டு. அதேபோல் வெய்யிலில் வேலை செய்து களைப்புற்று வருபவனுக்கும் கோடை காலத்தில் நெடுந்தூரம் பிரயாணம் செய்பவனுக்கும், வா! வா!! என்று இன்முகம் காட்டி களைப்பை நீக்கி களிப்பிலாழ்த்தும் இன்மருந்து இளநீரல்லவா?

பிறகு இளநீர் இயற்கையின் போக்கால் தேங்காயாக மாறுதலடைகிறது. தேங்காய் நாம் உண்ணும் ஒவ்வொரு தின்பண்டங்களிலும் கலந்து சுவையை ஒரு படி உயர்த்துகிறது. மேலும் நாம் உணவாக உட்கொள்ளும் கூட்டு, பச்சடி போன்ற கறிவகைகளிலும் குழம்பில் உறைப்பைக் குறைத்து சுவையைக் கொடுப்பதற்கும் பயன்படுகிறது. விஞ்ஞான வல்லுநர்கள் தேங்காய் என்னும் பகுதியில் 51 சதவிதம் கொழுப்புச் சத்து இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நாம் பலகாரங்கள் செய்து பல மாதங்கள் கெடாமல் இருக்க தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்துகிறோம். அதுவும் இத் தேங்காயிலிருந்தே கிடைக்கிறது. முற்றிய தேங்காயை உடைத்து அதனுள்ளிருக்கும்பருப்பு என்னும் பகுதியை வெய்யிலில் உலர்த்தி செக்கிலிட்டு அல்லது ஆலையிலிட்டு நாம் தேங்காய் எண்ணெயாகப் பெறுகிறோம். தேங்காய் எண்ணெயால் ஹேர் ஆயில்கள், சோப்புகள், கோகோஜெம் ஆகியவை தயார் செய்கிறார்கள்.

தென்னையின் தோகை எனப்படும் பகுதி வீடு கட்டுவதற்கு, பனை ஓலை வேயும் போது பயன்படுகிறது. தென்னையின் மட்டையை 6' நீளமுள்ள பகுதிகளாகப் பிரித்து, 'கிடுகு' எனப் பெயர் கொண்ட தட்டிகளாகப் பின்னுகிறார்கள். இந்த கிடுகு கல்யாணம், பிரசங்க மேடை, மாநாடு போன்றவைகளுக்கு பந்தல் போடப் பயன்படுகிறது

தேங்காயிலிருந்து பருப்பு எனப்படும் பகுதி நீக்கப்பட்டவுடன் குழி போன்ற தேங்காய் ஒட்டுப் பகுதியில் சிறிய குச்சி ஒன்று செருகப்பட்டால், அது ஏழைக்கு 'எவர் சில்வர்' கரண்டியாகிறது. தென்னையின் பாகங்கள் இவ்வாறு பயன்படுகிறதென்றால், தென்னை மரம் வீடு கட்டும் போது உத்தரமாகப் பயன்படுகிறது. கயிறு பின்னுதல் தென்னை மனித வர்க்கத்திற்களிக்கும் முக்கிய உதவியாகும். மேற்கண்ட முறையால் ஒரு ஏழைக் குடியானவனுக்கு குடிசைத் தொழிலாகவும், அவன் வாழ வழி வகைகளையும் செய்கிறது தென்னை என்றால் மிகையாகாது.

2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவப் பெருந்தகை 'தோன்றிப் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' என்றார். இவ்வாக்கை ஆறறிவு நிரம்பப் பெற்ற மக்களுக்கு கூறினார் என்று பெருமை கொள்கிறது அறிவுலகம். தென்னை சொல்கிறது: ''இக்கருத்து மனிதர்களுக்குச் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, நான் மக்களுக்கு மேற்கண்ட முறைகளில் பயன்படுவதைக் கண்ட வள்ளுவப் பெருந்தகைக்கு, என்னைப் பார்த்துத்தான் இக்கருத்தே உதயமானது' என்று கர்வம் கொள்ளுகிறது. மனித வர்க்கத்திற்கு இத்தகைய உயர்ந்த வகையில் பயன்படும் தென்னையை 'கற்பக விருக்ஷம்' என்று கூறுவதில் தவறென்ன? ★

புதனும் வெள்ளியும்

அ. நடராஜன் பி. எஸ்ஸி.

நீலவானிலே பவனி வரும் விண்மீன்களேயும் சூரிய சந்திரர்களேயும் கோள்களேயும் அறியாதார் எவரும் இலர். சூரியனும் ஒரு விண்மீன்தான் என்றும் வேறு ஒரு விண்மீனுல் தாக்கப்பட்டதனுலோ தானுகவோ, அல்லது மிகப் பெரியதொரு விண்மீன் அருகில் வந்ததனுல் ஏற்பட்ட அலேகளின் விளேவாகவோ, அல்லது சூரியனின் துணே விண்மீன்கள் சிதறுண்டதனுலோ சூரியனேச் சுற்றி வரும் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரானஸ், நெப்டியூன், ப்ளூடோ ஆகிய கோள்கள் உண்டாயின என்றும் வான சாஸ்திர நிபுணர்கள் கருதுகின்றனர். சூரியனேச் சுற்றி வரும் கோள்களில் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகியன உள்நிலேக் கோள்கள் என்றழைக்கப்படுகின்றன. அவற்றில் புதன், வெள்ளி என்றும் இரண்டு கோள்களேப் பற்றித் தெரிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். புதனும் வெள்ளியும் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இருக்கின்றன.

''தார தேவி சந்திரற்குப்
பயந்தேன் என்ற
தனயனேத்தான்
ஏரார் பிரமன் இரவியுடன்
ஒரு வாது அமர்வாய் என்று
அகலச்
சீரார் குணமிக்கு எழுந்த புதன்
சிறந்தே வயங்கும்
கோள்களுக்கு
நேராய் உயர்ந்த வடவரையை
நித்தம் வலமாய்வரும் நாளில்''

— ஜயங்கர் பாகவதம்.

சூரியனேச் சுற்றி வரும் கோள்களில் அதற்கு மிகவும் அருகாமையில் இருப்பது புதன்தான். அதன் பாதை சற்று நீண்ட வட்டமாக இருப்பதனுல் சூரியனிடமிருந்து ஒரு சமயம் 4. 30,00,000 மைல்கள் தொலேவிலும் மற்ரெரு சமயம் 2,85,00.000 மைல்கள் தொலேவிலும் இருக்கிறது; அதன் சராசரித் தொலேவு சுமார் 3,60,00,000 மைல்கள் எனக் கொள்ளலாம். கோள்களில் மிகச் சிறியதும் புதனே; அதன் குறுக்களவு 3,100 மைல்களேயாம். அதன் எடை சந்திரனுடையதைப் போன்று ஏறக்குறைய மூன்று மடங்குதான். சூரியனேச் சுற்றி வருவதற்கு அது எடுத்துக் கொள்ளும் நேரம் 88 நாட்கள். தன்னேத்தானே சுற்றி வருவதற்கும் அதற்கு 88 நாட்களே ஆகின்றன.

சூரியனுக்கு மிக்க அருகாமையில் இருப்பதால் பொதுவாகப் புதன் நமக்குத் தென்படுவதில்லே. சூரிய வெளிச்சத்தினிடை அதைக் காண்பது அவ்வளவு எளிதன்று. அதன் இயக்கத்தை நன்கு கணக்கிட்டுத் தொலேநோக்கியின் வாயிலாக அதைக் கண்டு கொள்ள முடியும். புதனும் வெள்ளியும் சூரியனேச் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் நேரம் ஓராண்டிற்குக் குறைவாகவே இருப்பதால் அவை சில சமயங்களில் சூரியன் கீழ்த்திசையில் தோன்றுவதற்கு முன்னராகவும் வேறு சமயங்களில் சூரியன் மேற்கில் மறைந்த பிறகும் நமக்குத் தென்படுகின்றன. அந்நிலேகளில் அவை 'காலே விண்மீன்,'

மாலை விண்மீன்' எனப்படுகின்றன. செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 'காலை விண்மீன்' ஆகவும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் 'மாலை விண்மீன்' ஆகவும் இருக்கும்போது புதன் நமக்குச் சற்றுத் தெளிவாகத் தெரிகிறது. தொடுவானத்திற்குச் சற்று மேலாக விண்மீன் போன்று அது காட்சி அளிப்பதை நாம் காணலாம். பலர் புதனைப் பார்த்திருக்கா விட்டாலும் மிகப் பழங்காலத்திலிருந்தே வானவியல் அறிஞர்களுக்கு அது தெரிந்திருந்தது. தொலைநோக்கியின் வாயிலாகக் கவனிக்கும் போது சந்திரனுக்கு இருப்பதைப் போன்றே புதனுக்கும் கலைகள் இருப்பது புலனாகிறது புதனுக்கு அமாவாசையாயிருக்கும் போது (அதாவது, அது பூமிக்கு மிக்க அருகாமையில் இருக்கும்போது) அதன் வட்டமான பரப்பு பெரியதாகவும் புதனுக்குப் பௌர்ணமியாயிருக்கும் போது (அதாவது, அது பூமியிலிருந்து மிக்கத் தொலைவில் இருக்கும்போது) பரப்பு சிறியதாகவும் தோற்றம் அளிக்கிறது.

புதனின் கவர்ச்சி ஆற்றல் மிகவும் குறைவானது; ஆதலால், அங்கே காற்று மண்டலம் இருக்க முடியாது; அதன் மீது விழும் சூரிய ஒளியின் மிகக் குறைவான பகுதியையே (14-ல் ஒருபகுதியையே) அது பிரதிபலிக்கிறது என்பதும் காற்று மண்டலம் இல்லை என்பதற்கு ஒரு நல்ல சான்று. மேலும், சூரியனுக்கு அருகில் இருப்பதால் அதன் வெப்ப நிலையும் அதிகமாகவே இருக்கிறது. காற்று மண்டலம் இல்லாததனால் அங்கு நீரும் இருக்க முடியாது. சந்திரனைப் போன்று அதையும் ஓர் 'இறந்த கிரகம்' என்றே கருதலாம்.

புதனின் ஒரு பாதியே எப்போதும் சூரியன் பக்கமாக இருக்கிறது. இதிலும் புதன் சந்திரனை ஒத்திருக்கிறது. சந்திரன் ஒரு பகுதியையே பூமிக்குக் காட்டுகிறது. சூரியனை நோக்கி இருக்கும் பகுதியின் வெப்பநிலை சூரியனிடமிருந்து புதன் இருக்கும் தொலைவைப் பொறுத்து 'ஸெண்டிக்ரேட்' அளவில் 280 டிக்ரீயிலிருந்து 410 டிக்ரீ வரை மாறுகிறது; (நீர் கொதித்து ஆவியாகும் நிலை இந்த அளவில் 100 டிக்ரீ.) மறுபுறம் மிகக் குளிர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

'கவர்ச்சி விதி'க்கு ஏற்ப அது இயங்க வேண்டிய பாதைக்கும் அது இயங்கி வரும் பாதைக்கும் உள்ள சிறு மாறுதலைக் கவனித்த லவெரியர் என்னும் ஃப்ரெஞ்ச் வானவியல் அறிஞர் சூரியனுக்கும் புதனுக்கும் இடையில் வேறு ஒரு கோள் ஏதேனும் இருக்கலாமோ எனக் கருதினார். ஆனால் கவனத்துடன் ஆராய்ச்சிகள் பல நிகழ்த்தியும் கூட அத்தகைய கோள் எதுவும் புலப்படவில்லை.

வெள்ளி

''நொந்தெடுக்கலாது வீங்கும்
வனமுலை,
நுசுப்பிற்றேய்ந்தோர்,
பந்தெடுக்கலாத நங்கை
பால்கடை
வெண்ணெய்ப் பாவை,
வெந்துடன் வெயிலுற்றாங்கு
மெலிந்துக
விளங்கும் வெள்ளி
வந்து வானிட்ட சுட்டி
வனப்பொடு
முளைத்ததன்றே.''

— *சீவகசிந்தாமணி*.

'விடிவெள்ளி,' 'பெண்ணழகுத் தெய்வம்' என்னும் பெயர்களுடன் மக்களுக்குப் பண்டைக் காலத்திலிருந்தே தெரிந்திருப்பது 'வெள்ளி' எனப்படும் கோள். அது சூரியனுக்கு ஒரு சமயம் 2,60,00,000 மைல்களிலும் மற்றொரு சமயம் 16,00,000 மைல்களிலும் இயங்கி வருகிறது; அதன் சராசரித் தூரம் 6,70,00,000 மைல்கள் எனச் சொல்லலாம். சூரியனைச் சுற்றி வருவதற்கு அது எடுத்துக் கொள்ளும் நேரம் 225 நாட்கள். அதன் குறுக்களவு 7700 மைல்கள். எடை, உருவம், கவர்ச்சி ஆற்றல் ஆகியவற்றில் அது பூமியை ஏறக்குறைய ஒத்திருப்பதாலோ என்னவோ, 'பூமி

யின் தங்கை' என்று அழைக்கப்படுகிறது! ஆனால். தன்னைத் தானே சுற்றிக் கொள்ள அது எடுத்துக் கொள்ளும் நேரம், அதன் காற்று மண்டலத்தின் அமைப்பு ஆகிய விவரங்களைக் கவனிக்கும்போது பூமிக்கும் வெள்ளிக்கும் வேறுபாடு இருப்பது எளிதில் புலனாகும்.

புதனைப் போலவே வெள்ளியும் 'காலை விண்மீன்' (விடிவெள்ளி) ஆகவும் 'மாலை விண்மீன்' ஆகவும் வானத்திலே மிகுந்த வெளிச்சத்துடன் தோற்றம் அளிக்கிறது முதல் தர விண்மீன்களில் ஒன்றாகிய 'நாய் விண்மீன்' (அக்கினி நட்சத்திரம்) என்பதைவிட 15 மடங்கு அதிக வெளிச்சத்துடன் சில சமயங்களில் அது வானத்திலே ஒளியுடன் துலங்குகிறது. புதனைப் போன்று வெள்ளிக்கும் கலைகள் இருக்கின்றன. ஒரு சிறிய தொலைநோக்கியின் மூலமாகக் கூட அவற்றைக் காணலாம். வெள்ளியின் கலைகளை முதன் முதலில் கண்டு உலகிற்கு எடுத்துக் கூறிய பெருமை கலிலியோவிற்கே உரியதாகும். கி. பி. 1610-ம் ஆண்டில் தானே செய்த தொலைநோக்கியைப் பயன்படுத்தி வெள்ளியின் கலைகளைக் கண்டார் அவர்.

தொலைநோக்கியின் வழியாகப் பார்த்தால் கூட வெள்ளியின் மேற்பரப்பில் குறிகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் அது தன்னைத்தானே சுற்றிக் கொள்ள எடுத்துக் கொள்ளும் நேரம் திட்டமாக இவ்வளவுதான் என்று கணக்கிடவும் முடியவில்லை. 'நிறமாலை நோக்கி' என்னும் கருவியின் துணை கொண்டு வெள்ளியிலிருந்து நமக்குக் கிடைக்கும் ஒளியை ஆராய்ந்தால் வெள்ளியின் சுழற்சி வேகம் பூமியினுடைய சுழற்சி வேகத்தை விட மிகவும் குறைவாக இருக்க வேண்டும் என்றே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது வெள்ளி ஒரு பாதியையே சூரியனுக்குக் காட்டிக் கொண்டிருந்தால் மறுபாதியின் வெப்பநிலை மிகவும் குறைவாக இருக்க வேண்டும் அல்லவா? ஆனால். ஆராய்ச்சிகளின் விளைவாகக் கிடைத்துள்ள விவரங்களிலிருந்து மறுபாதியில் காற்று மண்டல மேலடுக்கின் வெப்பநிலை சற்று அதிகமாகவே இருப்பது தெளிவாகிறது. தன்னைத்தானே சுற்றிக் கொள்வதற்கு வெள்ளி எடுத்துக் கொள்ளும் நேரம் சுமார் ஒரு மாதம் ஆக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கவர்ச்சி ஆற்றல் ஏறக்குறைய பூமியினுடையதைப் போன்றே இருப்பதால் வெள்ளியில் காற்று மண்டலம் இருக்க வேண்டும் என்று எண்ணப்படுகிறது. தொலைநோக்கி வழியாகப் பார்க்கும் போது வெள்ளி மேகத்தினால் சூழப்பட்டே காட்சி அளிக்கிறது. ஆதலால், வெள்ளியின் நிலப்பரப்பைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. காற்று மண்டலத்தில் கரியமில வாயுவே நிறைய இருப்பதாகத் தோன்றுகிறது. அங்கே பிராணவாயு, நீராவி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. விஞ்ஞானிகள் இன்னமும் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள். நாம் கணக்கிடும் வெப்பநிலை காற்று மண்டலத்தினுடையதே ஆகும். ஒரு கால் நிலப்பரப்பிற்கு அருகாமையில் வெப்பம் சற்று அதிகமாக இருக்கலாம். அங்கு கீழ்த்தரமான தாவர உயிர் வகைகள் ஏதேனும் இருக்கலாமோ என்று நினைப்பதற்குக் கூடப் போதிய சான்றுகள் இதுகாறும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சுக்கிரனிலிருந்து ரேடியோ அலைகள்

சுக்கிான் கிரகத்திலிருந்து ஒலி பரப்பப்படுவதாகக் கூறப்படும் அலை சமிக்ஞைகள் ஒஹியோ சர்வகலாசாலையைச் சேர்ந்த ரேடியோ வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் கேட்டதாக தகவல் கிடைத்திருக்கிறது.

இக்கிரகத்திலிருந்து இந்த சப்தத்தைக் கேட்டது இதுவே முதல் தடவை.

உலகம் தந்த பரிசு?

உருவத்தில் உருண்டையான உலகம் ஓரவஞ்சனையுடையது. 'திறமைசாலிகள்' என்று தான் நினைக்கும் மனிதர்களை ஆதரிப்பதைவிட, அலட்சியப் படுத்துவதையே தன் கடமையாகக் கொண்டது இவ்வுலகம். எண்ணற்ற சிந்தனைச் சிற்பிகளும், அறிவியல் மேதைகளும் இவ்வுலகில் தோன்றி மறைந்தது உண்மை. அவர்களது மேதாவிலாசத்தை உலகம் உணராமலிருந்ததில்லை. ஆனால், போற்ற முன் வரவில்லை. அதற்கு பதில் தூற்றி வந்தது; துயர்களை விளைவித்தது. துன்பப்பாதை வழியே அவர்களை ஓட ஓட விரட்டியும் இருக்கிறது. திறமைசாலிகளாகப் பிறந்ததன் காரணமாக உலகத்தின் அலட்சியமனோபாவத்திற்கு இலக்காகி, வருந்திய மேதாவிகளுக்கு இந்த உலகம் தந்த பரிசு?..

உண்மையான அறிவாளி ஒருவனை 'புத்திமான்' என்று ஒப்புக்கொள்வதை எவ்வளவு தாழ்வாக நினைத்தது இவ்வுலகம் ?

'பூமிதான் சூரியனைச் சுற்றிவருகிறது. சூரியன் பூமியைச் சுற்றுவதில்லை' என்ற உண்மையைத் தன் ஆராய்ச்சி மூலம் எடுத்துரைத்தான் இத்தாலிய விஞ்ஞானி கலிலியோ. இது ஒரு தவறா ? இதனால் உலகத்தின் மதிப்பு குறைந்து விட்டதா ? சூரியன் தான் தன்னைச் சுற்றுவதாக நம்பி, தன்னை கௌரவித்து வந்த பிரபஞ்ச வாசிகளுக்கு, தான் சூரியனைச் சுற்றிவரும் உண்மையைத் துணிந்து தெரிவித்து விட்டானே தன் மேற்பரப்பிலேயே வாழும் ஒரு மனிதன்...?—பூமி இதை தனக்கு ஏற்பட்ட தாங்கவொணாத அவமானமாகக் கருதி விட்டது போலும் !

உண்மையைச்சொன்னான் ஆராய்ச்சியாளன் கலிலியோ. அதற்கு இந்த உலகம் அவனுக்களித்த பரிசு....? சிந்தனையாளன் கூறிய கூற்றை ஏற்க மறுத்த அறிவிலி கும்பல் கலிலியோவை கல்லால் அடித்தது. நாயை விரட்டுவது போல் விரட்டினர்; கண்ட இடத்தில் கண்டித்தனர்; கடுஞ்சொற்கள் கூறி வதைத்தனர். உலகத்தை அவமதிக்க முன் வந்த சாத்தான் என்றனர். இவ்வாறெல்லாம் சொன்னவர்கள் இதோ நாம் வாழும் உலகத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இதே மனித வர்க்கத்தினர் தான்.

சிந்தனையாளன் கலிலியோ தயங்கவில்லை அறிவுக்குப் புலனான உண்மையை, அறிவிலி கும்பலின் மிரட்டலுக்குப் பயந்து, மறுத்துக் கூறவில்லை. சிந்தனையில் உதயமான சீரிய உண்மையைப்

பிடிவாதமாகச் சொல்லி வந்தான். உலகத்தின் கோபத்தீயை கொழுந்து விட்டெரியச் செய்தது, அவன் பிடிவாதம்.

அதன் நிமித்தம் உலகம் அவனுக்களித்த தண்டனை!

சூரிய ஒளி புக இயலாத இருட்டறையில் கடுஞ்சிறை வாசம். அத்துடனா? ஆராய்ச்சியாளனான கலிலியோ, மேலும் எதையாவது ஆராய்ந்து, தன் கொள்கையை ஸ்திரப்படுத்தி விட்டால் என்ன செய்வது என்ற பயம் தலைதூக்கி விட்டது உலகத்திற்கு!

சற்றும் தாமதமின்றி துணிந்து செய்தது அந்தச்செய்கையை! கலிலியோவின் கண்களைப் பிடுங்கி குருடனாக்கி, அவன் கதறுவதைக் கண்டு களித்தது சூழலும் உலகம்! கலிலியோ மடிந்தான். ஆனால் அவன் ஸ்தாபித்த கொள்கை லகுவில் மடிந்து விடுமா?

உலகம் தயங்கியது... அதன் தயக்கம் வீண்போகவில்லை. கலிலியோவிற்குப் பின் தோன்றினான் விஞ்ஞானி நியூட்டன்.

அவன் முகஸ்துதி செய்வதில் வல்லவன் போலும்! உலகத்தின் வெறுப்பை சம்பாதித்து மடிந்த கலிலியோவின் முடிவு அவன் நினைவில் பதியவே, அவன் இதே பூமியைப் புகழ்ந்து தன் ஆராய்ச்சி மூலம் ஒரு வார்த்தை கூறினான். 'பூமிக்கு எப்பொருளையும் தன்னை நோக்கி ஆகர்ஷிக்கும் சக்தி உண்டு' என்பதே அது! ஒரு ஆப்பிள் பழத்தை உதாரணம் கூறி உலகத்தின் அபிமானத்தைப் பெற்றான் அவன்.

உலகம் அவனைப் பாராட்டியது! அவனை முகஸ்துதி செய்து, தன்னிடமுள்ள அபூர்வசக்தியை உலகிற்கு எடுத்துரைத்தது கண்டு மகிழ்ந்தது.

அத்தருணத்தை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு கலிலியோ கூறின கருத்தை நிலை நிறுத்தி விட்டான் நியூட்டன்.

'சூரியன் பூமியைச் சுற்றுவதில்லை. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது' என்று வலிவுத்திக் கூறினான். அந்த நியூட்டனை உலகத்தால் ஒன்றுமே செய்ய இயலவில்லை.

அந்தோ! கலிலியோ இதே உண்மையைச் சொன்னதற்கு அவனுக்கு உலகம் தந்த பரிசு! கண்களைக் குத்திக்கொள்ள உதவிய காய்ச்சின இரும்புத்துண்டங்கள்.

ஆனால் நியூடனுக்கு? புகழ் மாலை சூட்டி மகிழ்ந்தது!

உலகம் ஓரவஞ்சனையுடையது என்பதை மறுப்பீர்களா?

— 'கஜானனன்'

திரு இடைச்சுரம்

சம்பத்குமார்

நம் நாட்டு வீர பரம்பரையின் வரலாறு சரித்திர ஆதாரங்களுடனும் கர்ண பரம்பரைக் கதைகளாகவும் பேசப்படுகின்றன. அந்தக் காலத்தில் மொழிவழியே வேறுபட்டவர்களாக இருந்தாலும் கூட, நாட்டுப்பற்று கொண்டவர்களாக இருந்து தேசத்திற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யத் தயாராக இருந்திருக்கிறார்கள்.

சென்னையிலிருந்து சுமார் நாற்பது மைல்களுக்கப்பால், செங்கற்பட்டிலிருந்து திருப்போரூர் பாதையில் சுமார் நான்காவது மைலில் திரு இடைச்சுரம் என்ற ஒரு சின்னஞ்சிறு கிராமம் இருக்கிறது. அங்கே பச்சைக் கல்லாலான சிவலிங்கம் இருப்பதாகவும் பாடல் பெற்ற ஸ்தலமென்றும் கேள்விப்பட்டுச் சென்றிருந்தேன். அந்த ஊரின் பெயர் மருவி திருவடிசூலம் என்று அழைக்கப்படுகிறது.

அது சின்னஞ்சிறு கிராமம் என்றாலும் ரமணியமான காட்சிகள் நிரம்பியதாக, நான்கு புறமும் மலைகளால் சூழப்பட்டிருக்கிறது. இது அந்தக் காலத்திலேயே இயற்கையன்னையின் பாதுகாப்புடனேயே விளங்கியிருக்கிறது.

இங்கே சிறிது, அதே சமயம் கட்டுக்கோப்பான, கோயில் ஒன்றுள்ளது. ஞானபுரீஸ்வரர் என்பது இங்குள்ள உற்சவ மூர்த்தியின் திருநாமமாகும். அம்பிகையும் கோவர்த்தனும்பாள் என்றே வழங்கப்படுகிறார். பெரிய புராணம் அருளிய சேக்கிழார் இந்த ஈசுவரனைப் பற்றி ஐந்து செய்யுள் பாடியிருக்கிறாராம். வருண தர்ப்பணம் என்ற நூலில்கூட இதுபற்றிய குறிப்புகள் உள்ளன என்று எனக்கு விவரங்கூறிய கோயில் குருக்கள் சொன்னார்.

சம்பந்தர் இங்கேயுள்ள ஞானபுரீசுவரருக்கு தமிழில் இடைச்சுரநாதர் என்றும் கோவர்த்தனும்பாள் அம்பிகைக்கு இமயமடக்கொடி நாயகி என்றும் பெயர் இட்டருளினார். இந்த லிங்கம் முழுதும் பச்சைக் கல்லால் ஆனது என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். லிங்கத்திற்கு பிரம்மாண்டேஸ்வரர் என்று பெயர் வழங்குகிறது. மகேந்திர சோழன் என்பவன் இந்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டியதாகச் சொல்லுகிறார்கள். சரித்திர ஆதாரமும் கர்ண பரம்பரைக் கதையும் கலந்த இடமாக இருக்கிறது இது.

ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் பரம்பரையினர் இந்தக் கோயிலுக்கு கொஞ்சம் மான்யம் ஒதுக்கியிருக்கின்றனர்.

ஊரைச்சுற்றிலும் மலைகள் இருப்பது தெரிகிறதல்லவா?





ஊருக்குள் நுழைந்தவுடனேயே யானை முகத்தோன் எதிர்கொண்டழைக்க காத்திருக்கிருர்.

1924-ம் ஆண்டில் சுமார் இருபத்திஐந்தாயிரம் ரூபாய் செலவு செய்து கோயிலைப் பழுதுபார்த்து கும்பாபிஷேகம் நடந்தியிருக்கிருர்கள். தவிர மாதம் இருபது ரூபாய் கோயில் பூசாரிக்கு அனுப்ப நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்த ஊரில் சுமார் எண்பது ஏகரா நிலம் கோயிலுக்குச் சொந்தமானது. சுவாமி மானியம் சுமார் பனிரண்டு ஏகர் நிலமாகும். சுமார் அறுபது வீடுகள் கொண்ட இந்த ஊரில் ஜனத்தொகையே நூற்றைம்பது பேர்தான்.

குருக்கள் கோயிலைப் பற்றிய விவரங்களைக் கூறிய பின் ஒரு ரசமான கர்ண பரம்பரைக் கதையையுர் சொன்னுர். செங்கற்பட்டை ஆண்ட திம்மராஜாவின் சகோதரி மக்களான காந்தவராயன், சேந்தவராயன் என்ற சகோதரர்கள் இந்தச் சிற்றூரை ஆண்டு வத்தார்கள். சின்ன மருது, பெரிய மருது சகோதரர்களைப் பேர்ல. கட்டபொம்மன், ஊமைத்துரை சகோதரர்களைப்போல வீரமும் தன் மான உணர்ச்சியும் கொண்டவர்கள் அவர்கள். விஜய நகர சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தின் கீழ், என்ன காரணத்தாலோ வந்து விட்டது இந்தச்சிற்றரசு. தன் மானமுள்ள தமிழ் வீரர்களான இச்சகோதரர்கள் கொதித்தெழுந்தனர். கப்பங்கட்ட மறுத்தனர். இதனுல் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளுக்குத் தயாராகி நின்ற இந்த வீரச்செல்வர்கள், பூமிக்கடியிலே பெரியதொரு மண்கோட்டையை நிறுவினர்.

எதிர் பார்த்தபடி யுத்தம் மூண்டது. சகோதரர்களை வீரத்தால் வெல்ல முடியாத விரோதிகள் சூழ்ச்சியால் ஒழிக்கத் தீர்மானித்துச் சதித்திட்டம் தீட்டினுர்கள்,

சந்நிதிகளில் எருக்கஞ்செடி முளைக்க விட்டிருக்கிருர்கள்.



இமய மடக்கொடி நாயகி ஆலயம்: கோட்டை இருந்த இடம் மண்மூடி மேடாகி விட்டது; ஊருக்குள் செல்லும் பாதை இது.

இடைச்சுர நாதர் ஆலயம். கோவில் சிறிதானாலும் கீர்த்தி பெரிது.

மலையிலிருந்து தோற்றம். நிலங்கள் கோவிலைச் சேர்ந்தவை.



பொருளாசை கொண்ட குப்பச்சி என்ற கோயில் தாசி, காந்தவ ராயன் சகோதரர்களைக் காட்டிக் கொடுத்து விட்டாள். காந்தவ ராயன் அகப்பட்டுக்கொண்டு விடவே, கோரமாகக் கொலை செய்யப்பட்டான். சேந்தவராயன் தப்பிப்போய், இருபத்திஏழு நாட்கள் வீரப்போர் புரிந்து விண்ணுலகேகினான். அரசர்களிடம் விசுவாசம் கொண்ட வீரர்கள், நாட்டைக் காட்டிக்கொடுத்த உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த குப்பச்சியை, செங்கற்பட்டுக்கு மேற்கே, பாலாற்றின் மறுபுறமுள்ள பினாயூருக்குக் கடத்திச் சென்று சித்திரவதை செய்து கொன்றார்கள்.

இந்த அருமையான வீரக் கதையைக் கேட்டபோது மெய் சிலிர்த்தது. இன்றும் கதையில் வரும் சம்பவங்கள் உண்மையாக நடந்தவை என்று சான்று கூறுபவை போன்று, கோட்டை கொத்தளங்கள் சிதைந்து காணப்படுகின்றன. கோட்டை இருந்ததாகக் கூறப்படும் இடம் இப்போது மேடிட்டுக் காணப்படுகிறது. இந்த ஊரில் இருப்பது நூற்றைம்பது பேர்கள்தான் என்றாலும் அம்மன் கோயில் பிள்ளையார் கோயில் என்று நிறைய கோயில்களிருக்கின்றன. மக்கள் விவசாயத்திலும். பால் வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு புகழ்பெற்ற இந்த இடம் இப்போது கவனிப்பாரற்று கிடக்கிறது. கோவில் சிறியதே என்றாலும் கீர்த்தி மிகப் பெரியது இந்தக்கோயில் பிரகாரங்களில் முட்புதறும் சப்பாத்திக் கள்ளியும் எருக்கஞ்செடிகளும் முளைக்கவிட்டிருப்பது கண்றாவியாக இருக்கிறது. இதை சீர்படுத்த மதபரிபாலன இலாகாவினர் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். ஊர் ஜனங்களும் இவ்விஷயத்தில் சிரத்தை காட்டவேண்டியதவசியம். திருவடிசூலம் என்று அழைக்கப் படுகிறதேயொழிய இத்தலத்தின் சரியான பெயர் திரு இடைச்சுரம்தான்.

இதைப்போல எத்தனையோ வீரக்கதைகள் வழங்கும் இடங்கள் தமிழ்நாட்டிலிருக்கின்றன. புதைப்பொருள் ஆராய்ச்சி இலாக்காவின் முயற்சியில் இந்தக் கதைகள் நடைபெற்ற சம்பவங்களின் கோர்வையே என்று அறியும் காலமும் வரலாமல்லவா?

போட்டோக்கள்: ''பரணிகுமார்''

அம்மன் திருவிழா அமர்க்களப்படுகிறது.

விளக்கின் சிரிப்பு!

'ஆண்டி'

கலைந்த தலை வாராமல், குனிந்த தலை நிமிராமல், வைத்த கை எடுக்காமல் 'விறு விறு'வென்று காகிதத்தில் பேனாவை ஓட்டிக் கொண்டிருந்தான் அந்தக் கவிஞன். அவனுக்கு முன்னே நின்று, ஆடாமல் அசையாமல் அவனுக்கு ஒளி தந்து கொண்டிருந்தது ஒரு சிறு விளக்கு.

'விசுக்'கென்று ஒரு காற்று வந்தது. விளக்கு நடுங்கியது. அதன் நடுக்கத்தை அந்தக் காற்று லட்சியம் செய்யவில்லை. அது கேட்டது—

"இவன் எதைப் பற்றி எழுதுகிறான் தெரியுமா?"

"தெரியும். நிலவைப் பற்றி."

"நிலவைப் பற்றி இவன் எழுதுவது எத்தனையாவது கவிதை?"

"இருபத்தி இரண்டாவது. ஏன்?"

"நிலவைப் பற்றி அப்படிக் கவிதைக்குமேல் கவிதையாக வரைந்து குவிக்க அதில் என்ன இருக்கிறது என்று கேட்கிறேன்?"

"நிலவு அழகாக இருக்கிறது. தண்மை தருகிறது. உலகுக்கெல்லாம் ஒளியும் கொடுக்கிறது."

"ஹூம். அப்படியென்றால், இவன் அந்த அழகான, குளிர்ச்சியான, ஒளி தருகிற அந்த நிலவிலேயே உட்கார்ந்து அதைப் பற்றி எழுதுவதுதானே? அந்தப் பெரிய நிலவைப் பற்றி எழுத இந்தச் சிறிய விளக்கின் உதவியை எதற்காக நாட வேண்டும்?"

விளக்கு ஒரு கணம் அசந்து விட்டது. காற்றின் இந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்ல அந்த விளக்கினால் முடியவில்லை.

காற்று தொடர்ந்து கேட்டது:

"உண்ணும் இடத்திற்கு ஒளி தர, உறங்கும் இடத்திற்கு வெளிச்சம் போட, எழுதும் இடத்திற்கு பிரகாசம் கொடுக்க, வெளியே செல்லும் போது தடுக்கி விழாமல், பூச்சி பொட்டுக் கடிக்காமல் தன்னைக் காத்துக் கொள்ள—எல்லாவற்றிற்கும் உன் உதவி வேண்டும். ஆனால், அவனோ உன்னைப் பற்றிய எண்ணம் கொஞ்சம்கூட இல்லாமல், உன்னுடைய ஒளியிலேயே அந்த நிலவைப் பற்றிய தனது இருபத்தி இரண்டாவது கவிதையை எழுதுகிறான்! இதைக் கண்டு உனக்கு வெட்கமாக இல்லை?"

காற்று இப்படிக் கேட்டு நிறுத்தியது. இந்தத் தடவை விளக்கு அசந்து விடவில்லை. அது சிரித்தது, சிரித்துக் கொண்டே சொன்னது:—

"லட்சியம் கொண்ட தலைவருக்கு ஊழியராகும் வாய்ப்புக் கிடைப்பதே ஒரு பேறு. தனது தலைவன் லட்சியத்தை விட்டுத் தன்னைப் புகழ வேண்டும் என்று எந்த ஊழியனும் விரும்பமாட்டான். விரும்பினால் அவன் ஊழியனாக மாட்டான்! நான்... ஊழியன்!" காற்று மௌனம் சாதித்தது!

நவீன ரஸவாத வித்தை

அப்துல் ரஹீம்

செம்பு, இரும்பு போன்ற மட்டமான உலோகங்களைத் தங்கமாக்குவதுதான் ரஸவாதம் என்று நாம் எல்லோரும் அறிந்துள்ளோம். ஆனால், அது எப்படி என்பது மட்டும் நமக்குத் தெரியாது. நம் நாட்டு முனிவர்கள் சிலர் பித்தளையைப் பொன்னுக்கும் வித்தையை அறிந்திருந்தனர் என்றும், வாழையடி வாழையாக அவ்வித்தையைத் தங்கள் சிஷ்யர்களும் கற்பித்து வந்தனர் என்றும், இவ்வித்தையைத் தெரிந்தோர் இக்காலத்திலும் இருப்பதாகவும், பலிக்காமல் போய்விடும் என்ற பயத்தினால் அதை எல்லோருக்கும் தெரிவிப்பதில்லை என்றும் சிலர் கூறுவர்.

மூங்கில் இலைச் சாற்றைத் தண்ணீர் விடாமல் பிழிந்து, பழுக்கக் காய்ச்சிய இரும்பில் ஊற்றினால் அது தங்கமாய் விடுமாம். இவ்வழியில் இலகுவாக எல்லோரும் பணக்காரர்களாகி விடுவார்களே என்று பயந்து, ஒரு பெரிய முனிவர் சாரற்றுப் போகும்படிச் சபித்து விட்டதால்தான் இக்காலத்தில் மூங்கில் இலைகளை எப்படிப் பிழிந்தாலும் சாறு வருவதில்லையாம்! இதைப் போன்று எத்தனையோ கதைகளை நாம் கேட்கலாம்.

ரஸவாத வித்தையை எப்படியும் கண்டுபிடித்துவிட வேண்டுமென்று அரபிய விஞ்ஞானிகள் முயன்றதன் பயனாய், ரஸாயன சாஸ்திரம் வெகுவாக முன்னேறியது. ஆனால் அவர்கள் ரஸவாதத்தில் வெற்றி பெறவில்லை. கூழாங்கல் பொறுக்கும் போது மாணிக்கம் கிடைத்ததைப் போன்று அவர்களின் ரஸவாத ஆராய்ச்சியில் ரஸாயனம் வளர்ந்தது. இன்றைய உலகுக்கு ரஸவாதத்தை விட ரஸாயனமே இன்றியமையாதது.

பிற்கால விஞ்ஞானிகள் ரஸவாதமென்பது முடியாத வித்தையென்று எண்ணி அதைக் கைவிட்டனர். ஜலவாயு முதல் யுரேனியம் வரையுள்ள 92 விதமான தனி அணுக்களால்தான் இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வணுக்களே பொருளின் எல்லை. ஒரு அணுவை மற்றொரு அணுவாக்க முடியாது. இரும்பு அணுக்களைத் தங்க அணுக்களாக மாற்ற முடியாது. தங்கத்தை இரும்பாக்கவும் முடியாது. எனவே ரஸவாதமே பொய் என்று நம்பி வந்தனர்.

தனி அணுக்களின் சேர்க்கையால் கூட்டணுக்கள் தோன்றுகின்றன. உதாரணமாக, பிராணவாயு அணு ஒன்றும், ஜலவாயு அணு இரண்டும் சேர்ந்து உண்டாகும் கூட்டணுவே தண்ணீரின் மூலமாகும். நீரின் அணுவமைப்பை அறிந்தபின். விஞ்ஞானிகள் நீரைச் செயற்கையில் செய்து காட்டினர். இவ்வாறு இயற்கையில் கிடைக்கும் ஒரு கூட்டுப் பொருளில் அணுக்கள் அமைந்திருக்கும் முறையை அறிந்தபின், தனி அணுக்களைக் கொண்டு செயற்கையில் அப்பொருளைச் செய்து விடுகின்றனர்.

இவ்வாறு புதியது புனைவதற்கு விஞ்ஞானிகளுக்குக் கற்பனைத் திறன் வேண்டும். கனவை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையும் வேண்டும். இத்துடன் தேவையும் சேர்ந்துவிட்டால் விஞ்ஞானிகள் நினைத்ததைச் செய்து வீடுகின்றனர் என்னும் உண்மையைக் கீழ்வரும் சம்பவத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

முதல் உலகப் போரின்போது ஜெர்மனியின் ஆயுத பலத்தைக் குறைக்க நேச நாடுகள் முயன்றன. நைட்ரிக் அமிலத்தைக் கொண்டுதான் வெடித்து அழிக்கும் மருந்துகளைச் செய்தனர். அவ்வமிலம் தயாரிக்க நைட்ரேட் உப்

புக்கள் தேவை. அவ்வுப்புக்கள் வெளிநாடுகளிலிருந்துதான் ஜெர்மனிக்குச் சென்றன. எனவே ஜர்மனி எல்லைக்குள் அவ்வுப்புக்கள் போகாவண்ணம் நேச நாடுகள் தடுத்து விட்டன நைட்ரிக் அமிலம் தயாரிக்க முடியாமல் ஜெர்மனியர் தவித்தனர்.

விஞ்ஞானத்தை அழிவு வேலைக்குப் பயன்படுத்துவதற்கு அரக்க மனம் படைத்த அரசினர் சிலர் விஞ்ஞானிகளைத் தங்கள் கைப்பாவையாக்கிக் கொள்வதே காரணமாகும். ஜெர்மன் விஞ்ஞானிகளுக்கு நைட்ரேட் உப்பு இல்லாமலேயே நைட்ரிக் அமிலம் தயாரிக்க ஒரு வழி கான வேண்டுமென்று அரசினர் ஆணையிட்டனர். ஜெர்மன் விஞ்ஞானிகள் சிந்திக்கத் தொடங்கினர். ஒன்றும் புரியாமல் ஆகாயத்தைப் பார்த்தனர். அவர்களில் ஒருவருக்குத் திடீரென ஒரு யோசனை தோன்றியது.

நைட்ரிக் அமிலத்தின் கூட்டணு ஒன்றில், ஒரு ஜலவாயு அணுவும், ஒரு நைட்ரஜன் அணுவும், மூன்று பிராணவாயு அணுக்களும் இருக்கின்றன. இம்மூன்று தனிப்பொருள்களும் நம்மைச் சுற்றியுள்ள ஆகாயத்தில் வேண்டிய அளவு இருக்கின்றன. 'வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கழுவது' போன்றல்லவா நைட்ரிக் அமிலத்துக்காக ஏங்குகிறோம் என நினைத்தார் அவ்விஞ்ஞானி. இம்மூன்றையும் ஒன்று சேர்த்து அமிலம் தயாரிக்கலாமென்று எண்ணினார். தயாரிக்க முடியும் என்று நம்பினார். காற்றிலிருந்து நைட்ரிக் அமிலம் தயாரிக்கும் முறையையும் கண்டுபிடித்து விட்டார் அவ்விஞ்ஞானி.

இத்தகைய விஞ்ஞானிகள் ஒரு தனி அணுவின் அமைப்பை அறிந்துவிட்டால், அதைச் செயற்கையில் தயாரிக்காமலா இருந்துவிடுவார்கள்? அணுவின் அமைப்பையும், அது எதனால் செய்யப்பட்டது என்பதையும் விஞ்ஞானிகள் உணர்ந்தபின் ரஸவாதம் பற்றிய அவர்களின் நம்பிக்கையும் மாறியது. எலக்ட்ரான், புரோட்டான் என்னும் துகள்களால் செய்யப்பட்டதே அணு. ஒரு வகை அணுவுக்கும், மற்றொன்றுக்கும் உள்ள வித்தியாசத்துக்குக் காரணம் இவ்வணுத் துகள்களின் எண்ணிக்கை வேறுபாடேயாகும். ஒவ்வொரு வகை அணுவும் எடையில் வேறுபடுவது இதனால்தான். இரும்பில் 55 புரோட்டான்களும் தங்கத்தின் அணுவில் 197 புரோட்டான்களும் இருக்கின்றன. இரும்பைத் தங்கமாக்க அதில் குறையும் துகள்களைப் புகுத்தி விட்டால் போதும். ஆனால் எப்படிப் புகுத்துவது?

இவ்வாராய்ச்சி நடந்து கொண்டிருக்கும் போது ஒரு அணு மற்றொரு அணுவாக இயற்கையிலேயே மாறுவதை விஞ்ஞானிகள் கண்கூடாகக் கண்டனர்.

கியூரி அம்மையார் கண்டுபிடித்த ரேடியம் என்னும் ஒரு தனிப்பொருளின் அணுக்கள் தானாகவே சிதைந்து கரைவதால், அதனின்றும் அணுத்துகள்களும் சக்தியும் வெளியேறுகின்றன. இந்த ரஸவாத நிகழ்ச்சியில் தாழ்ந்த உலோகம் உயர்ந்த உலோகமாகவில்லை. 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை'யைப் போன்று, விலை மதிக்க முடியாத ரேடியம் கரைந்து காரீயமாக மாறுகிறது!

இந்த ரஸவாதத்தில் தங்கத்தைவிட உயர்ந்த ரேடியம் காரீயமாவதைக் கண்டு விஞ்ஞானிகள் வருத்தப்படவில்லை. ஏனெனில் பொருளின் எல்லை அணு என்றும், அணுவைச் சிதைத்தால் சக்தியாக மாறுகிறது என்றும் ஐன்ஸ்டீன் விளக்கினார். எனவே இரும்பைத் தங்கமாக்கும் ரஸவாதத்தை விட, ரேடியத்தைக் காரீயமாக்குவதன் மூலம் ஏராளமான சக்தியைப் பெறலாம் என்று விஞ்ஞானிகள் நினைத்தனர். ஆனால், தானாகவே சிதறும் போது ரேடியம் வேண்டிய சக்தியைக் கொடுப்பதில்லை. ஏனெனில் அதில் அணுச் சிதைவு மிகவும் மெதுவாக நடக்கிறது சிதைவதிலும் ஒரு விசித்திரம்! ஒரு குறிப்பிட்ட எடையுள்ள ரேடியத்தை எடுத்துக் கொண்டால், 1590 வரு

டங்கள் கழித்து அதில் பாதிதான் கரைந்திருக்கும். மேலும் 1590 ஆண்டுகள் சென்ற பின் எஞ்சியதில் பாதிகரையும். கரைந்த பாதியும் காரீயமாக 22 ஆண்டுகள் பிடிக்கும்.

எனவே இதனை வேகமாகக் கரையச் செய்து, வேண்டிய சக்தியைப் பெற விஞ்ஞானிகள் ஒரு வழியைக் கண்டுபிடித்தனர். பீரங்கிக் குண்டுகளால் கட்டிடங்களைத் தகர்ப்பதைப் போன்று, அணுவைத் துளைக்கும் துப்பாக்கிகளைச் செய்து அணுத்துகள்களையே துப்பாக்கி ரவைகளாகக் கொண்டு ரேடியத்தைச் சிதைக்க முயன்றனர். இவ்வேலைக்கு ரேடியத்தைவிட அதிக எடையுள்ள யுரேனியம் கையாளப்பட்டது.

முதன் முதல் இவ்வழியில் பெற்ற ஏராளமான சக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தவில்லை. இச்சக்திதான் அணுகுண்டு என்னும் பெயரில் நாகசாகியில் நாசத்தை விளைவித்து, இரண்டாம் உலகப் போரைச் சீக்கிரமே ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது.

நாசம் விளைத்த இந்த ரஸவாத வித்தையை விஞ்ஞானிகள் இத்துடன் விட்டுவிடவில்லை. சக்தியெல்லாம் பொருட் சிதைவால்தான் தோன்றுகின்றன என்று அறிந்தபின், சூரியனிலிருந்து எவ்விதம் சக்தி வெளிப்படுகிறது என்று ஆராய்ந்தனர். அங்கும் ரஸவாதமே நிகழ்வதைக் கண்டனர். சூரியனிலுள்ள ஜலவாயு அணுக்கள் அதைவிட உயர்ந்த ஹீலிய அணுக்களாக மாறுகின்றன. ஹீலிய அணுவின் எடை நான்காக இருந்தால், ஜலவாயு அணுவின் எடை ஒன்றைவிடச் சிறிது அதிகமாகும். எனவே நான்கு ஜலவாயு அணுக்கள் சேர்ந்து ஒரு ஹீலிய அணுவாக மாறும்போது, அணுவின் பகுதி சிதைந்து சக்தியாக மாறுகிறது. இவ்வாறு ஏராளமான ஜலவாயு அணுக்கள் ஹீலிய அணுக்களாக மாறிக்கொண்டே யிருப்பதால், சூரியனிலிருந்து சக்தி வெளிவந்து கொண்டேயிருக்கிறது.

இவ்வாறு அணுக்கள் மாறுவதற்கு சூரியனில் காணப்படும் அளப்பரிய உஷ்ணமே காரணம் என்றும் விஞ்ஞானிகள் அறிந்தனர். 16 ஜலவாயு அணுக்கள் சேர்ந்து ஒரு பிராணவாயு அணுவாக மாறினாலும் ஏராளமான சக்தி கிடைக்கும். இவ்வாராய்ச்சிகளின் வெற்றியே இப்போது வல்லரசுகள் வெடித்துக் காட்டி பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஹைட்ரஜன் குண்டுகளாகும்.

சாதாரண அணுகுண்டின் ஆதிக்கம் ஏழு சதுர மைல்களுக்குள் அடங்கி விடும் ஆனால் ஜலவாயு குண்டின் கொடுமை பல ஆயிரம் மைல்கள் பரவும். இவ்வாறு அழிவு வேலைக்குப் பயன்படுத்தாமல், இம்மாபெரும் சக்தியை ஆக்க வேலைக்கும் பயன்படுத்தலாம். மருத்துவம், விவசாயம் போன்ற எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தலாம். 4 கோடி பவுண்டு நிலக்கரியிலிருந்து பெறும் மின்சாரத்தை 15 பவுண்டு அணுவிலிருந்து அடையலாம். ஒரு பவுண்டு யுரேனியத்தில் கிடைக்கும் சக்தியைக் கொண்டு ஒரு ஆகர்ய விமானத்தை உலகைச் சுற்றி 3000 முறை ஓட்டலாம். இது 2,50,000 டன் நிலக்கரிச் சக்திக்குச் சமம்.

1934-ல் கண்டுபிடிக்கப்பட்ட ‘சைக்ளோட்ரான்’ என்னும் கருவியைக் கொண்டு இன்றைய விஞ்ஞானிகள் ரஸவாத வித்தையைச் செய்து காட்டுகின்றனர். இதனால் பெறப்படும் அணு சக்தியை மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த முயல்கின்றனர். இதனால் மக்கள் உயர்வடைவதற்குள் வல்லரசுகள் அணுச்சக்தியைக் கொண்டு உலகை அழித்து விடாமல் இருக்க வேண்டும்! ★

“உங்களுள் ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவரே அதிக மரியாதைக்குரியவராக இருக்கின்றார்.”

—குர் ஆன்.

ஒன்பதின் மகத்துவம்

"லலீத்"

ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் அடங்கியுள்ளது இந்த மாயப் பிரபஞ்சம். சுழலும் உலகத்தில் எண்ணை எடுத்துக் கொண்டால் ஒன்றுக்குக் கீழ்பட்ட எண்ணும் கிடையாது. ஒன்பதுக்கு மேற்பட்ட எண்ணும் 'ஒற்றைப் படை' யில் கிடையாது ஒன்றிலிருந்து முறையே ஒன்பதுக்குள் சுழன்று சுழன்று வருகிறது சகலவிதமான கணக்கு வழக்குகள்,

பூஜ்யத்தைபற்றி ஒன்றுமே தெரிவிக்கவில்லையே என்று கேட்கலாம் அளவுக்கு அடங்காத எண் பூஜ்யம் இதற்குத்தான் தனி மதிப்பாயிற்றே. இந்த பூஜ்யம் தனியாக வந்தாலும் அல்லது ஒரு எண்ணிற்கு முதலில் வந்தாலும், மதிப்பே கிடையாது. இதை ஸ்தானம் தள்ளிப்போடப் போட இதன் மதிப்பு அதிகரித்துக் கொண்டே போகும். தன்னை பெருக்கப்பட்ட எந்த எண்ணையும் தன் மயமாக்கும் சக்தி இந்த பூஜ்யத்திற்கு உண்டு.

இந்த ஒன்பது என்கிற எண்ணைக் குறித்து ஒரு முக்கிய விசேஷம். எண்களில் பெரியது ஒன்பது. இந்த ஒன்பதைக் கொண்டு எந்த எண்ணைப் பெருக்கினாலும் கிடைக்கும் கூட்டுத் தொகை ஒன்பதே யாகும் உதாரணமாக $9 \times 4 = 36$ $(3+6) = 9$ ஆகவே பூஜ்யத்தைப் போல் தன்னை பெருக்கப்பட்ட எந்த எண்ணையும் தன்மயமாக்கும் சக்தி இந்த ஒன்பதுக்கும் உண்டு எந்த கூட்டல் கணக்குக் கொடுத்தாலும் இந்த ஒன்பதை கொண்டு விடை அளித்து விடமுடியும்.

நவம் என்றால் ஒன்பது என்று அர்த்தம். இதில் அடங்கியுள்ள பொருள்கள். நவதான்யம், நவமணி அல்லது நவரத்தினங்கள். நவரசங்கள்; நவக்கிரகங்கள். நவராத்திரி இன்னும் பல.

நவதான்யங்கள் :—ஒன்பது வித தான்யங்கள். நெல் உளுந்து, பயறு, துவரை, கடலை, எள்ளு கொள்ளு, கோதுமை. தினை இந்த தான்யங்களில் அதிக விலை பொருள் கோதுமையும் நெல்லும். சமீபத்தில் இந்த அரிசியை ஒரு நபருக்கு இவ்வளவுதான் என்று (அவுன்ஸ் கணக்கில்) கொடுக்கப் பட்டது, நாமும் எப்படியோ அந்தக் காலத்தை கடத்தி விட்டோம். இப்படி விலை வாசிகள் உயர்ந்துக் கொண்டே போனால் ரிஷிகளைப்போல் நாமும் காடுகளுக்குச் சென்று காய்கனிகளை. புசித்துத்தான் வாழவேண்டி வரும்.

நவமணி அல்லது நவரத்தினம்:— முத்து, நீலம், பவளம், மரகதம், கோமேதகம், மாணிக்கம், வைரம், வைடூரியம், புஷ்பராகம் இவைகளை அணிந்துக் கொண்டு ஸ்நானம் செய்தால் உடம்பிற்கு மிகவும் நல்லது. மனிதனின் அந்தஸ்தை இவைகளை அணிவதிலிருந்து மதிப்பிடுகிறார்கள். மனிதனை உயர்த்துவதும், தாழ்த்துவதும் இந்த மணிகள்தான். சில வைரம் அணிந்தவுடன் அதிர்ஷ்டம் அவர்களை தேடிக்கொண்டு தானாகவே வரும், சில வைரங்கள் அதிர்ஷ்ட கட்டையாக இருப்பதுடன் அல்லாமல் குலத்தையே நாசம் செய்து விடுகின்றன.

நவரசங்கள் :—சிருங்காரம், கருணை, ரௌத்திரம், அற்புதம், சாந்தம், பயம், வெறுப்பு, வீரம், ஹாஸ்யம். நவரசங்களில் சிறந்தது சிருங்கார ரசமேயாகும். சிருங்கார ரசமில்லையேல் உலகத்தில் சிருஷ்டி, தொழில், அழிவு, ஒன்றுமே நடக்காது. இந்த ரசங்களை கொண்டு தான் நாம் இந்த உலகத்தில் அடங்கியிருக்கும் சகல விதமான விஷயங்களையும் அனுபவிக்கின்றோம்.

நவக்கிரகங்கள் :—சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு,

சனி, புதன், கேது, சுக்கிரன். இந்த கிரகங்கள்தான் முறையே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் சுழன்று, சுழன்று வந்து ஆட்டிவைக்கின்றன. இந்த நவ கிரகங்களை வாழ்த்தவும் வாழ்த்துகிறார்கள். திட்டவும் திட்டுகிறார்கள். இதில் நல்ல பெயர் வாங்குபவர் சுக்கிரன். அவனுக்கு நல்ல அதிர்ஷ்டம் சுக்ரதசை போலிருக்கிறது என்கிறோம். கெட்ட பெயர் கிடைப்பது இந்தச் சனியனுக்குத்தான். 'எப்பொழுது பார்த்தாலும் அவனுக்கு வியாதியும், பண கஷ்டமும்தான் ஏழரை நாட்டுச் சனியோ, அல்லது அஷ்டமத்துச் சனியோ தெரியவில்லை அவனைப்பிடித்து ஆட்டி வைக்கிறது' என்கிறோம். கிரகங்கள் நம்மை பிடித்து ஆட்டுகிறதோ என்னவோ. ஆனால் இந்த ஜோசியர்கள் இந்த கிரகங்களைப் பிடித்து ஆட்டுகிறார்கள். மாதத்தில் முதல் வாரமானால் சப்பளம் வாங்குவார்கள் அல்லவா? பண வரவு என்றும் கடைசி வாரமானால் கடன் கேட்பார்கள், கிடைக்காது என்பதற்கு அறிகுறியாக நினைத்தகாரியம் அனுகூலமாகாது என்று எழுதுகிறார்கள். இத்த கிரகங்கள் வக்கரித்துக் கொண்டு இருக்கிறது என்கிறார்கள் நாமெல்லாம் தனித்தனி ராஜ்யமாக பிரித்து வெவ்வேறு பக்கமாக வக்கரித்துக் கொண்டால் இந்த கிரகங்கள் ஏன் வக்கரித்துக்கொள்ளாது?

நாம் சுதந்திரமடைந்து ஒன்பது ஆண்டுகள் பூர்த்தி ஆகின்றன. இந்த ஒன்பதாவது ஆண்டின் விசேஷம், மகான் புத்தருடைய 2500 ஆண்டு விழாவும் லோகமான்ய பாலகங்காதர திலக்கரின் 100-வது ஆண்டு விழாவும் கொண்டாடப் பெற்றன.

நவராத்திரி:—இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் நவராத்திரியும் ஒன்று. சிவனுக்கு ஒரு (சிவராத்திரி) ராத்திரியும், சக்திக்கும் ஒன்பது (நவராத்திரி) ராத்திரியும் கொண்டாடப் படுகிறது. சிவமும் சக்தியும் சேர்ந்தால்தான் இந்த ஜகத்தையே ஆக்குவதற்கும் ஆதரிப்பதற்கும், அழிப்பதற்கும் முடியும்.

சிவமும் (ஒன்று) சக்தியும் (ஒன்பது) சேர்ந்து இந்த உலகத்தையே சுழலவைக்கிறது. ★

ஆர். எஸ். பதி மருந்து (ரிஜிஸ்டர்டு)

இது வீட்டிலிருந்தால் ஒரு டாக்டர் இருப்பது போலாகும்

தலைவலி, ஜலதோஷம், ஜன்னி, வாய்வுக் குத்து, கை, கால் வலி, காலரா முதலிய அநேக வியாதிகளை குணமாக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10. தபால் செலவு வேறு

எச்சரிக்கை: போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள் எங்கள் ஆறுமுக முத்திரையையும், டாக்டர் போட்டோவையும் கவனித்துப் பார்த்து வாங்குங்கள். விரிவான கேட்லாக் வேண்டுவோர் விண்ணப்பிக்கவும்.

ஆர். எஸ். பதி அண்டு கோ,

(ஸ்தாபிதம்: 1909)

தபாற்பெட்டி நிர்: 99, மதுரை.

கோவை, சேலம் ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ் K. V. S. B & சன்ஸ்,

ஜெனரல் மெர்ச்சென்ட்ஸ் அண்டு கெமிஸ்ட்ஸ்,

ஈரோடு.



கணபதி கட்டுரைகள்

பிள்ளையார் பிறந்தார்

பிள்ளையார் பூஜை அன்று களிமண்ணால் செய்த பிள்ளையாரை பூஜை செய்வதே சிலாக்கியமாகும் என்று சொல்லப்படுகிறது. கையினால் அழகாக பிள்ளையார் பொம்மை செய்வதே ஒரு கலை. 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடியக் கூடாதே' என்ற பழமொழி பிள்ளையார் உருவத்தை செய்வதில் ஏற்படும் தோல்வி காரணமாகவே ஏற்பட்டிருக்க வேண்டும்.

பிள்ளையார் தயாராகி விட்டது. இதில் காணப்படுவது அச்சுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பிள்ளையாராகும். ஒரு அணு முதல் எட்டணு வரை இப்பிள்ளையார்கள் விற்கப்படும்.

பிள்ளையார் பூஜை முடிந்தபின் அந்த உருவங்களை ஆறு அல்லது குளத்தில் கொண்டு போடுவார்கள். சிறு பிள்ளைகளுக்கு இதில் வெகு உற்சாகம்.

பிள்ளையாரை தண்ணீரில் கரைத்து விடுவது பூஜை செய்யப்பட்ட உருவம் பின்னர் தூள் தூளாகிப் போய் கால்களில் மிதிபடக் கூடாதென்பதற்காகவே.

களிமண் பிள்ளையார் வாங்குவதுடன் வர்ணக் காகிதத்தினால் செய்யப்பட்ட குடைகளும் வாங்குவது சம்பிரதாயமாகும்.

பிள்ளையார் பூஜை மிகவும் ஆடம்பரமற்ற பூஜை. யாரும் செய்யலாம். அருகம் புல்லும் எருக்கம் மாலையும் இருந்தால் போதும். சதிர்தேங்காய் உடைப்பது அவருக்கு மிக பிடித்தமாம். மோதகம் என்கிற கொழுக்கட்டை அவருக்கு மிகப் பிரியமானது.

விநாயகர் ஜனனம் குறித்து பல விதமான வரலாறுகள் உண்டு. அவைகளில் சுவாரஸ்ய மானது பின்வரும் வரலாறு.

சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் ஒருகுழந்தை பிறந்தது. இந்த வைபவத்திற்கு சனி பகவானும் வந்திருந்தார். சனி பார்வதியின் முன்பு போய் தலை கவிந்து கொண்டு நின்றார். சனிபகவானுக்கு தன் மனைவிமூலம் கிடைத்த சாபம் ஒன்று உண்டு. அதன்படி சனி பார்வைபட்ட எந்தவஸ்துவும் பஸ்மமாகி விடுமாம். தலைகுனிந்து நின்ற சனியை பார்வதி காரணம் கேட்டாள். சனி தன்பார்வையின் பலனைப்பற்றி கூறினார். பார்வதி அப்படி இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். நீ குழந்தையை பார்க்காமல் இருக்க முடியுமா என்று குழந்தையைக் காட்டினாள். சனி பயந்துக் கொண்டே வலக்கண் ஓரத்தால் குழந்தையின் முகத்தை மட்டும் பார்த்தார். குழந்தையின் தலை பஸ்மமாகி விட்டது. இச்





இந்த விநாயகர் மிகப் பிரசித்தி பெற்றவர். இவருக்கு வெள்ளைக் காரத் தெரு பிள்ளையார் என்றும் பெயராம்.

18-ம் நூற்றாண்டில் வெள்ளையர் புதுச்சேரியில் குடியிருந்த போது வெள்ளையர் வசிக்கும் பகுதியில் இப்பிள்ளையார் கோவில் இருந்த தால் இப்பெயர் வந்ததாம்.

பாரதியார் இவ்விநாயகர் மீது விநாயகர் நான்மணி மாலையை இயற்றியிருக்கிறார். பாரதியார் கணபதியிடம்வேண்டிய வரங்கள் :

மனத்தில் சலனமில்லாமல்
மதியிருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது என் மனதை
நிலை வந்திட நீ சொல வேண்டும்
எனக்குச் செல்வம் நூறு வயது
இவையுந் தர நீ கடவாயே,

செய்தி விஷ்ணுவுக்கு எட்டியது. அவர் வரும் வழியில் கண்ட ஒரு யானையின் தலையை வெட்டி எடுத்து வந்தார். அத்தலையை குழந்தையின் உடம்போடு ஒட்டி உயிர் பிழைப்பித்தார். அக்குழந்தையே விநாயகர்!

கணபதி ராயன் அவனிரு
காலைப் பிடித்திடுவோம்—குண
முயர்ந்திடவே—விடுதலை
குடி மகிழ்ந்திடவே. —பாரதியார்.

பாரதி வணங்கிய விநாயகர்

கவி பாரதியார் புதுச்சேரியில் வசித்த போது வழிபட்டு வந்த விநாயகரின் பெயர் மணக்குள விநாயகர் என்பது.

போட்டோக்கள்:
புஷ்பத்துரை - சுப்பிரமணியம்.

பிரணவ ரூபம்

'பிரதிபா'



விநாயகர் ரூபம் ஓம் என்ற பிரணவம். ஓம், உகரம் என்ற தமிழ் உயிர் எழுத்தை ஜீவனாகக் கொண்டது.

ஓம் என்னும் சொல்லே சிருஷ்டியின் ஆதியும் அந்தமுமாகும். ஓம் என்னும் ஓங்காரமே அணுவின் சுழல் சப்தம். ஆகவே வான மண்டலங்கள் இயங்கும் சப்தம். அதுவே அலையின் சப்தம். அதுவே சங்கநாத சப்தம். வண்டு ரீங்காரம் செய்வதும் குழந்தை பிறந்ததும் வெளியிடுவதும் அந்த ஒலியே.

குழந்தை கர்ப்பத்தில் தங்கியிருக்கும் பாவம் ஓங்காரம் ஆகும். வேல் வடிவாகிய விந்தும், பூச்சக்ர வடிவாகிய நாதமும் ஒன்றோடொன்று கலந்து ஒன்றுபடும் சக்தியே ஓங்காரம் ஆகும். நாதவிந்துகலாதி நமோநமோ என்று இதையே அருணகிரி நாதர் குறிப்பிட்டிருக்கிறார். ஆதியில் அன்பே சிவம் என்ற வழிபாடே இருந்தது. அரூபமாகிய அன்பை பின்னர் ரூபகப்படுத்தினார்கள். விநாயகர் விக்ரகத்தை கூர்ந்து கவனித்தால் ஓம் என்ற ஓங்காரம் விளங்குவதைக் காணலாம்.

யானைத்தலை — பெரியதலை அபாரமான சிந்தனா சக்தியைக் காட்டுவது.

பெரிய காது—அறிவிற் சிறந்தவன் என்பதைக் காட்டுகிறது.

சிறிய கண்கள்—வரம் கேட்பவனை கூர்ந்து பாராது தன் பிள்ளை போல் கேட்ட வரங்களைக் கொடுக்கும் தாராளம்.

தொப்பை வயிறு—நிறைந்த வயிறுள்ளவர் தீங்கு செய்ய எண்ணார்.

தும்பிக்கை.—கூட்டியோ குறைந்தோ செய்தாலும் தவறாக எடுத்துக் கொள்ளாதவர், மனதில் நினைத்ததை குறைவின்றி அள்ளித் தரும் பாவனையே.

ஆலமரம் வித்தில் அடங்கும். அதுபோல பிரணவத்தில் எம்மந்திரமும் அடங்கும்.

விஷ்வக்ஸேனர் எனும் சேனை நாயகர் என்கிறது வைஷ்ணவம்.

புத்த நாயகர் என்று போற்றுகிறது பௌத்த மதம். அருகநாயகர் என்று ஆராதிக்கிறது ஜைன மதம். வேதம் கணபதியின் நாதம். ஆகமங்கள் அப்பெருமானை ஆராதிக்க உரைத்த அருள் முறைகள். உபநிஷத்துக்கள், விக்நேஸ்வரர் உயிர்ப்பு. ஓங்காரம் அவர் திருமேனி.

ஆத்மஸ்வரூபத்தை உபதேசிக்கும் போது யமதர்மன் நசிகேஸுக்கு பிரணவமே சிறந்த ஆலம்பனம் என்று விளக்கினார். எல்லா வேதங்களும் எதை அடைய வேண்டிய பதம் எனத் தெரிவிக்கின்றதோ தமஸ்ஸுகள் எதைக் குறித்து சொல்லப்படுகின்றனவோ அதுதான் ஓம். இதை அக்ஷரப் பிரம்மமாக உபாசிக்க வேண்டும்.

கடல் கடந்த கணபதி

பண்டித வி. நடேசன்

கணபதி வழிபாடு இந்தியாவில் எல்லா சமயத்தினராலும் பின் பற்றப்படுகிறது என்பதுடன் மட்டுமின்றி அயல்நாடுகள் பலவற்றிலும் இவர் வழிபாடு காணப்படுகிறது.

இந்தியர்கள் புராதன காலத்திலேயே இந்தியாவுக்கு வெளியிலுள்ள இதர நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர், தேயிலை ரப்பர் தோட்டங்களில் வேலை செய்ய ஏராளமானவர் நாட்டை விட்டுச் சென்றனர். இந்திய வியாபாரிகள் பல நாடுகளில் வியாபாரத்தை நடத்தினர். இவர்கள் மூலமாக விநாயகர் வழிபாடு இதர நாடுகளுக்குப் பரவி யிருப்பது சாத்தியம்.

கணபதி வழிபாடு இத்தியாவில் மட்டுமின்றி இதர நாடுகளிலும் வழக்கத்தில் இருந்து வருகிறது. அவ்விவரங்களை விவரிக்கிறது இக் கட்டுரை.

கிரேக்க நாடும் கணபதியும்

இந்துக்களுக்குக் கணேசர், அறிவுக்கும் செயலுக்கும் முதற் கடவுளாவர். அவரது யானை முகம் நுண்ணறிவுக்கும் சர்வசக்திக்கும் சின்னமாகும்; இரண்டு கைகளும் நான்கு கைகளும் எட்டுக் கைகளுமுடைய கணபதி சிலைகள் உண்டு. கணபதியை நினைத்தே வியாபாரத்தையும் வீடு கட்டலையும் புத்தகமெழுதலையும் யாத்திரை செய்தலையும் கலியாணத்தையும் ஆரம்பிப்பர் கிரேக்கர். இந்தியாவில் இருந்ததைப்போல் ஒவ்வொரு மைல் அடையாளக் கல்லும் கணபதி விக்ரகமாகவே இருக்கும். அக் கணேச உருவத்தைக் கிரேக்க நாட்டினர் 'டெர்மினஸ்' என்று அழைப்பர். இவ்வுருவ மைல் கற்கள் பிரயாணிகளைக் காப்பதற்காகவும் வழி காட்டுவதற்காகவும் நாட்டு மக்கள் பெருஞ்சாலையோரங்களில் ஸ்தாபித்துள்ளனர். கணபதியாலயம் சண்டையிலும் சமாதானத்திலும் திறந்தே இருக்கும்.

ரோமாபுரியும் கணேசரும்

ரோமநாட்டில் கணேசர் என்னும் வார்த்தை ''ஜேனஸ்'' என்னும் பதமாக வழங்குகிறது. இந்தியாவில் காணும் அங்குசம் எனும் கருவிக்குப் பதிலாக சாவியைப் பிடித்த கையுடன் கணேசர் விளங்குகிறார். ரோமர்கள் இந்த 'ஜேனஸ்' எனுங் கடவுளே ஆரம்ப விழாக்களின் தலைவர் என்றும் எல்லாக் கடவுளரது பூஜைகளுக்கு முன்னே 'ஜேனஸ்' பூஜை நடக்க வேண்டும் என்றும் எக்காரியமும் ஜேனஸ்' தெய்வத்தை நினைத்தே தொடங்கவேண்டும் என்றும் கூறி வழிபடுகின்றனர். 'ஜேனஸ்' தெய்வங்களுள் சபாநாயகராக எண்ணிப் பிரார்த்தனை செய்து அவருக்

> ஆதாரம் :
>
> **அலைஸ் கெட்டி** என்னும் பிரஞ்சு ஆராயச்சியாளர் 'யானைமுகக் கடவுள் கணேசர்' என்ற பெயரில் விரிவான ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியுள்ளார். இக்கட்டுரையின் பெரும்பகுதியும் படங்களும் இந்நூலை ஆதாரமாகக் கொண்டே உருவாக்கப்பட்டவை.

ரோமாபுரி ஜானஸ்.

சீனவில் கற்பதாகு.

சீன துருக்கிஸ்தானில் பிள்ளையார்.

குறிய திராட்சைப் பழரசத்தையும் கோதுமை, அரிசியையும் நைவேத்தியமாக கணேசர் முன் வைத்து வணங்குகின்றனர்.

ஜேனஸ் ஆலயத்தின் கதவுகள், சண்டைக் காலத்திலும் சமாதானச் சமயத்திலும் மூடி இருக்கும். கிரேக்கர் வணங்கும் தெய்வங்களுள் தலையாயவர் 'ஜுபிடர்' என்னும் ஜீவக்கடவுள். அந்த ஜுபிடர் பூஜையும் 'ஜேனஸ்' பூஜைக்குப் பின்னரே நடத்துகின்றனர் கிரேக்கர். எல்லா உற்சவங்களுக்கும் ஆரம்ப நாள் 'ஜேனஸ்'க்குரியதாக விளங்குகிறது. தென்னிந்தியாவில் பிரம்மோற்சவங்களில் முதல் நாள் பிள்ளையார் உற்சவம் போன்றே கிரேக்கர் ஜேனஸ் விழாவை ஆரம்ப நாளில் செய்கின்றனர். ரோமிலுள்ள ''ஜேனஸ்''க்கு இரண்டு தலைகள் உண்டு; மார்புக்கு மேலுள்ளது யானைத்தலை; முதுகுக்கு மேலுள்ளது மனுஷ முகம். இன்றைக்கும் பம்பாய் மாகாணத்தில் விநாயக சதுர்த்தியன்று பூஜிக்கப்படும் கணபதிக்கு இரு தலைகள் இருக்கின்றன. ரோமாபுரி ஜேனஸுக்கும் பம்பாய் கணேசருக்கும் வித்தியாசமே கிடையாது எனலாம், ரோம நாட்டின் 'ஜேனஸ்' கடவுள் இந்திய நாட்டுக் கணபதியைப் போல குந்திய கோலமாக இருக்கிறார். அவரது இடுப்புக்குப் பின் திண்டு உண்டு. அவரது வாகனமாகிய மூஷிகமும் அவர் முன்னிலையில் உள்ளது.

திபேத்துக் கணேசர்

இமயமலையின் மேற் கீழ் அடிவாரங்களாகிய நேபாளத்திலும் திபேத்திலும் பௌத்தக் கணபதிகள் காணப்படுகின்றன. அவை 'கணபதி இருதயம்' எனப்படுகின்றன. புத்தபெருமானே தம் சீடராகிய 'ஆநந்தா'வுக்கு 'கணபதி மந்திரம்' சொல்லிக் கொடுத்தார் எனல் வரலாறு. இன்றைக்கும் திபேத்திலுள்ள பௌத்தர்கள் 'கணபதி இருதய மந்திரத்தை ஆரம்பிக்கையில் 'நமோ பகவதே ஆரிய கணபதி யிருதயாய:' என்

கின்றனர். வேண்டியவைபெறுதற்குரிய பெருவலியுடைய பெறலரிய மந்திரம் இது. எனவே பௌத்தத்தில் விநாயகக் கடவுளுக்கு, கணேசவடிவம் நான்கு கைகளைத் தாங்கிந் தாமரைப்பூமேல் குப்புறக் கவிழ்ந்திருத்தல் போல் ஒன்று உள்ளது. பதுமாசனத்தில் படுத்துள்ள கணபதியின் முதுகுமேல் புத்தசக்தி எனப்படும் பெண் தெய்வமாகிய 'பிருகுதி — டாரா' நின்றிருக்கும் உருவங்களும் உண்டு. 'பர்ணசவரி' எனும் அம்பாளுடைய பதுமாசனத்தின் கீழும் கணேசர் கவிழ்ந்து கிடப்பதுண்டு. இவ்விரு உருவங்களிலும் கணேசர் இரண்டு கரங்களில் கத்தியும் கேடயமும் தாங்கியே வீழ்ந்திருப்பார். புத்த சக்தி வெற்றியுற்றது போல் மேல் நிற்கும். இது வங்காளத்தில் காளி சிவன் மார்புமேல் நிற்பதுபோன்ற உருவமாகும். கணேசாயினியாம் சக்தியே கணபதிக்கும் மேலானது என்பதைக்காட்ட சித்தரித்த விக்ரகம் இவை எனலாம்.

திபேத்தில் ஐந்தாறு வித்தியாசமான கூத்தாடும் விநாயகர் உண்டு. திபெத்து மக்கள் கணேச சக்தியைக் 'கணேசாயினி'' என்னும் அம்பாளாக உருவம் செய்து வணங்குகின்றனர், முக்கண் கணேசர் இங்குண்டு. திபேத்திலுள்ள கணபதிக்கு அவ்வூர் பாஷையில் டிஸ்ஆக்ஸ்-ப்டாக்'' என்றும் ''பிக்கஸ்-பாய்-படாக்போ'' என்றும் பெயர்கள் உள. மங்கோலியா நாட்டில் விநாயகரை ''டோட்கார் ஒன்-காகன்' என்று அழைக்கின்றனர். கம்போடியாவில் கணேசரைப் ''பிரா கென்னஸ்'' என்று பெயரிட்டுள்ளனர். எந்நாட்டிலும் உள்ள இக்கடவுளுக்கு அவ்வந் நாட்டு மொழிகளில் பெயரிட்டு வணங்குகின்றனர் சுதேச மக்கள். திபேத்தில் உள்ள மகாதேவர்க்கு ''மகாகாலன்'' என்று பெயர். இம் மகாகாலனுக்குப் பூசை செய்வதற்குமுன் கணபதி பூஜையையே ஆரம்பிக்கின்றனர்.

இந்தியாவில் நர்த்தன கணபதி மஞ்சள் நிறமுடையவர். ஆனல் திபேத்திலுள்ள கூத்தாடு விநாயகர் சிவப்பு வண்ணம் பெற்றவர். கையில் சிந்தாமணி யுடையவர். பச்சை நிறமான பெருச்சாளி

பாலகணேசர்.



இந்தோசீன கணேசர்.

பஞ்சமுக விநாயகர்.

ஜாவா கணபதி.

வாகனம் ஏறியவர். சூரிய விநாயகர் எனும் சபாநாயக கணபதி கோயில் இருக்கிறது. இக் கோயிலில் பஞ்சவிநாயகர் மத்தியிலுள்ளவரே 'சூரிய விநாயகர்' எனப்படுபவர். பௌத்தத்திலுள்ள தர்மபாலர் போல் மண்டைஓடு எலும்புமாலை மார்பில் சிந்தாமணி மாலை முழங்கால் அளவு பெற்றிருக்கிறார் சூரிய விநாயகர். சூரிய விநாயகரது கரங்களில் ஜபமாலையும், உடைந்த தந்தமும் கோடரியும் கமண்டலமும் மோதகமும் விளங்கும். திபெத்திலும் மங்கோலியா நாட்டிலும் கீர்த்திமகுடமும் நெற்றியில் சந்திர திலகமும் கையில் திரிசூலமும் பெற்றவராக கணபதி வீற்றிருக்கிறார்.

எகிப்தியரும் ஏகதந்தரும்

எகிப்தில் கணேசரைக் ''கேநேஸ் என்றும் குனிஸ் என்றும் கோனிஷ் என்றும் கூறுவர். 'ஜேனஸ்' என்னும் கடவுளைப் போலவே கையில் சாவி யொன்றை வைத்துள்ள உருவமாகவே கணபதி விளங்குகிறார். இத்தாலிய பாஷையில் 'ஜ'வின் உச்சரிப்பு 'க' வாகவே பேசப்படுகிறது. இந்தியாவிலுள்ள பெயராம் 'கணேசரே' எகிப்திய தேசத்தில் 'கேநேஸ்' எனும் நாமமாகக் கணபதிக்கு வழங்கப்படுகிறது. எகிப்தில் கேநேஸ் கோயில்கள் பல உண்டு. சண்டைக்கும் சமாதானத்துக்கும் கணபதியை எகிப்தியர் கொண்டாடுகின்றனர். கணபதி தம் கையில் தொறடுள்ள கோல் பெற்றவராகவும் இடையர் கையுள்ள வளைதடி பெற்றவராகவும் விளங்குகிறார். எல்லா விழாவிற்கும் முதல் நாள் விழா கணேசர்க்கே உண்டு. நாடோறும் நடக்கும் தெய்வங்களின் பூஜைக்கும் கணேசர் பூஜையே முதலாகும்.

''ஜெனஸ்'' என்றும் ''கேநஸ்'' என்றும் அழைக்கும் கணேசரது திருக்கரத்தில் விளங்கும் சாவிக்குக் காரணம் உண்டு. ஜேனஸ் அல்லது கேநஸ் கடவுள் மோட்சலோகத்தின் வாயில் காப்போர் என்றும் அவரது உத்தரவின்றி முத்தியுலகில் செல்ல முடியாதென்றும் ரோமரும் எகிப்தியரும் கிரேக்கரும் கூறுவர், இக் கணேசரை வாயிலோன் என்று குறிக்கும் 'பேடல்கஸ்' (திறப்பாளர்) என்றும் 'குளுஸியஸ்'



சிங்கள விநாயகர்.

(மூடுபவர்) என்றும் பெயரிட்டுள்ளனர். ஒவ்வொரு கதவுக்கும் இரண்டு முக பக்கங்களிருப்பதைக் குறிக்க இந்தக் கணேச உருவத்திற்கு இரண்டு முகங்கள் உண்டு. பூமியைப் பாதுகாக்கும் காப்புக் கடவுளாகக் கணேசரைக் கொண்டாடுகின்றனர். எகிப்தியர் பூலோகத்திற்கும் வாசற்படி உண்டு; அங்குக் குந்தி காக்கும் கடவுளர் கணபதி என்று நம்பிக்கையுடையவராவர். சிவனது வாயில் காப்போர் கணபதி என்று கூறுதல் இந்தியரின் கொள்கை அல்லவா? எகிப்தியர் கணேசர்க்கு நைவேத்பமாக பணியாரமும் மோதகமும் பார்லி அரிசியும் திராட்சை ரசமும் படைத்து சாம்பிராணி தூபம் போட்டு வழிப்படுகின்றனர். ரோமாபுரியிலிருந்து கிரேக்க நாட்டிற்கு கணேசர் வணக்கம் போகவில்லை. ஏனெனில் அங்கு நடக்கும் பூஜை வேறு.

ஜப்பான் காங்கிடென்

அமெரிக்காவில் கணேசர்

புதிய கண்டமென்று கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு முன்னரே இந்துக்கள் அங்குபோய் குடியேறியுள்ளனர்.

கணேசனி

இக்காலத்திலும் மெக்ஸிகோவிலும் பெருவிலும் கணபதி வடிவங்களையும் பிள்ளையார் கோயில்களையும் காணலாம். அமெரிக்கபூர்வீகக்குடி விநாயகரை அறுவடைக் காலத் தெய்வமாகவே வணங்கி, வழிபாடு இயற்றுகின்றனர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் இடையே "இன்கா" சாம்ராஜ்யம் உச்ச நிலையிலிருந்தது, அக்காலத்திலேயே இந்து கலசாரமும் கணபதி வழிபாடும் விளங்கின. இங்குள்ள கணபதி இரு திசைகளுக்குரிய இரு கைகளுடன் ஆயுதபாணியாய் வீரகணபதி என வீற்றிருக்கிறார். குந்திய கோலமுடன் யானை முகத்துடன் குள்ள வடிவமும் தொப்பையும் இன்றி நெடுமால் போன்று வஜ்ர சரீரத்துடன் ஓங்கார உருவமாகக் காட்சியளிக்கிறார். இவரது பழைய படம் களிமண்ணில் அமெரிக்காவில் இருக்கிறது. இப்படத்தில் ஒரெழுத்திலோ பல எழுத்துக்களிடையோ கணபதி விளங்குகிறார். துதிக்கையை நேரே உயர்த்தியுள்ளார். மார்பில் தலைமாலையும்

நேபாள ஹேரம்பா.

எலும்புகளும் ஆபரணமாக அணிந்துள்ளார். உடம்பில் இரும்புக் கவசத்தோடு இருக்கிறார். இடுப்பில் முழு வஸ்திரமும் கச்சையும் உடுத்தியிருக்கிறார்; தலையில் மகுடம் இல்லை, ஆனால் யானை தலைமேல் பாம்பு படம் உண்டு. கணேசரையும் இந்திரனையும் இன்றும் அமெரிக்கர்கள் மத்திய அமெரிக்காவில் கிராமந்தோறும் பூஜிக்கின்றனர்; உற்சவங் கொண்டாடுகின்றனர்.

சீன துர்கிஸ்தான் கணேசர் நான்கு கைகளுடனும் புல் தோலால் செய்த 'பைஜமா' உடையுடனும் கருமையும் கபிலநிறமும் உடைய உடைகளையும் முதுகில் (தலையணை) திண்டுடனும் உட்கார்ந்த கோலத்துடனும் விநாகய உருவம் இருக்கிறது. இவ் விநாயகராலயத்தில் 'மகாகாலர்' இருவரை இரு பக்கங்களிலும் துவாரக பாலர்களாக அமைத்துள்ளனர். வட ஆசியாவில் ஏனைய தெய்வங்களை வணங்குவோர் தொகையைவிட கணபதி பூஜை செய்வோர் தொகை பெரியது. மகாயன பௌத்தம் பரவியதால் விநாயக வணக்கம் பரவியது.

பர்மா, சயாம். இந்தோசீனம் தேசங்களில் பிள்ளையார் பூஜை; இந்தியர் சீனத்திலும் சயாமிலும் பர்மாவிலும் குடியேறியபின் விநாயகர் மகிமையை யுணர்ந்த பர்மியரும் சீனரும் சயாமிகளும் கணபதி பூசையில் ஈடுபட்டனர். இக்காலம் கிருஸ்து பிறப்பதற்கு முன் எனலாம். இந்திய சிலைகள் போல் மேற்கண்ட மூன்று நாடுகளிலும் பல கணேச வடிவங்கள் பெரியனவாகவும் சிறியனவாகவும் காணப்படுகின்றன. இவ்வுருவங்கள் பெரும்பாலும் கடல் கடந்து வாணிகம் செய்த இந்திய வியாபாரிகளால் கொண்டு போகப்பட்டன என்பர் சிலர். இந்தோ சீனத்திலும் கம்போடியாவிலும் சைவ மதம் மிக்க உன்னத நிலைமையிலிருந்த காலமும் உண்டு! 'சாம்பா' பிரதேசத்திலும் மதபோதகாசிரியர்களாலும் பக்தர்களாலும் கணபதி பூஜை புகுத்தப்பட்டிருக்கலாம். பர்மா தேசத்தில் மற்ற இந்து தெய்வங்களுக்குப் புத்தராலயத்தில் இடமில்லை; ஆனால் புத்தரைக் காக்கும் கடவுளாகக் கணபதியைத் தம் ஆலயங்களில் வைத்துப் பௌத்தர்கள் வழிபடுகின்றனர். பர்மாவில் கணபதிக்கு ''மகாபைனி'' என்று பெயர்.

தென் சயாமுக்குக் குடியேறிய இந்துக்கள் 'மான்' எனுமிடத்தில் பௌத்தராலயம் சமைத்துக் கணபதிக் கோயிலாக்கினர். இது ஆறாம் நூற்றாண்டிற்கும் எட்டாம் நூற்றாண்டிற்கும் இடையே ஏற்பட்டது எனலாம். சயாமில் பிராமணர்களிடையேயும் பௌத்தர்களிடையேயும் பிள்ளையார் பூஜை மிக முக்கியம் ஆனால் அழகிய விநாயக உருவம் ஒன்றும் சயாமில் இல்லை. அங்குள்ள மிகப் பழைய சிலைகள் எல்லாம் நுண்ணிய வேலைப்பாடு உடையன அல்ல. ஆனால் மத்திய சயாமில் ஆயுத்தியன் கலைக் காலத்திற்குப் பின் கணபதிச் சிலைகள் மிக்க அருமையான சித்திர வேலையுடையனவாகக் காணப்படுகின்றன. நான்கு முகங்களுடனும் கரந்த மகுடத்துடனும் தொந்தி பருத்தின்றியும்

பூணூலுக்குப் பதிலாக பாம்பும் உள்ள கணேசர் சயாமில் விளங்குகிறார். திசைமுகனும் கணபதியே எனக் காட்ட சதுர்முக கணபதியைச் சயாமிகள் வழிபடுகின்றனர் போலும். நின்ற கோலமாகவும் குந்திய கோலமாகவும் பெருச்சாளி வாகனமுடன் கணபதி விக்ரகம் பல உண்டு. இன்றும் பூர்வீக பாஷையிலுள்ள ஓலைச்சுவடிகள் மலிந்த சயாம் புத்தகாலயத்தில் ஆறு விநாயகர் உருவங்கள் எழுத்தாணியால் எழுதப்பட்ட சுவடிப் பக்கங்களில் பார்க்கலாம். இவ்வாறும் வித்தியாசமானவை. எலியின் மேல் ஒன்றும், ஆமையின் மேல் ஒன்றும் நிற்கும் கோலமாக கணபதி தீட்டப்பட்டுள்ளன. கம்போடியாவில் 'மகாபாரதம்' தெரிந்த மக்கள் வாழ்ந்தனர்; எனவே வியாச பாரதம் எழுதிய விநாயகரைப் போற்றி வாழ்ந்தனர். ''காம்பாங்தாம்'' மாவட்டத்திலுள்ள சிலாசாசனத்தில் ''சந்தனகிரி கணேசருக்கு வழங்கிய தேவதானம்'' என்று ஒரு குறிப்பு காணப்படுகின்றது. இக்குறிப்பையுணர்த்த பேராசிரியர், பாரத் எனும் புலவர் சந்தனமலை என்பது இக்காலத்தில் காணும் ''சக்கங்பிரே'' எனும் இடத்திலுள்ள ''பிராஹபாதா'' எனும் மலை என்றும் அங்கு அழிந்துள்ள கோயிலை 'சந்தனமலைப் பிள்ளையார்கோயில்' என்றும் கூறியுள்ளார். இச்சிலாசாசனம் மிக முக்கியமானது; காரணம்: இந்தியாவிலிருந்து பிள்ளையார் பூஜை ஜப்பான் வரை சென்றுள்ளது என்றறிய மூலமாயுள்ளது இது. குறிஞ்சிநில மக்களும் யானைமுகக் கடவுளைத் தொழுதனர் என்பது வெள்ளிடைமலை. குறிஞ்சிக்குரியன் ஆறுமுகனாயினும் யானைமுகன் அவனுக்கு மூத்தவன் என்று 'சந்தனமலை' சாசனம் காட்டுகிறது.

கிழக்கிந்திய தீவுகளில்; ஜாவா, சுமித்திரா, போர்னியோ, மலேயா தீவுகளில் இந்துக்கள் குடியேறிய போது தம் கடவுளர்களையும் கூட்டிச் சென்று வாழ்ந்நனர். 'யாவதிவிபா' எனும் சம்ஸ்கிருதப் பெயர் தாங்கிய

கணேசரா?வராஹரா?

ஜாவா தீவு இந்தியருக்குத் தெரிந்ததே என்பது உண்மை. இத்தீவினைப் பற்றி இராமாயணத்திலும் குறிப்புண்டு. இங்குத் திரிமூர்த்தி வணக்கமும் சிவலிங்க வழிபாடும் மிகத் தொன்மை வாய்ந்தது; ஆதலால் கணபதி பூஜையும் பழையதாம். தேற்கு ஜாவாவில் சுயம்பு கணபதிகளே பல. விக்ரகங்கள் அழகிய வேலைப்பாடற்றவை. யானை முகத்தில் உள்ள இரு தந்தங்களும் கூர்மையாகவும் உடையாமலும் உள்ளன. ஜாவாவிலுள்ள ''டியிஎங்'' எனும் பீடபூமியிற் காணும் கணபதி வடிவம் மிகப் பழமையானது.

ஜாவா கணபதி

நான்கு கரங்களுடன் ஜாவா கணபதி காணப்பட்டாலும் இந்திய சிலைக்கு வித்தியாசமாக வீற்றிருக்கிறார். இரு கைகளைத் தம் முழந்தாள் மேல் வைத்த கோலமாக இருக்கிறார். தொப்பையின்றி மனித வடிவமுடையவர். பல அணிகள் அணிந்து மொட்டைத் தலையாக விளங்குகிறார். முக்கண் இல்லை. 'நேச ஊட்ஜல்' எனும் இடத்திலும் ''தீஜாண்டி சிங்கசரி'' எனும் இடத்திலுமுள்ள கணேசர் மிகப் பழமையும் நுண்மையும் வாய்ந்தவர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். மண்டையோடும் எலும்பணியும் மாலையாக உடைய கணபதி எனின் அது ஜாவா மக்க

களுக்கே உரியது எனலாம். இந்தோ-ஜாவா கலையும் இந்தோனிஷியா கலையும் மலிந்து கணபதி சிலையும் இன்றும் ''பாரா'' எனும் இடத்திற் காணலாம். இக்கணபதி முன்னே ஜாவா பண்பினையும் பின்னே இந்தோனேஷியா கலையையும் விளங்க தரிசனம் தருகிறார். ஜாவாவின் ஆற்றோரங்களில் விநாயகர் கோயில்களைப் பல இடங்களில் பார்க்கலாம். பாலித்தீவில் மகமதிய கோர ஆட்சியிலும் மக்கள் தங்கள் மதச்சின்னங்களையும், கடவுளர்களையும் கைவிடவில்லை. ஆதியில் பாலித்தீவினர் 'பிரம்மா'வை வணங்கும் மக்களாக வாழ்ந்தனர். 'பிரிடிட்' எனும் ஸ்தலத்திலுள்ள கணபதிக்கு மூன்று மகுடங்கள் உண்டாம். அத்தலை முடி பார்வைக்குத் தாமரைப் பூ மலர்ந்திருப்பது போல இருக்குமாம். போர்னியோவில் பதுமாசனத்தில் அமர்ந்த கணேசரைச் சுற்றி வேள்வித் தீ கொழுந்து விட்டு எரிதல் போல் செய்யப்பட்ட சிலையும் படங்களும் உண்டு.

சீனு தேசத்தில் சித்திதாதா

எக்காலத்தில் கணபதி வழிபாடு சீனத்தில் தோன்றியது என்று யாரும் கூறமுடியவில்லை. அங்குக் காணும் இரு வித்தியாசமான விநாயக வடிவம் உலகில் வேறு எங்கும் இல்லை. சீனபாஷையில் கணபதிக்கு ''குவன் ஷீபீயின்'' என்றுபெயர். 'வஜ்ரதாது' 'கர்ப்ப தாது' என இரண்டு மந்திர சக்தியுடைய விநாயக யந்திரங்கள் உண்டு, இவ்வியந்திரங்களைப் பிரதிஷ்டை செய்தே விநாயகரைப் பூஜிக்கின்றனர் சீனர்கள். விநாயகரை ஓர் உருவமாகவும் 'குவன் கிடென்' என்று இருஉருவமாகவும் சீனர்கள் செய்து பூஜிக்கின்றனர். ஓர்உருவம் புத்தரைப் போன்றிருக்குமாம். பௌத்த நாடுகளில் பெரும்பாலும் வணங்கும் உருவம் இஃதே. மிகப்பழைய கணபதி வடிவங்களை 'டுன்-ஹாங்' எனுமிடத்திலுள்ள குரோடா கோயிலின் சுவரிலும் 'கங்-ஹீஸின்' எனும் மலைப் பிரதேசத்திலுள்ள கற்பாறையிலும்காணலாம். இவை கி. பி. 531-ல் செய்யப்பட்டவை 'சிந்தாமணி கணேசர்' என்று கூறுவர். கணேசர் யானைகளின் தலைவர் என்றும் எயிரின் இறை என்றும் சீனர் கூறுகின்றனர். கணேசர் ஒன்பது சிறிய தெய்வங்களிடையே வைத்து வணங்குகின்றனர் சீனர். இவை இந்தியாவிலுள்ள 'நவக்கிரகங்கள்' போன்றும் 'சப்த மாத்ரிகா' போன்றும் சீனத்தில் விளங்குகின்றன. சீனத்தில் சில இடங்களில் கணபதியை நடுவே அமர்த்தி சுற்றிலும் நாகர் வாயு முத்து. அக்னி. மரங்கள் மலைகள், மீன்கள், சிங்கம், பறவை யானைகளின் வடிவங்களை வைத்து மக்கள் பூஜிக்கின்றனர். சீனத்தில் யானை கிடையாது. ஆதலால் ஐந்து அல்லது ஆறும் நூற்றூண்டில் இந்தியரோ ஏனையரோ யானைமுகக் கடவுளைக் சீன தேசத்துக்குக் கொண்டு போயிருப்பர்.

ஜப்பான் தேசத்தில் பிள்ளையார் பூஜை

ஒன்பதாம் நூற்றூண்டுவரை கணபதியைப்பற்றி ஜப்பானியர் அறியவில்லை. சீன பழைய சுவடியொன்றைப் படித்த பௌத்த பிக்ஷு 'கோபோ' ஆசாரியர் ''தக்கைஷி'' எனுமிடத்திலிருந்த 'காமதேரா' எனும் கோயிலிலிருந்து மகா வைரோக்கன சூத்திரங்களைப் படித்துக் கணபதியைப்பற்றி ஜப்பானியருக்கு அறிவுரை கூறினர் என்பர், ஆராய்ச்சியாளர். ஜப்பானிய பாஷையில் கணபதிக்குப் பல பெயர்கள் உண்டு அவையாவன ஷோ-டென், விநாயக்ஷா, குவான்ஜன்-ஷோ, கங்கி-டென் என்பன. நான்கு திசைகளுக்குரியனவாக, நான்கு பிள்ளையார்களைச் அமைத்து வழிபடுகின்றனர் ஜப்பானியர். திக்குகளைக் காக்கும் கடவுள் கணபதி என்கின்றனர்.

மேற்கு திசை காப்பவராக வஜ்ரவாசின் என்று பெயர் தந்து அக்கணபதி கையில் வில்லையும் அம்பையும் கொடுத்தனர் ஜப்பானியர் கிழக்கைக்காக்க 'வஜ்ரசின்ன' எனும் நாமம் சூட்டி, அக்கணபதி கையில் குடையைத் தந்தனர் ஜப்

பானியர்; தெற்கு திக்கைக் காப்பவராக 'வஜ்ரபாக்சன' எனும் குறியிட்டு அக்கணபதி கையில் மாலையைத்தந்தனர் ஜப்பானியர். வடக்கு திசையைக் காக்கும் கணபதியாக அவர் கையில் கத்தியும் கேடயமும் தந்துள்ளனர் ஜப்பானிய நாட்டு மக்கள். கொடிய பைசாசங்களைக் கொல்லும் வல்லமையுடையவர் வல்லப கணேசர் என்றும் அவர் எந்த வடிவமும் எடுக்கக்கூடிய வல்லமை பெற்றவர் என்றும் கருதுகின்றனர் ஜப்பானியர். சீனத்தில் வழிபடும் வஜ்ரதாதுவுக்கும் கர்ப்பதாதுக்கும் ஜப்பானில் இடமில்லை. வடதிசை காக்கும் கணபதியை 'வஜ்ரமுகா' என ஜப்பான் பாஷையில் வார்த்தையுண்டு. விக்னத்தைப் போக்கடிப்பவரே கணபதி என ஜப்பானியர் நம்பிப்போற்றுகின்றனர். பௌத்த மதத்தையே காத்தவர் கணபதி எனக் காட்ட ஜப்பானியர் பல கதைகளைத் தம் தாய் மொழியில் இயற்றியுள்ளனர். ஜப்பானில் காணும் கணபதி யானைமுகத்தோடு ஒரு மனுஷனைப் போலவே இருக்கின்றது. மூன்றுமுக விநாயகரை ஜப்பானியர் ''காக்கு-ஜென்சோ'' என்று அழைக்கின்றனர். ஒவ்வொரு தலையிலும் மூன்று கண்கள் இருக்கின்றன' அவரது நான்கு கரங்களில் கத்தி, முள்ளங்கி (தந்தத்தை குறிக்கும்) மோதகம், செங்கோல் உண்டு. மலைமேல் உட்கார்ந்துள்ளதை போல் பீடம் இவருக்குண்டு. ஆன்மாவும் உலகமும் கூடுவதைக் காட்டவே 'வைரக்கோணம்' என்பர். இச்சக்தியையே பதினொரு தலையுள்ள அவலோகிடீஸ்வரி என்பது (மேலும் அறிய போதியசத்வம் நான்காம் அத்தியாயம் பார்க்க) ஜப்பானில் நான்கு கைகளும் நான்கு கால்களும் உள்ள கணேசரை இரகசியமாக ஜப்பானியரில் சிலர் வழிபடுகின்றனர். இவருக்குப் பெயர் 'காங்கி-டென்' என்பதே. ஆறு கால்களுடனும் கணபதி இருக்கிறார். அர்த்தநாரி வடிவத்திலும் கணபதி வடிவம் ஜப்பானில் இருக்கிறது. உலகெலாமுணர்ந்து ஓதற்கரிய ஒருவனும் பிள்ளையாரை இந்தியர் தனிப்பேறு என்றல்லவோ மதிக்கவேண்டும்; தினமும் வழிபட வேண்டும் வாழ்வு பெருக!

அட்டைப்படம் :

சக்தி வழிபாடே நவராத்ரி. அதர்மத்தை அகற்றவே சக்தி உத்வேகத்துடன் தோன்றுகிறாள். இப்பராசக்தியைக் குறித்து பாரதியார் பாடிய பல பாட்டுகளில் இதுவும் ஒன்று :

உஜ்ஜயினி நித்ய கல்யாணீ
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
உஜ்ஜிய காரண சங்கர தேவி
உமா சரசுவதி ஸ்ரீமதாசா
வாழி புனைந்து மகேசுவர தேவன்
தோழி பதங்கள் பணிந்து துணிந்தனம்
சத்ய யுகத்தை அகத்தி லிருத்தி
திறத்தை நமக்கருளிச் செய்யும் உத்தமி

—பாரதியார்.

படம் உதவியவர் : விஜயா புரொடெக்ஷன்ஸ்.

எழுத்தாளர் தெய்வம்

ஹேரம்பா

பிள்ளையார் சுழிக்கு மதிப்பு வைத்து எழுதும் எழுத்தாளர்களின் இஷ்ட தெய்வம் துங்கக்கரி முகத்துத் தூமணியான விநாயகன்.

எழுத்தாளர்களுக்குரிய தெய்வமென கணேசரைப் போற்றுவதன் காரணம் என்ன ?

எழுத்தையே தொழிலாகக் கொண்டு, தான் சிருஷ்டித்த ஜீவன்களின் கபாலத்தில் அவற்றின் தலையெழுத்தை எழுதிவரும் நான்முகனை எழுத்தாளர் தெய்வமாகக் குறிப்பிட இயலவில்லை. ஏனெனில் நான்முகனின் பிரம்ம'லிபியைப் படிக்க அவன் ஒருவனால் தான் இயலும்.

பின் ஏகதந்தரான கணேசர் எப்படி எழுத்தாளரானார் ?

கணேசர் ஏகதந்தராக (ஒற்றைக்கொம்பு) மாறியதன் காரணமே அவரும் எழுத்தாணி பிடித்து எழுத்தோலையில் எழுத முன் வந்ததன் பலன் தான் !

வியாச மகரிஷி பாரதத்தை எழுத்துருவில் கொண்டு வர முயன்றார். அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதில் கஜானனர் பெரும் பங்கு கொண்டார்.

வியாசர் பாரதக் கதையைச் சொல்லிவர, லம்போதரர் அதை ஓலையில் எழுத முனைந்தார். எழுத்தாணி கூர் மழுங்கி ஓலையில் எழுத மறுத்த போது, கருமமே கண்ணாயிருந்த விக்னராஜர் தன் இரு தந்தங்களில் ஒன்றை முறித்து. தன் எழுத்தைத் தொடர்ந்து எழுதினார்.

எழுத்தின் சிறப்பை யுணர்ந்து அதன் பொருட்டு ஒரு தந்தத்தையும் தியாகம் செய்து, தான் மேற்கொண்ட கடமையைப் பூர்த்தி செய்தார் மஹோதரர்.

எழுத்திற்கு மதிப்பு வைத்தவர் வக்ரதுண்டர். எழுத்தாணி பிடித்து எழுதிய தெய்வம் இவரே !

அதன் பொருட்டே எழுத்தைப் பிழைப்பாகக் கொண்ட எழுத்தாளவர்க்கம், கணேசரையே தங்கள் இஷ்ட தெய்வமாக எண்ணி, 'பிள்ளையார் சுழி'யிட்ட பின்பே பேனாவை ஓட்டுவது என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருவதில் விந்தையென்ன ?

> '' பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
> நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ் செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே - நீ எனக்கு
> சங்கத் தமிழ் மூன்றுந்தா ''.........

என்று தமிழ் மூதாட்டி ஔவை, மனமுருகி வேண்டும் தெய்வம்—'எழுத்தாளர் தெய்வம் ஹேரம்பா.' ★

ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17. ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை–2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

அர்த்தம் அனர்த்தமாயிற்று!

நான் பெரும்பாலும் இரவில் தான் எனக்கு வரும் கடிதங்களுக்கு பதில் எழுதுவது வழக்கம். அதே போல அன்றும் இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு, கடிதங்களைப்படித்து அவைகளுக்கு பதிலெழுத ஆரம்பித்தேன். மணி 1! தூக்கம் கண்ணிமைகளை அழுத்தியது! ஆனாலும் கடைசி கடிதத்திற்கும் பதிலெழுதி விட வேண்டும் என்ற உறுதி இருக்கவே கொட்டாவி விட்டபடி கடிதம் எழுத ஆரம்பித்தேன்.

ஒவ்வொருவருக்கும் எழுதும் கடிதங்களுக்கு நகல் வைத்திருப்பது என்ற கெட்ட வழக்கம் எப்படியோ எனக்கு ஏற்பட்டு விட்டது! (கதை எழுதுவதாலோ என்னவோ?) அந்தக் கடைசி கடிதத்திற்கு நகல் எடுத்த பிறகே கடிதத்தை எழுதினேன். பிறகு படுக்கச் சென்று விட்டேன்.

ஒருவாரம் கழிந்து விட்டது. என் நண்பன் நான் எழுதிய கடிதத்திற்கு பதிலும் போட்டு விட்டான். கடிதத்தைப் படித்த நான் உண்மையிலேயே திடுக்கிட்டு விட்டேன். அந்த வரி வேறொன்றுமில்லை; இது தான்!

"......, நிற்க முடிந்தால் இரண்டு பிரதிகள் அனுப்பவும்' என்று எழுதி இருக்கிறாயே, அப்படியானால் உட்கார முடிந்தால் எத்தனை பிரதிகள் அனுப்ப வேண்டும்"......

கடிதத்தின் நகலைத்தேடி எடுத்தேன். படித்த நான், வாய்விட்டு சிரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வேறு ஒன்றுமில்லை! ஒரு சிறு காமா (,) செய்த வினைதான் மேற்கண்டது! அதாவது என் நண்பன் ஒரு தொடர்கதை எழுதி இருந்தான். அதை அனுப்பும்படி எழுதி, கடைசி குறிப்பாக,

'நிற்க, முடிந்தால் இரண்டு பிரதிகளாக அனுப்பவும்' என்று எழுதி இருந்தேன். ஆனால் தூக்கக் கலக்கத்திலே 'நிற்க' என்ற பதத்திற்குப் பக்கத்திலே காமா (,) போட மறந்து விட்டேன்!

சேர்த்துப்படித்த அவன் மேற்கண்டபடி அர்த்தம் செய்து கொண்டதில் தவறில்லையே!

மண. அரங்கசாமி,
செய்யார்.

பைத்தியம் யார்?

என்னுடைய தந்தை நன்றாக கைரேகை பார்ப்பார். இருந்த போதிலும் விட்டில் நான் என் சகோதரிகள் எல்லோரும் எவ்வளவு தடவைகள் கேட்டும் எங்களுக்கு ரேகை பார்க்க மறுத்துவிட்டார். ஒரு ஞாயிற்றுக்கிழமை என் தந்தை எங்களுடன் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார். இதுதான் நல்ல சமயமென்று கையை நீட்டி ரேகை பார்க்கும்படி சொன்னேன். என் தந்தையும் சிறிதுநேரம் பார்த்துவிட்டு, "உனக்கு முப்பது வயதுக்குமேல் பைத்தியம் பிடிக்

கும்'' என்று சொன்னார். எனக்கு ஏன் கேட்டோம் என்று ஆகி விட்டது. சிறிது நேரம் சென்றபின் என் தந்தையின் நண்பர் ஒருவர் வந்தார். அவருக்கும் ரேகை சாஸ்திரம் தெரியும். நான் அவரிடம் ''ஒரு ஜோஸ்யன் எனக்குப் பைத்தியம் பிடிக்கும் என்றுசொன்னான். நீங்களும் பாருங்கள்'' என்றேன். அவரும் பார்த்துவிட்டு ''ஹூம்! அதிர்ஷ்டரேகை கையில் ஓடுகிறது உனக்கு! எந்த மடையன் பைத்தியம் பிடிக்கும் மென்று சொன்னான்? அவன்தான் பைத்தியக்காரன்!'' என்று சாவதானமாகச் சொன்னார். அடுத்த நிமிஷம் நான் என் அப்பாவின் முகத்தைப் பார்த்தேன். அவர் தன் சிரிப்பை அடக்கிக்கொள்ள படாதபாடு படுவதைக் கண்டு நான் பலமாகச் சிரித்துவிட்டேன்.

வி. சந்தானம்,
ஹைதராபாத்,

தவறுக்கு தண்டனை !

நான் நான்காம் பாரம் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் தமிழாசிரியர் மிகவும் முன் கோபக்காரர். அற்ப காரியங்களுக்கெல்லாம் அவருக்கு கோபம் பிரமாதமாக வரும்.

ஒருநாள் வகுப்பில்தமிழ்ப் புத்தகமில்லாமல் வேறொரு பாட புஸ்தகம் என்னிடம் இருந்ததைக்கண்டு, கோபம் கொண்டு, அந்தப் புஸ்தகத்தை யெடுத்து மாடி யறையின் ஜன்னல் வழியாகக் கீழே வீசி விட்டார்.

உடனே நான் எழுந்து, ''சார். இந்த மாதச் சம்பளத்தொகை முழுவதையும் அந்த புத்தகத்தில்தான் வைத்திருந்தேன்'' என்று திகைப்புடன் சொன்னேன்.

உடனே அவர் வகுப்புத் தலைவனிடம், புத்தகத்தையும், பணத்தையும் ஓடிச்சென்று தேடியெடுத்து வருமாறு சொல்லி யனுப்பினார்.

வகுப்புத் தலைவன் எங்கள் நெருங்கிய நண்பனாதலால் என் பொருட்டு வெளியே ஓடினான். சார், புத்தகத்தையும் காணவில்லை. பணத்தையும் காணவில்லை. நான் போகும் பொழுது சில பிச்சைக்காரப் பசங்கள் வெகு தூரத்தில் ஓடிப்போய் கொண்டிருந்ததைக் கண்டேன் அவர்கள் எடுத்திருக்கலாம்'' என்று சொன்னான். உண்மையில் அப்பொழுது புத்தகம் அவன் பனியனுக்குள்ளே பதுங்கியிருந்ததை நான் கண்டு கொண்டேன். இதுகேட்டதும் ஆசிரியரின் முகம் வெகுவாக மாறியது. ஆனாலும் அவர் வாய் திறந்து ஒன்றுமே சொல்லவில்லை.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு தலைமையாசிரியர் என் வகுப்பறைக்கு வந்து, ''ராஜப்பா, நீயேன் ஜனவரி மாதத்துச் சம்பளம் கட்டவில்லை?'' என்று கேட்டார்.

''சார். வீட்டில் சம்பளம் கட்டச் சொல்லி கொடுத்த பணத்தை இங்கு ஒரு புத்தகத்தினுள்ளே வைத்து, ஜாக்கிரதையாக கண்ணெதிரில் வைத்திருந்தேன். அதைத் தமிழாசிரியர் தன் கோபத்தில் புத்தகத்தோடு சேர்த்து கீழே வீசியெறிந்து விட்டார். பிறகு கிடைக்கவேயில்லை. நான் நடந்ததை வீட்டில் போய் சொன்ன பொழுது, மறுபடியும் பணம் தர வீட்டில் மறுத்து விட்டார்கள்'' என்று கூறிக் கண்களைத் துடைத்தேன்,

அதுகேட்ட தலைமை யாசிரியர், தமிழாசிரியரைக் கண்டித்து, எனக்கு பணத்தைக் கொடுக்குமாறு சொல்லிப் போய்விட்டார். அதன்படியே அவரும் அசடு வழிய அழாத குறையாக ரூபாயை எனக்குத் தர முன் வந்தார். ஆனால், நான் பொய் சொல்ல விரும்பாமல், என் பணத்தை நான் அந்தப் புத்தகத்தில் வைக்கவில்லை என்பதைக் கூறி, பத்திரமாக வைத்திருந்த பணத்தை அன்று செலுத்திவிடப் போவதாகவும் சொன்னேன். நான் செலுத்த வேண்டிய அபராதத் தொகையை என்னிடம் கொடுத்து தன் முன் கோபத்திற்கு தான் செலுத்திய அபராதம் என்று வருத்தத்துடன் கூறினார்.

வி. ராஜப்பா,
ஈரோடு.

சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

மர்மம் நிறைந்த மாயவில்லா	1	0	0
சூனியக்காரி	1	0	0
பேய் வீடு	1	8	0
சூறைக்காற்று	1	8	0
மரணயாத்திரை	1	8	0
நீதிமயக்கம்	1	0	0
காதலன் கொலை வழக்கு	1	4	0
மர்மத்தீவு	1	4	0
கல்நெஞ்சன்	1	8	0
மர்மக்கொலை	1	0	0
ரத்தப் பசி	1	4	0
பயங்கர மனிதன்	2	0	0
பறக்கும் தட்டு	2	0	0

மேதாவி எழுதிய துப்பறியும் நாவல்கள்

துப்பறியும் ராஜு	1	0	0
ரகசிய அறை	1	4	0
பச்சை மாளிகை மர்மம்	1	4	0
மாய மனிதர்கள்	1	4	0
சூரக்கோட்டை மர்மம்	1	8	0
மலையாளச்சிட்டு மர்மம்	1	8	0

இளவெனில் எழுதியது

புதுமணத் தம்பதிகளுக்கு	2	4	0

அரு. ராமநாதன் எழுதிய புத்தகங்கள்

கோழிப் பந்தயம்	1	4	0
பழையனூர் நீலி	1	4	0
வேதாளம் சொன்ன கதைகள்	1	4	0

வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்,

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு. சென்னை-2

டிஸம்பர்
வெளியீடு!
பீப்பிள்ஸ் பிலிம்ஸ் அளிக்கும்
அவன் அமரன்
தமிழ்
K.R.ராமசாமி • ராஜசுலோசனா • கண்ணாம்பா
T.S.பாலய்யா • பிரண்ட் ராமசாமி • M.S.திரௌபதி
S.V.சுப்பய்யா மற்றும் பலர்
கதை வசனம்: நாகர்கோயில் நாகராஜன்
டைரக்ஷன்: S.பாலசந்தர்
பீப்பிள்ஸ் பிலிம்ஸ் • சென்னை-17
PSR